விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email: Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆவணி 30 சனிக்கிழமை (15.09.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 270

## வலம்புரிக்கு எதிராக நேற்றும் அஸ்மினின் குழுவினர் ஆர்ப்பாட்டம்




23

## சிங்கள குடியேற்றங்கள் வடக்கில் இடம்பெறவில்லை

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் எந்த ஒரு சிங்களக் குடியேற்றமும் இடம்பெறவில்லை அவ்வாறு கூறப்படும் குற்றச்சாட்டுகள் பொய் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள ஊடகப் பிரதானிகளுடன் நேற்று காலை நடத்திய சந்திப்பில் இந்த விடயத்தை குறிப்பிட்ட அவர், முல்லைத்தீவை பொறுத்தவரை மகாவலி எல் வலயத்தில் 80களில் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் மாத்திரமே வாழ்வதாகவும் வேறெந்த சிங்களக் குடியேற்றமும் அங்கு 23

## யாழ்.பல்கலையில் கைக்குண்டு கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வளாகத்திலிருந்து கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக வளாகத்திலுள்ள சிவன் ஆலயத்தின் புனரமைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்ற நிலை 24

# போர்க் குற்றச்சாட்டுக்களிலிருந்து இராணுவத்தை பாதுகாக்க ஐ.நாவில் கோருவோம்!

## ஊடகப் பிரதானிகளிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



(கொழும்பு) போர்க்குற்றச்சாட்டுகளிலிருந்து இராணுவத்தை மீட்கும் வகையிலான கோரிக்கையை ஐக்கிய நாடுகள் சபையில் முன்வைக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். எதிர்வரும் 25-ம் திகதி இந்த கோரிக்கையை ஐ.நாவில் முன்வைக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (24-ம் பக்கம் பார்க்க...)

## அரசியலமைப்பை சமர்ப்பிப்பது சாத்தியமற்றது!

(கொழும்பு)

வெகுவிரைவில் புதிய அரசியலமைப்பின் வரைபை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக கடந்த பாராளுமன்ற அமர்வில் அரசாங்கத் தரப்பில் கூறப்பட்டது. 24

## பெண் சட்டத்தரணியை யாழ்.நீதிமன்றத்தில் ஒளிப்படம் எடுத்த பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

புத்தரின் உருவம் பொறித்த சேலை அணிந்ததாக வாக்குமூலம் பெறப்பட்ட இளம் பெண் சட்டத்தரணியை, யாழ்ப்பாணம் 24

## ● சுமந்திரனுக்கு எதிராக முல்லைத்தீவில் துண்டுப்பிரசுரம்

(முல்லைத்தீவு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை விமர்சித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 23

## எங்களுக்கு பணம் வேண்டாம் பிள்ளைகளை மீளத்தாருங்கள்

### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கண்ணீருடன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

எங்களுக்கு பணம்வேண்டாம் எமது பிள்ளைகளை மீளத்தாருங்கள் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கண்ணீர் மல்கத் தெரிவித்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு நட்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையிலேயே உறவினர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

கிளிநொச்சி காணாமல் ஆக்கப்பட்ட உறவுக 24

## மீண்டும் குடும்ப ஆட்சியை ஏற்படுத்த மகிந்த முயற்சி

### அமைச்சர் துமிந்த திஸாநாயக்க



(கொழும்பு)

மீண்டும்குடும்ப ஆட்சியை உருவாக்குவதற்கு மகிந்த ராஜபக்ஷ முயற்சிக்கின்றார் என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் துமிந்த திஸாநாயக்க குற்றம்சுமத்தியுள்ளார்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய கேட் 23

## குறுகிய கால புனர்வாழ்வுடன் எம்மை விடுதலை செய்யுங்கள்

### உணவு தவிர்ப்பு போராட்டத்திலுள்ள அரசியல் கைதிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

குறுகிய கால புனர்வாழ்வு அளித்து தம்மை விடுதலை செய்யுமாறு, உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் 8 பேர் தமது விடுதலையை வலியுறுத்தி நேற்றில் இருந்து உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 9 வருடங்களுக்கு மேலாக சிறையில் விளக்க 23

## அறிக்கையை சமர்ப்பிக்குமாறு

### பிரதமர் உத்தரவு



(கொழும்பு)

பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளரும் 23

## நாட்டை பிரித்து தமிழ் மக்களுக்கு சமஷ்டியை வழங்க முடியாது!

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டை பிரித்து தமிழ் மக்களிற்கு சமஷ்டியை வழங்க முடியாது என முன்னாள் ஜனாதிப்தி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் நியுஸ் எக்சிற்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனை தெரிவித்துள்ளார். 24

## இந்திய உயர்ஸ்தானிகருடன் கூட்டமைப்பினர் கலந்துரையாடல்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்திற்கான இரண்டு நாட்கள் விஜயமொன்றை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் தரன்ஜித் சிங் சந்து நேற்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிரதிநிதிகளை சந்தித்து உரையாடினார்.

பாசிக்குடாவிலுள்ள ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற 23

# பசிலையும் கோத்தாவையும் ஜனாதிபதி வேட்பாளராக்க முடியாது-வாசுதேவ

(கொழும்பு)

சமல் ராஜபக்ஷவை எண்ணத்தில் வைத்துக்கொண்டே ஜனாதிபதி வேட்பாளராக தனது சகோதரர் ஒருவர் தேர்தலில் போட்டியிடுவார் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கலாம் என கூட்டு எதிரணியின் உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தனது சகோதரர் ஒருவர் பொதுவேட்பாளராக தெரிவு செய்யப்படலாம் என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவே பொது வேட்பாளராக தெரிவு செய்யப்படலாம் என பரவலாக பேசப்படுகின்றது.

இந்நிலையில் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்து தெரிவித்துள்ள வாசுதேவ நாணயக்கார எம்.பி.,

சமல் ராஜபக்ஷ மாத்திரமே தற்போது அரசியலில் ஈடுபடுகின்றார். சமல் ராஜபக்ஷவின் பெயரை எண்ணத்தில் வைத்துக் கொண்டே அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தனது சகோதரர் ஒருவர் வேட்பாளராக போட்டியிடலாம் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கலாம்.

இதேவேளை பசில் ராஜபக்ஷ மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் தமது அமெரிக்க குடியுரிமையை இரத்து செய்யாமல் அவர்களை பொதுவேட்பாளர்களாக கவனத்தில் கொள்ள முடியாது என்றார். (ம)

# நிபந்தனைகளின்றியே இலங்கைக்கு நிதி வழங்கப்படுகிறது-சீன அரசாங்கம்

(பீஜிங்)

இலங்கைக்கு நிதி வழங்கப்படும் போது எவ்வித நிபந்தனைகளும் விதிக்கப்படுவதில்லை என சீன அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சீன ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றிலேயே அந்நாட்டு வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் ஜெங் சுவாங் இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், சீனா இலங்கைக்கு நிதி உதவிகளை வழங்கும்போது எந்த வித அரசியல் நிபந்தனைகளையும் விதிப்பதில்லை. சீனாவின் புதிய பட்டுப்பாதை திட்டம் பிராந்திய வளர்ச்சிக்கு தொடர்ந்தும் உதவும்.

சீனாவின் புதிய பட்டுப்பாதை திட்டம் இரு நாடுகளிற்கும் மக்களுக்கும் பலன் அளித்துள்ளது.

சீனாவின் கடன்பொறிக்குள் இலங்கை சிக்கவில்லை என சில நாட்களிற்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளதையும அவர் இதன்போது வரவேற்றுள்ளார். (ம)

# கோத்தபாய போட்டியிட்டால் அவரின் கட்டுப்பணத்தை நான் கட்டுவேன்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

மகிந்த குடும்பத்தில் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிடுவதாக இருந்தால், அவருக்கான வேட்பாளர் கட்டுப்பணத்தை நானே கட்டுவேன் என பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ இந்தியாவில் வைத்து தன்னுடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக வருவார் எனத் தெரிவித்திருந்தமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டால், தங்களது கட்சி அவருடன் போட்டியிட தயாரா? என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியதற்கு,

தமது கட்சியின் தலைவர் பொருத்தமான ஒருவரை வேட்பாளராக நிறுத்துவார் என்றிருந்தால், கோத்தபாயவை வெற்றி கொள்வது சிரமமானதல்ல எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம)

# நாட்டின் பாதுகாப்பு எவ்விதத்திலும் பலவீனமடையவில்லை-ஜனாதிபதி

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பு எவ்விதத்திலும் வீழ்ச்சியடையவில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்று வரும் ஊடக பிரதானிகளுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வரவு செலவு திட்டத்திலும் நாட்டின் பாதுகாப்பிற்கென அதிகமான தொகை ஒதுக்கப்பட்டே இருந்தது. இந்நிலையில் நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் ஒருசிலர் முன் வைக்கும் கருத்துக்களை நான் நிராகரிக்கின்றேன்.

கடந்தவரவுசெலவு திட்டத்தில் 200 பில்லியனுக்கும் அதிகமான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், பாதுகாப்பு செலவு இன்னமும் அதிகமாகக் காணப்படுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் பிரதமர் நாட்டில் இல்லாத நிலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட அமைச்சரவை கூட்டத்தை தொடர்ந்து, ஊடக பிரதானிகளுடனான சந்திப்பிற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த அழைப்பிற்கு ஏற்ப, ஜனாதிபதி மாளிகையில் நேற்று காலை ஜனாதிபதி, ஊடகப் பிரதானிகளைச் சந்தித்தார். இந்த சந்திப்பில், நாட்டின் பாதுகாப்பு குறித்து கருத்து தெரிவித்துள்ளார். (ம)

## மரண அறிவித்தல்

### அமரர் செல்லத்துரை ரவீந்திரன்

(முன்னாள் றியோ ஐஸ்கிறீம் நிறுவன ஊழியர்)



புளியங்கூடல் தெற்கைப் பிறப்பிடமாகவும் ஸ்ரான்லிக் கொலிஜ் லேன், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை ரவீந்திரன் அவர்கள் 14.09.2018 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை செல்லத்துரை-செல்லத்துரை திலகேஸ்வரியின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகசபை-திருக்கேதிஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், வாசுகி அவர்களின் அன்புக் கணவனும், மதுரன், வாகீசன் ஆகியோரின் தந்தையாரும், ரசிகரன், ரவிச்சந்திரன், சாரதா, ராகினி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், வாகீஸ்வரி, வசந்தி, வாசுதேவன், வாசவன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.09.2018) ஞாயிற்றுக்கிழமை ஸ்ரான்லிக் கொலிஜ் லேனில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சேத்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரான்லி கொலிஜ் லேன், அரியாலை

தகவல்:குடும்பத்தினர்
தொ.பே.இல:0777740043 (மதுரன்)

(5670)

# கிளிநொச்சிப் பகுதியில் பூசகர் ஒருவரால் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளான சிறுவன்

(கண்டாவளை)

கிளிநொச்சி கோரக்கன் கட்டுப்பகுதியில் உள்ள ஆலயத்திற்கு பூசை செய்வதற்கு வந்த ஆலய பூசகர் ஒருவர் சிறுவன் ஒருவனை கிளிநொச்சிக்கு அழைத்துச் சென்று அறையொன்றில் நாள் முழுவதும் பூட்டி வைத்து பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியதால் பாதிக்கப்பட்ட சிறுவன் நேற்று கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்திற்குட்பட்ட கோரக்கன்கட்டுப்பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றுக்கு பூசைக்காக வந்த பூசகர் அப்பகுதியில் உள்ள சிறுவன் ஒருவனை தன்னுடைய மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்று கிளிநொச்சியில் உள்ள வீடொன்றின் அறையினுள் நாள் முழுவதும் பூட்டிவைத்து பாலியல் துன்புறுத் தல்களுக்கு உள்ளாக்கிய தன் பின்னர் குறித்த சிறுவனை வேறொருவருடன் அவரது சொந்த இடத்திற்கு அனுப்பி வைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த சிறுவன் நடந்த சம்பவத்தை அயலவர்களுக்கு தெரியப்படுத்தியதையடுத்து, இச்சம்பவம் தொடர்பில் கண்டாவளை பிரதேச சிறுவர் நன்னடத்தை அதிகாரிக்கு சம்பவம் தொடர்பில் அறிவிக்கப்பட்டதையடுத்து பாதிக்கப்பட்ட சிறுவன் நேற்று கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றான்.

இதுதொடர்பான விசாரணைகளை மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர். (ம-315)

# திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

இந்தியா திருச்சி திருவாசக முற்றோதல் குழு யாழ்ப்பாணம் நாவற்குழி திருவாசக அரண்மனைக்கு வருகை தந்து இன்று சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை திருவாசக முற்றோதலில் ஈடுபடவுள்ளது.

அடியவர்கள் இந்த திருவாசக முற்றோதலில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (ம)


## வேலைவாய்ப்பு

AD சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
0775002840

(5679)


## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 04 - 04 - 1945 |  | 10 - 09 - 2018 |

### திருமதி கோகிலாம்பாள் பூபாலசிங்கம்

யாழ்ப்பாணம் வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், கொட்டடி, கொக்குவில் கிழக்கு, லண்டன் Wembley ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கோகிலாம்பாள் பூபாலசிங்கம் கடந்த (10.09.2018) திங்கட்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை பாக்கியலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், செல்லத்துரை அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகளும் பூபாலசிங்கத்தின் அன்பு மனைவியும் வாசுகி, பிரபாகரன் (பிரபா), கிருபாகரன் (கிருபா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாலசுந்தரம், பாலசுப்ரமணியம், பாலகிருஷ்ணன், பாலகோபாலன், கனகேஸ்வரி, யோகம், ரதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெகதீஷ்வரன் (ஜெகன்), ராதிகா, சோபிகா ஆகியோரின் அன்பு மாமியாரும் காயத்திரி, கிருத்திகா, ஜெனார்த்தனன், சரண்யா, சரண், யனுசா, யதிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.09.2018) ஞாயிற்றுக்கிழமை **32 Charterhouse Avenue, Wembley, Middlesex, HA0 3DB, UK** எனும் இடத்தில் அஞ்சலிக்காக மு.ப. 7.30 - மு.ப. 8.30 மணிவரை வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் அன்றைய தினம் மு.ப. 10.00 - ந.ப. 12.00 மணிவரை **(North Chapel) Hendon Cemetery & Crematorium, Holders Hill Road, London, NW7 1NB, UK** எனும் இடத்தில் நடைபெற்று **Hendon Cemetery & Crematorium, Holders Hill Road, London, NW7 1NB, UK** எனும் இடத்தில் ந.ப. 12.00 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பிரபா - பிரித்தானியா: 00447946405408**
**கிருபா - பிரித்தானியா: 00447904360193**
**ஜெகன் - பிரித்தானியா: 00447538902634**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் புதிய யோசனை முன்வைக்கப்படும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

யுத்தம் நிறைவடைந்த பின்னர் நிலவுகின்ற பிரச்சினைகளை சுமுகமாக தீர்ப்பதற்கான பல்வேறு தீர்வுகள் அடங்கிய யோசனை, தம்மால் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் முன்வைக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஊடகப் பிரதானிகளுடன் நேற்றுக் காலை இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் 25 ஆம் திகதி இந்த யோசனை ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் முன்வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் தேசிய பாதுகாப்பில் எந்தவித பலவீனமும் ஏற்படவில்லை என ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

எரிபொருள் விலைச் சூத்திரம் தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எரிபொருள் விலை சூத்திரத்தை தொடர்ந்தும் முன்னெடுப்பதா? அல்லது சீர்திருத்துவதா? என்பன தொடர்பில் தீர்வு ஒன்று எட்டப்படும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, தம்மை கொலை செய்ய முயற்சிப்பதாகக் கூறப்படுகின்றமை தொடர்பில் விசேட பொலிஸ் குழுவொன்று விசாரணை நடத்தி வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதியைக் கொல்ல சதி நாலக சில்வாவின் கருத்து குறித்து உடன் விசாரணைக்கு பூஜித உத்தரவு



(கொழும்பு)

ஜனாதிபதிக்கு ஆபத்தை ஏற்படுத்தும் விடயத்தில் பொலிஸ் உயரதிகாரிகள் பலர் சம்பந்தப்பட்டுள்ளமை தொடர்பில், பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில், உடனடி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா நேற்று முன்தினம் கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, ஜனாதிபதியைக் கொலை செய்ய சில சதித் திட்டங்கள் தீட்டப்படுவதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனாதிபதியை கிழக்கில் வைத்து கொலை செய்ய சதித்திட்டம்

## பொலிஸார் உடந்தை–மகிந்தானந்த

(கொழும்பு)

ஜனாதிபதியையும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும் கிழக்கு மாகாணத்தில் வைத்து கொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த சதித் திட்டத்தை பொலிஸ் தரப்பே மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரித்தார். நாட்டின் ஜனாதிபதிக்கும் உயர் அதிகாரிகளுக்குமே பொலிஸாரினால் ஆபத்து எனத்தெரியவரும் போது சாதாரண பொதுமக்களின் ,நிலைமை என்னவெனவும் அவர் கேள்வி எழுப்பினார். (இ-7)

# கடன்பொறி குற்றச்சாட்டிலிருந்து சீனாவை விடுவித்தார் ரணில்

(பீஜிங்)

சீனாவின் கடன் பொறிக்குள் இலங்கை சிக்கிக்கொள்ளவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள கருத்தை சீனா வரவேற்றுள்ளது.

பீஜிங்கில் நேற்று முன்தினம் நடத்திய நாளாந்த செய்தியாளர் சந்திப்பில் இது பற்றிக் கருத்து வெளியிட்ட சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர், ஜெங் சுவாங்,

"பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்து வரவேற்புக்குரியது.

இலங்கையை கடன் பொறியில் சிக்க வைத்து, அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா பெற்று விட்டது என்ற 'பெயருக்கு' இது ஒரு வலுவான மறுப்பாகும்.

இலங்கைக்கான சீனாவின் உதவி, ஒருபோதும் அரசியல் சூழ்நிலைகளின் அடிப்படையிலானது அல்ல. இலங்கைக்கான நிதி மற்றும் முதலீட்டில் எந்த வொரு அரசியல் சுய ஆர்வத்தையும் சீனா கொண்டிருக்கவில்லை.

அணை மற்றும் பாதை வரம்பின் கீழான, சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பு, தனியே இரண்டு நாடுகளின் மக்களுக்கும் நன்மையளிப்பது மாத்திரமல்ல,

பிராந்தியப் பொருளாதார அபிவிருத்தி மற்றும் இணைந்த செயற்பாட்டுக்கும் பங்களிப்பதுமாகும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)




அனைத்து பல்கலைக்கழக தமிழ் மாணவர்களையும் ஒன்றிணைத்து
யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நடத்தும்

"மாபெரும் தமிழ் விழா 2018"

இடம் :- யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானம்

தமிழமுதம் எனும் தொனிப்பொருளில் செப்டெம்பர் 17இல்
"நாமும் நமக்கென்றோர் நலியா கலையுடையோம்"
எனும் கருப் பொருளில்!...

பிரதம விருந்தினராக புகழ்பெற்ற இந்திய **ஓவியர் புகழேந்தி ஐயா** அவர்கள் பங்கு கொள்வதுடன் இலங்கையில் அழிந்து போகும் தமிழரின் கலைகளை மீள் உருவாக்கம் செய்யும் வகையில் தமிழரின் பாரம்பரிய கலைகளை உள்ளடக்கிய மாபெரும் தமிழ்விழா இலங்கையில் முதல் முறையாக **இந்தியாவின் செம்மொழி மாநாட்டிற்கு** இணையான பிரமாண்டமான மேடையமைப்பில்

**காலை 9 மணி முதல் நள்ளிரவு 11 மணிவரை கலைகளால் ஒன்றிணைவோம்**

அனுமதி இலவசம்

இலங்கையின் அனைத்து பகுதிகளிலிருந்தும் மட்டக்களப்பு, கண்டி, நுவரெலியா, யாழ்ப்பாணம் போன்ற அனைத்து இடங்களையும் பிரதிபலிக்கும் கலை நிகழ்ச்சிகள் அனைத்தும் இடம் பெறவுள்ளன.

ஊடக அனுசரணை
வலம்புரி

அனைவரையும் அன்பாக அழைக்கும்
பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

# இதுவரை சம்பியன்கள்

ஆசிய கிண்ண வரலாற்றில் இதுவரை இந்திய அணி அதிகபட்சமாக 6 முறை (1984, 1988, 1990-91, 1995, 2010, 2016) சம்பியன் பட்டம் வென்றுள்ளது. இலங்கை 5 (1986, 1997, 2004, 2008, 2014), பாகிஸ்தான் 2 (2000, 2012) முறை கிண்ணம் வென்றுள்ளன.

**வெற்றி தலைவர்**

அதிக போட்டிகளுக்கு தலைவராக இருந்து அதிக வெற்றி தேடிக் கொடுத்த தலைவர்கள் பட்டியலில் இந்தியாவின் தோனி, இலங்கையின் ரணதுங்க முன்னிலை வகிக்கின்றனர். இவர்கள் இருவரும் தலா 13 போட்டிகளுக்கு தலைவர்களாக செயற்பட்டு, தலா 9ல் வெற்றி தேடிக் கொடுத்துள்ளனர். 4 போட்டிகளில் தோல்வியை சந்தித்தனர்.

**385**

கடந்த 2010ல் தம்புள்ளயில் நடந்த பங்களாதேசுக்கு எதிரான போட்டியில் பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 385 ஓட்டங்கள் குவித்தது. இது, ஆசிய கிண்ண வரலாற்றில் பதிவான அதிகபட்ச ஓட்டஎண்ணிக்கையாக உள்ளது. அடுத்த இரண்டு இடங்களில் இந்தியா (374 ரன், எதிர் ஹொங்கொங், 2008, இடம் கராச்சி), இலங்கை (357 ஓட்., எதிர் பங்களாதேஷ், 2008, இடம் லாகூர்) அணிகள் உள்ளன.

**87**

கடந்த 2000ஆம் ஆண்டு டாக்காவில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் பங்களாதேஷ் அணி 87 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதன்மூலம் ஆசிய கிண்ண அரங்கில் மிகக் குறைந்த ஓட்டஎண்ணிக்கையைப் பெற்ற அணி என்ற மோசமான சாதனை படைத்தது.

இப்பட்டியலில் அடுத்த இரண்டு இடங்களில் பங்களாதேஷ் (94 ஓட்., எதிர்: பாகிஸ்தான், 1986, இடம்: மொராதுவா), இலங்கை (96 ஓட்., எதிர்: இந்தியா, 1984, இடம் சார்ஜா) அணிகள் உள்ளன.

◆ இத்தொடரில் இந்திய அணியின் மிகக் குறைந்த ஓட்டஎண்ணிக்கையாக 169 ஓட்டங்கள் (எதிர் பாகிஸ்தான், 1995, இடம் சார்ஜா) உள்ளது.

**183**

ஒரு இன்னிங்சில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் பட்டியலில் இந்தியாவின் விராத் ஹோலி முன்னிலை வகிக்கிறார். இவர், 2012ல் டாக்காவில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் 148 பந்துகளில் 22 பவுண்டரி, ஒரு சிக்சர் உட்பட 183 ஓட்டங்கள் விளாசினார்.

அடுத்த இரண்டு இடங்களில் முறையே பாகிஸ்தானின் யூனிஸ் கான் (144 ஓட்., எதிர் ஹொங்கொங், 2004, இடம்: கொழும்பு), சோயிப் மலிக் (143 ஓட்., எதிர் இந்தியா, 2004, இடம் கொழும்பு) ஆகியோர் உள்ளனர்.

**6**

அதிக சதமடித்த வீரர்கள் பட்டியலில் இலங்கையின் ஜெயசூர்ய முன்னிலை வகிக்கிறார். இவர், 25 போட்டியில் 6 சதமடித்துள்ளார். இவரை அடுத்து இலங்கையின் சங்கக்கார (4 சதம்), இந்தியாவின் விராத் ஹோலி (3), பாகிஸதானின் சோயிப் மலிக் (3) ஆகியோர் உள்ளனர்.

**8**

அதிக அரைசதமடித்த வீரர்கள் வரிசையில் இலங்கையின் சங்கக்கரா முதலிடத்தில் உள்ளார். இவர், 24 போட்டியில் 8 அரைசதமடித்துள்ளார். இவரை அடுத்து இந்தியாவின் சச்சின், இலங்கையின் மஹேல ஜெயவர்தன தலா 7 அரைச்சதமடித்துள்ளனர்.

**378**

ஒரு சீசனில் அதிக ஓட்., எடுத்த வீரர்கள் பட்டியலில் இலங்கையின் ஜெயசூர்ய முதலிடத்தில் உள்ளார். இவர், கடந்த 2008ல் பாகிஸ்தானில் நடந்த தொடரில் 5 போட்டிகளில், 2 சதம், ஒரு அரைச்சதம் உட்பட 378 ஓட்டங்கள் குவித்தார். இவரை அடுத்து இந்தியாவின் ரெய்னா (372 ஓட்., 6 போட்டி, 2008), ஹோலி (357 ஓட்., 3 போட்டி, 2012), சேவாக் (348 ஓட்., 5 போட்டி, 2008) ஆகியோர் உள்ளனர்.

# அசத்துமா ஆசியாவில் இலங்கை



மத்யூஸ்

## ஆசிய கிண்ணத் தொடர் இன்று ஆரம்பம்




வெற்றியாளருக்கு வழங்கப்படும் கிண்ணத்துடன் ஆறு நாட்டு அணித் தலைவர்கள்

கிரிக்கெட் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் இன்று கோலாகலமாக ஆரம்பமாகிறது.

இதில், மத்யூஸ் தலைமையிலான இலங்கை அணி மீண்டுமொரு முறை சம்பியன் கிண்ணம் வெல்ல காத்திருக்கிறது.

ஆசிய கிரிக்கெட் கவுன்சில் சார்பில் ஆசிய கிண்ண தொடர் நடத்தப்படுகிறது.

இதன் 14ஆவது அத்தியாயம் இன்று முதல் வரும் 28ஆம் திகதி வரை ஐக்கிய அரபு எமிரேட்ஷில் நடக்கிறது.

> குழு ஏ
> இந்தியா,
> ஹொங்கொங்,
> பாகிஸ்தான்

ஒவ்வொரு அணிகளும் மற்றைய அணியுடன் தலா ஒரு முறை மோதும். முடிவில், இரு பிரிவிலும் புள்ளிப் பட்டியலில் முதலிரண்டு இடம் பிடிக்கும் அணிகள் 'சுப்பர் 4' சுற்றுக்கு முன்னேறும்.

இத்தொடரில் அதிக முறை (6) கிண்ணம் வென்ற அணியாக இந்தியா வலம் வருகிறது. அணித்தலைவர்ஹோலிக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளதால், ரோகித் அணியை வழிநடத்துகிறார்.

இவருக்கு பெரிய அணிகளுக்கு எதிராக வழிநடத்திய அனுபவம் 'இல்லை. கடந்த மார்ச்சில் இலங்கையில் நடந்த நிடாஷ் டிரொபியில் (20 ஓவர்) கிண்ணம் வென்று கொடுத்தது - நம்பிக்கை அளிக்கிறது. ஐ.பி.எல்., தொடரில்மும்பை அணிக்கும் பட்டம் வென்றும் கொடுத்துள்ளார்.

**சோதிக்கும் தவான்**

சமீபத்திய இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் ரோகித் சதம் கடந்து அசத்தினார். மற்றொரு ஆரம்ப வீரர் ஷிகர் தவான்தான் சோதிக்கிறார்.

கடந்த 10 சர்வதேச போட்டிகளில் (மூன்றுவிதமான) ஒன்றில் கூட அரைச்சதம் அடிக்கவில்லை. எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் ஓட்டம் சேர்க்கும் ஹோலி இல்லாததால், மூன்றாவது இடத்தில் ராயுடு களமிறங்க வாய்ப்பு அதிகம். ஓவல் டெஸ்டில் சதம் கடந்த லோகேஷ் ராகுல் ஒரு நாள் அரங்கிலும் திறமை நிரூபிக்க வேண்டியது கட்டாயம்.

**தோனி முதல் முறை**

ஜாதவ், மணிஷ் பாண்டே இருவரில் யாராவது ஒருவருக்கு மட்டுமே வாய்ப்பு கிடைக்கலாம். 'சகலதுறை வீரர்' பாண்ட்யா எழுச்சி பெற்றால் நல்லது.

ஆசிய கிண்ணத்தில் முதல் முறையாக தலைமைத்துவ பொறுப்பு இல்லாமல் இறங்குகிறார் தோனி. அனுபவ வீரரான இவர் இருப்பதால், 'களத் தடுப்பு' வியூகம் ரோகித்திற்கு எளிதாகிவிடும்.

'யோர்க்கர்' பும்ராவுடன் புவனேஷ்வர் கைகோர்க்கிறார். சுழல்பந்தில் அஷ்வின், ஜடேஜா ஓரங்கட்டப்பட்டதால், குல்தீப் - சகால் கூட்டணி இணைந்தது. இவர்களின் மந்திர பந்துவீச்சு எடுபட்டால் நடப்பு சம்பியன் அந்தஸ்தை தக்க வைக்கலாம்.

**இரண்டு கிண்ணம்**

பாகிஸ்தான் அணி இரண்டு முறை கிண்ணம் வென்றுள்ளது. பகர் ஜமான், பாபர் அசாம் என மிரட்டல் துடுப்பாட்ட வீரர்கள் இருக்கின்றனர்.

அணித் தலைவர் சர்பராஸ், இமாம் உல் ஹக் என துடுப்பாட்ட வரிசையும் சற்று அச்சுறுத்தலாகவே காணப்படுகிறது.

அணியின் பலமே வேகப் பந்துவீச்சுதான். துல்லிய தாக்குதலில் வல்லவர்களான அமிர், ஹசன் அலியை சமாளிப்பது சற்று கடினம்தான். சொகைப் மலிக்கின் அனுபவமும் கைகொடுக்கலாம்.

> குழு ஏ
> இந்தியா,
> ஹொங்கொங்,
> பாகிஸ்தான்

'சுழலில்' அசத்தி வரும் ரஷித் அடங்கிய ஆப்கானிஸ்தான் மற்றும் ஹொங்கொங் அணிகள் போட்டிகளை விறுவிறுப்பாக்கலாம்.

**பாக்., எதிர்பார்ப்பு**

'ஏ' பிரிவில் இடம்பிடித்துள்ள ஹொங்கொங் கத்துக்குட்டி என்பதால், மற்றைய இரு அணிகளான இந்தியா - பாகிஸ்தான் மோதலை லீக் சுற்று (செப்.19), 'சுப்பர் 4'(ஒரே பிரிவில் முதலிரண்டு இடம், செப்.23) என இரண்டு முறை காணலாம். இறுதியில் மோதும் வாய்ப்பும் உள்ளது.

# இலங்கை - பங்களாதேஷ் இன்று முதல் மோதல்

டுபாயில் நடக்கவுள்ள இன்றைய முதல் லீக் போட்டியில் பங்களாதேஷ், இலங்கை அணிகள் மோதுகின்றன.

ஐந்து முறை சம்பியனாகியுள்ள இலங்கை அணிக்கு அனுபவ வீரர்களின் ஓய்வு தடுமாற்றத்தை கொடுத்தாலும் பயிற்சியாளர் ஹத்துருசிங்க, அணித் தலைவர் மத்யூஸின் தலைமைத்துவத்தால் மீண்டும் புத்துயிர் பெற்று எதிரணிகளுக்கு கடும் சவால் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சம்பள விகிதம், நிர்வாக குளறுபடி என குழப்பத்தில் திளைத்துள்ளது.

காயத்தால் சண்டிமல் விலகினாலும் மத்யூஸ், தரங்க ஓட்டங்கள் சேர்க்கலாம். 'சீனியர்' வேகப்பந்துவீச்சாளர் மலிங்க மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளமை பந்துவீச்சில் கூடுதல் பலம். இளம் சுழற்பந்து வீச்சாளர் தனஞ்செய மீது பார்வை பதிந்துள்ளது.

பங்களாதேஷ் கிண்ணம் வென்றது கிடையாது. ஆனால், முக்கியமான போட்டிகளில் எதிரணிக்கு நெருக்கடி கொடுப்பதை வழக்கமாக வைத்துள்ளது.

கடந்த தொடரில் ('ரி20') இறுதியில் வீழ்ந்ததால், இம்முறை இந்திய அணிக்கு பதிலடி கொடுக்க முயற்சிக்கலாம்.

துடுப்பாட்டத்தில் தமிம் இக்பால், முஷ்பிகுர் ரஹிம் துடிப்பாக செயற்பட காத்திருக்கின்றனர். 'வேகத்தில்' முஸ்டபிசுர் கைகொடுத்தால், 'சுழலில்' சகிப் நெருக்கடி கொடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றைய போட்டி இலங்கை நேரப்படி மாலை 5 மணிக்கு ஆரம்பமாகிறது.

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பரத்தைப் புலம் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞானம் இன்று 15ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும்.

இதில் எதிர்வரும் 22 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் 23ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 24ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (இ)

## பிரதேச செயலரின் இடமாற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

பொலநறுவை-தமன்கடுவ பிரதேச செயலாளரை, திடீரென இடமாற்றம் செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்று ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள், பொலநறுவை நவநகர சுற்றுவட்டத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.தமன்கடுவ பிரதேச செய லகக் காரியாலயத்தில் கட மையாற்றும் சுமார் 200 பேர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றுள்ளனர். (இ-7)

## 20 இற்கு எதிரான மனு திங்கள் வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியால் பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்பட்ட 20ஆவது அரசியல் திருத்த சட்டமூலத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை நாளை மறுதினம் திங்கட்கிழமைக்கு உச்ச நீதிமன்றத்தால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

சிசிர ஆப்ரூ, பிரசன்ன ஜெயவர்த்தன மற்றும் முர்து பெர்னாண்டோ ஆகிய மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் 20ஆவது அரசியல் திருத்த யோசனைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 12 மனுக்கள் விசாரணைக்கு அழைக்கப்பட்டது.

இதன்போது மாற்றுக்கொள் கைகளுக்கான மத்திய நிலையம் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதற்காக இந்நாட்டு மக்கள் பல தடவைகள் தமது விருப்பத்தை தெரிவித்திருப்பதாக கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க முதல் ஆட்சிக்கு வந்த அனைத்து ஜனாதிபதிகளும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதற்காக மக்கள் வரம் பெற்றதாகவும், நிறைவேற்று அதிகார முறையை இல்லாதொழிப்பதன் ஊடாக மக்களின் இறைமை மீறல் இடம்பெறுவதில்லை என்றும் எம்.ஏ. சுமந்திரன் கூறினார்.

இதன்பின்னர்மனு மீதான மேலதிக விசாரணைகள் திங்கட்கிழமை வரை ஒத்தி வைக்கப்பட்டது. (இ-7)

## மாற்றுத்திறனாளி கலைஞர்களுக்கான சுப்பர் சிங்கர் இறுதிப் போட்டி நாளை

(குருமன்காடு)

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாற்று வலுவுள்ளோருக்கான சுப்பர் சிங்கர் இறுதிப் போட்டி நாளை 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியா கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணத்திலுள்ள மாற்றுத்திறனாளிகளது திறன்களை வெளிக்கொணர களம் அமைக்கும் நோக்குடன் கடந்த மாதம் 24 ஆம் திகதி வரோட் என்றழைக்கப்படும் மாற்றுவலுவுள்ளோருக்கான வலுவூட்டல் அமையம் மற்றும் யாழ். உடுவில் குபேரகா கலை மன்றம் இணைந்து மாற்றுத்திறனாளிக் கலைஞர்களுக்கான போட்டி நிகழ்வை வரோட் நிறுவன வளாகத்தில் நடத்தியது.

இந் நிகழ்வில் வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து மொத்தமாக 26 பயனாளிகள் பங்குபற்றியிருந்தனர்.

அன்றையதினம் இரண்டு சுற்றுக்கள் இடம்பெற்றன. இச் சுற்றில் பாடல்கள் யாவும் கரோக்கி இசையுடன் இசைக்கப்பட்டு 13 போட்டியாளர்கள் இறுதிச் சுற்றுக்காகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

இதன் இறுதிச் சுற்றில் வாத்திய கலைஞர்களின் இசையுடன் இணைந்து நேரடியாக பாடல் போட்டிகள் இடம்பெறவுள்ளன.(2-250)

## ஜனாதிபதியின் பிரதிநிதியாக சமரசிங்க



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் அவருடைய பிரதிநிதியாக அரசியல் அமைப்புப் பேரவைக்கு துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் மகிந்த சமரசிங்கவை நியமிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டுளளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிரதிநிதியாக இருந்த சம்பிக்க ரணவக்கவின் பதவிக்காலம் செப்டெம்பர் 5ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ள நிலையில் ஜனாதிபதியின் பிரதிநிதியாக மகிந்த சமரசிங்கவை நியமிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பரிந்துரை செய்துள்ளார். (இ-7)

## ஜனாதிபதி வேட்பாளர் யாரென தீர்மானம் மேற்கொள்ள வேண்டும்

### வாசுதேவ வலியுறுத்து

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளர் விடயம் தொடர்பில், பொது ஜன பெரமுன தீர்மானமொன்றை மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, தனது பெயரும் முன் மொழியப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

அத்துடன், ஒன்றிணைந்த எதிரணியினர் பொதுவாக எடுக்கும் தீர்மானங்களுக்கு தாம் உடன்படுவதாகவும், வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (இ-7)



## குளவிக்கொட்டுக்கு இலக்கான நிலையில் 20 மாணவர்கள் வைத்தியசாலையில்

(ஹற்றன்)

ஹற்றன் கல்வி வலயத்திற்குட்பட்ட மஸ்கெலியா சமன்எலிய சிங்கள மகா வித்தியாலய மாணவர்கள் 20 பேர் குளவிக்கொட்டுக்கு இலக்காகிய நிலையில் மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றது.

பாடசாலையின் மைதானத்தில் குறித்த மாணவர்கள் விளையாடிக் கொண்டிருந்த போது, அப்பகுதியில் இருந்த பாரிய கல்லின் அடிப்பகுதியில் காணப்பட்ட குளவிக்கூடே இவ்வாறு கலைந்து மாணவர்களைக் கொட்டியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குளவிக்கொட்டுக்கு இலக்கான மாணவர்கள் தொடர்ந்தும் மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ-7)

## இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு யோகாசனம்

(யாழ்ப்பாணம)

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட இந்து அறநெறிப் பாடசாலைகளில் யோகாசன வகுப்பு நாளை 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் கொழும்புத்துறை கிழக்கு சந்திரசேகர பிள்ளையார் ஆலய அறநெறிப் பாடசாலையிலும் நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பகப்பிள்ளையார் ஆலய அறநெறிப்பாட சாலையிலும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ் யோகாசன் வகுப்பினை ஆன்மீகப்பிரசாரகரும் யோகாசனப் போதானாசிரிமான சி.உமாசுதன் நடத்துவார். (இ-7)

## சளி அடைப்பு காரணமாக 2 மாத ஆண் குழந்தை மரணம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் 2மாத ஆண்குழந்தை ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை காலை சளி அடைப்பு ஏற்பட்டு பரிதாபமாக உயிரிழந்துள்ளது. சுவாசிக்க சிரமப்பட்ட குழந்தையை பெற்றோர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு உடனடியாக கொண்டு சென்ற போதிலும் குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவித்துள்ளனர். சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மொகமட் உமர் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. (இ-30)

## இராசி பலன்

**மீனம்:** அன்பால் சாதித்துக் காட்டும் நாள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும்.

**மேடம்:** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**இடபம்:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கும்பம்:** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், தொழில் நலன் கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்:** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பெற்றோர் மீதான பாசம் கூடும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | இராசி பலன் | | ராகு |
| செவ், கேது | சந்திராஷ்டமம் பரணி | | சூரி, புத |
| சனி | | குரு சுக் | |

15.09.2018

ஆவணி 30, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 06.04 மணிக்கு

சஷ்டி முன்னிரவு 06.53 மணிவரை

விசாகம் காலை 06.11 மணிவரை

சுபநேரம் 03.03-04.33 மணிவரை

இராகுகாலம் 09.03-10.33 மணிவரை

சஷ்டி விரதம்

வளவன்

**மகரம்:** பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், மாற்றங்களால் ஏற்றமுண்டு.

**சிம்மம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, சிந்தித்து செயற்பட வேண்டிய நாள்.

**தனுசு:** சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், திட்டமிட்ட பயணமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், மனச் சஞ்சலங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** விரும்பிய காரியங்கள் விரும்பிய படியே கைகூடும் நாள், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வருமானம் திருப்தி தரும்.

**துலாம்:** எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், விரும்பிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**கன்னி:** எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள்.



நல்லூரில் அமைந்துள்ள ஈழத்து சீரடி சாய் நாதரின் வருடாந்த திவ்ய பிரமோற்சவம் கடந்த 12 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 23ஆம் திகதி தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது. (படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் புகைத்தல், புகையிலைப் பாவனைக்குத் தடை!

## ஐங்கரனின் முயற்சி வெற்றி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் புகைத்தல் மற்றும் புகையிலைப் பாவனையை தடைசெய்வது தொடர்பான தீர்மானம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் புகைத்தல் மற்றும் புகையிலைப் பாவனையை தடை செய்வது தொடர்பாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகாமம் கிழக்கு பிரதேசசபை உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் குறித்த பிரதேச நிர்வாக செயலாளருமான இராமநாதன் ஐங்கரனால் குறித்த பிரேரணை சபையில் முன்வைக்கப்பட்டது.

சபையின் விவாதத்திற்கு வந்த குறித்த பிரேரணை அதிகப்படியான உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறித்த பிரேரணையில் எமது நாட்டில் நாளொன்றுக்கு 72 பேர் என வருடமொன்றிற்கு 26ஆயிரத்து 280 பேர் புகைத்தல் மற்றும் புகையிலைப் பாவனைகளின் காரணத்தினால் பல்வேறு நோய்களுக்கு ஆளாகி மரணிக்கின்றனர்.

மேலும் புகைப்பொருட்களின் பாவனையினால் ஏற்படும் புற்றுநோய், மாரடைப்பு போன்ற தொற்றா நோய்களினால் பாவனையாளர்கள் பாதிக்கப்படும் போது அவரை தங்கிவாழும் குடும்பம் அடிப்படை தேவைகளையேனும் நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் பாரிய கஷ்டங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களும் இவ்வாறான போதைப் பொருள் பாவனையாளர்களினாலே மேற்கொள்ளப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. கஞ்சா, ஹெரோயின் போன்றபோதைப் பொருட்களைப் பாவிப்பவர்கள் ஆரம்பத்தில் புகையிலை சார் உற்பத்தி பொருட்களையே பாவிப்பதாகவும் அதன்பின்னரே ஏனைய போதைப்பொருள் பாவனைக்கு ஆளாகுவதாகவும் ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் அவ்வாறு புகைப் பொருள் பாவனையை ஆரம்பிக்கும் வயது 13 தொடக்கம் 18 என ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றது. ஆகவே பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்தே மேற்குறிப்பிடப்பட்ட வியாபாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றமை வெளிப்படையான உண்மை.

அந்தவகையில்,

எமது பிரதேச சபையின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் காணப்படும் பாடசாலைகள், ஏதேனும் பதிவு செய்யப்பட்டுள்ள மத அனுஸ்டான இடங்கள், அரச வைத்தியசாலைகள், பேருந்து நிலையங்கள், சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் போன்ற இடங்களில் இருந்து 500 மீற்றர் வரையிலான தூரத்திலுள்ள விற்பனை நிலையங்களில் சிகரட், பீடி, சுருட்டு உட்பட ஏனைய எந்தவிதமான புகையிலை சார் உற்பத்தி பொருட்கள் மற்றும் இலங்கை அரசினால் போதைப்பொருள் என அடையாளப்படுத்தப்பட்ட எந்த விதமான போதைப்பொருட்களின் விற்பனைக்குத் தடை செய்யப்படவேண்டும்.

அரசினால் போதைப்பொருள் என அடையாளப்படுத்தப்பட்ட எந்த வகையான போதைப்பொருட்களின் விளம்பரங்கள் மற்றும் விலைப் பட்டியலை காட்சிப்படுத்தல் போன்றவற்றுக்குத் தடை செய்தல், போதைப்பொருட்களை பாவித்தல் அல்லது பாவனைக்கு அனுமதித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. போதைப்பொருள்உற்பத்தி நிறுவனங்களினால் வழங்கப்படும் ஏதேனும் விளம்பரங்கள், பரிசுப்பொருட்கள், சான்றிதழ்கள் காட்சிப்படுத்தலானது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அரசினால் போதைப்பொருள் என அடையாளப்படுத்தப்பட்ட எந்த வகையான போதைப்பொருட்களின்விற்பனைக்குத் தடை.

மேற்குறிப்பிடப்பட்ட சட்டங்களை மீறும் நபர்கள், மீறுதலுக்கு துணையாக இருக்கும் நபர்கள் மற்றும் மீறுதலுக்கு அனுமதியளித்த நபர்களின் அனுமதிப்பத்திரமானது ஒருவருடத்திற்குள் குறையாமல் தடை அல்லது 50ஆயிரம் ரூபா தண்டப்பணம் அல்லது அவை இரண்டிற்கும் ஆளாக வேண்டிவரும்.

மேற்குறிப்பிடப்பட்ட சட்டங்களை மீறும் நபர்கள், மீறுதலுக்கு துணையாக இருக்கும் நபர்கள் மற்றும் மீறுதலுக்கு அனுமதியளித்த நபர்களின் வியாபாரத்திற்கான புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேற்குறிப்பிடப்பட்ட சட்டங்களை மீறும் நபர்கள், மீறுதலுக்கு துணையாக இருக்கும் நபர்கள் மற்றும் மீறுதலுக்கு அனுமதியளித்த நபர்களின் நெருங்கிய உறவினர்களின் வியாபாரத்திற்கான புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தை அமுல்படுத்தல், கண்காணித்தல், விழிப்புணர்வை ஏற்படுத்தல் போன்றவற்றின் அதிகாரம்பெற்ற அதிகாரிகளாக, பொது சுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பிரதேச சபையின் கண்காணிப்பாளர்கள் போன்றோர் காணப்படுவர். மேற்குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தை வலுப்படுத்துதல், புதிய பரிந்துரைகளை முன்வைத்தல் மற்றும் ஆலோசனை வழங்கும் நிறுவனங்களாக, பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச செயலகம், பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பிரதேச போதைப் பொருள் தடுப்புக்குழு, பொலிஸ் நிலையம், பாடசாலை அதிபர்கள், மதத்தலைவர்கள் காணப்படுவர். இச் சட்டத்தை மாற்றியமைத்தல், வலுப்படுத்தல், நடைமுறைப்படுத்தல், போன்றவற்றின் முழு அதிகாரமும் பிரதேசசபையைச் சார்ந்ததாகும். பிரதேச சபையின் சட்டத்தில் 225 ஆவது உறுப்புரிமைக்கு இணங்க உள்ளூராட்சி நிறுவனங்களினால் சிறு நகரசபை மற்றும் பிரதேச சபைகளினால் அமுல்படுத்தப்பட்ட உபவிதிகள் அந்த பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் இன்றும் நடைமுறையில் இருந்து வருகின்றது.

சுகாதார மற்றும் சூழல் பிரச்சினைகள் காரணமாக மக்கள் வாழ்க்கைக்கு ஏற்படுகின்ற இடையூறுகள் பார்வைக்கும், செவிமடுத்தலுக்கும், உறுப்புக்களுக்கும் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் கோபம், வெறுப்புத்தன்மை, துஷ்பிரயோகம், பயம் அல்லது நட்டம் ஏற்படுகின்ற அல்லது ஏற்படுத்தக் கூடிய சுகாதாரத்திற்கும் சொத்துக்களுக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான விடயங்களை குறைப்பது தொடர்பாக அல்லது அது தொடர்பான கவனயீனம் தொடர்பாக ஏற்படுத்தல்.

ஆகவே இந்த உபவிதிகளை இயற்றி எமது வருங்கால சந்ததியினரையும் காப்பாற்ற அனைத்து கட்சி உறுப்பினர்களும் ஆதரவு வழங்குவீர்கள் என எதிர் பார்க்கின்றேன் என தெரிவித்துள்ளார். (இ-7)

## சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

ஈவினை கற்பக விநாயகர் ஆலய இரண்டாம் நாள் திருவிழாவாகிய இன்று இரவு 8 மணியளவில் மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம் என்னும் தலைப்பில் பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் சைவப்புலவர் பொன்.சுகந்தன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (இ

## ஓய்வூதியர் தினத்தை முன்னிட்டு சிறுகதை, கவிதைப்போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதியர் தினவிழா எதிர் வரும் ஒக்டோபர் மாதம் 8ஆம் திகதி வடமாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டங்களையும் ஒன்றிணைத்து யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கொண்டாடப்படவுள்ளது.

ஓய்வூதியர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண ஓய்வூதியர்களிடையே சிறுகதை மற்றும் கவிதைப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன. போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு ஓய்வூதியர் தினத்தன்று பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

**சிறுகதை**

**தலைப்பு:-** "கிளை தவறிய இலைகள்"

ஆக்கங்கள் ஏறத்தாழ 2000 சொற்களுக்கிடையில் தெளிவான கையெழுத்து பிரதியிலோ அல்லது கணனியினைப் பயன்படுத்தி பொறிக்கப்பட்டவையாகவோ இருத்தல் வேண்டும்.

**கவிதை**

**தலைப்பு:-** "ஓய்வூதியர்களின் உணர்வலைகள்"

உரைநடை மற்றும் செய்யுள் ஆகிய இரண்டிலுமான ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கவிதையின் நளின நயங்களின் பிரகாரம் கருத்துப் பொதிந்த ரசனை மிக்க ஆக்கங்கங்களுக்கு அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். ஆகக் கூடியது 6 செய்யுள்களுக்குள் வரையறுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உவமானம், உவமேயம், உருவகம் ரசனைகளுக்கு குந்தகம் ஏற்படாதவாறு அடிப்படைக் கருப்பொருளுக்கு பொருந்தக் கூடியவாறு தயாரிக்கப்படுதல் வேண்டும். தனியொரு பக்கத்தில் கணனியினைப் பயன்படுத்தியோ அல்லது தெளிவான கையெழுத்துப் பிரதியிலோ அமைந்ததாக இருத்தல் வேண்டும்.

**பொதுவான நியந்தனைகள்**

விண்ணப்படிவங்களை மாவட்ட ஓய்வூதியர் சங்கத் தலைவரிடம்/பிரதேச செயலக ஓய்வூதிய சங்கத் தலைவரிடம்/பிரதேச செயலக ஓய்வூதிய உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

ஆக்கங்கள் இம் மாதம் 26ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பப்படுதல்வேண்டும். தபால்உறையின் இடதுபக்க மேல்மூலையில் "ஓய்வூதியர் தினவிழா-2018" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

ஆக்கங்கள் அந்தந்த மாவட்ட ஓய்வூதியர் சங்க தலைவர் ஊடாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினைக் கொண்டிராத அல்லது சரியாக பூர்த்தி செய்யப்படாத போட்டி நிபந்தனைக்கு உட்படாத சகல ஆக்கங்களும் நிராகரிக்கப்படும் என யாழ். மாவட்ட செயலகபிரதேச கணக்காளர் ஜே.கில்பேட் குணம் அறிவித்துள்ளார். (இ



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் மாணவர் விடுதி தினத்தைப் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் மங்கல விளக்கேற்றி ஆரம்பிப்பதையும் பிரதம விருந்தினரான கல்லூரி அதிபர் த.முகுந்தன் உரையாற்றுவதையும் அதிபருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# தமிழ்ச் சங்கத்தின் தனிநாயகம் அடிகள் விழா நாளை
## வடக்கு-கிழக்கு இளைஞர் அணிகளுக்கிடையில் சொற்சமர்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுக்கும் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நினைவு அரங்கம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் யாழ். பிரதான வீதியிலுள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறும்.


யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் உபதலைவர் அருட்பணி ஜெறோ செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வு தனிநாயகம் அடிகள் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்தல், மலர் வணக்கம் செய்தலுடன் ஆரம்பமாகும்.

கலைத்தூது கலையகத்தில் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவர்களின் வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து வரவேற்புரையை தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு உறுப்பினர் சி.சிவஸ்கந்தசிறி ஆற்றுவார். தனிநாயகம் அடிகளார் ஆய்வு மைய பணிப்பாளர் அருட்கலாநிதி அ.பி.ஜெயசேகரம் அடிகளார் ஆசியுரை வழங்குவார். யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் விரிவுரையாளர் ச.லலீசன் தொடக்கவுரையை நல்குவார்.

'தமிழ் அடையாள உருவாக்கம் - திருவள்ளுவரை முன்னிறுத்தி...' என்ற பொருளில் தனிநாயகம் அடிகள் நினைவுப் பேருரை இடம் பெறும். இதனைப் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் வ.மகேஸ்வரன் வழங்குவார்.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் 35 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவதிகளிடையே முன்னெடுத்த விவாதச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி சிறப்பு நிகழ்வாக இடம் பெறவுள்ளது.

வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கவிஞர் புதுவை இரத்தினதுரை அணியும் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுவாமி விபுலாநந்தர் அணியும் இதில் சொற்சமர் ஆடவுள்ளன. வெற்றி பெறும் அணிக்கான வெற்றிக் கேடயத்தை தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் வழங்குவார். (இ-7)



தென்மராட்சி- கொடிகாமம் சிட்டிவேரம் அம்மன் ஆலய சப்த தள இராஜகோபுர அடிக்கல் நாட்டு வைபவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது. (படங்கள்: சுபேசன்)

## இறைச்சிக் கடைக்குத் தடை
# நல்லூர் பிரதேச சபைத் தீர்மானத்திற்கு இந்து சமயத்தொண்டர் சபை வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையால் அண்மையில் கொண்டு வரப்பட்ட இறைச்சிக்கடை தடைச்சட்ட தீர்மானத்தை இலங்கை முதல் உதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபை வரவேற்றுள்ளது.

இது தொடர்பில் அவர்கள் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில்,

பல வரலாறுகள் சாதனைகளும் நிறைந்த நல்லூரம் பதி சைவத்தமிழ் பெருமக்களின் பொக்கிசமாகும். நல்லூரில் இராஜதானி அமைத்து அரசாண்ட வீரத்தமிழ் மன்னன் சங்கிலியன் காலத்திலும் சைவத்தமிழ் மரபு செல்வச் செழிப்பாக இருந்ததை வரலாறுகள் எடுத்தியம்புகின்றன.

அந்த வகையில் அன்றைய ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலும் பசுக்கொலைக்கு மறுப்புத்தெரிவித்து திருநெல்வேலி ஞானப்பிரகாசம் சிதம்பரத்துக்கு சென்றதாக வரலாறு.

அந்த வரலாற்று மரபில் இன்று நல்லூர் பிரதேச சபையில் மாடுகள் வெட்ட உரிமம் இல்லை. மாட்டிறைச்சி விற்க உரிமம் இல்லை. ஏற்கனவே உரிமம் பெற்ற 30 கடைகள் இழுத்து மூடுக என தீர்மானம் நிறைவேற்றிய தவிசாளர் தியானமூர்த்தி, தீர்மானம் முன்மொழிந்த மரபின் மைந்தன் முகுந்தன் ஆகியோர் வரலாற்று நாயகர்கள். அவர்களோடு இணைந்து ஆதரவு வழங்கிய உறுப்பினர்கள் அனைவரும் வரலாற்றில் இடம்பிடித்த சைவத்தமிழ் மரபு காத்த வரலாற்று நாயகர்கள். இவர்களை வாழ்த்துகின்றோம்.

இவர்கள் வழியில் அணி திரள்க. மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-9)

# வடமாகாண மரபுரிமைக் கலைக்கூடம்
## பாரம்பரிய பொருட்கள் திரட்டல்

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் வடக்கு மாகாண மரபுரிமைக் கலைக்கூடம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக்கலைக்கூடத்திற்கு மக்கள் பாரம்பரிய பொருட்கள் மற்றும் எமது கலாசாரம் சார்ந்த பொருட்கள், எமது மக்களின் பயன்பாட்டிலிருந்து அருகி வந்துள்ள பொருட்கள் ஆகியவற்றை அன்பளிப்பாக வழங்கலாம். இப்பொருட்கள் பேணிப் பாதுகாக்கப்படுவதுடன் மக்கள் பார்ப்பதற்கு ஏற்றவிதத்தில் காட்சிப்படுத்தப்படும்.

அத்துடன் அன்பளிப்புக்கள் வழங்கியவர்களின் பெயர்கள், பொருட்களின் பெறுமதி என்பன உரிய கலைக்கூடத்தில் காட்சிப்படுத்தப்படுவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

இப்பொருட்களை அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் மாவட்ட கலாசார உத்தியோகத்தருடன் அல்லது பிரதேச கலாசார உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (இ)

# ஹெரோயின் கடத்தியதாக பெண் உட்பட 4 பேர் கைது

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த ஹெரோயின் கடத்தல் சம்பவங்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 6 மணிக்கும் 9 மணிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் இடம்பெற்றுள்ளன.

மேற்படி ஹெரோயின் கடத்தல் தொடர்பாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பல கோணங்களில் சுற்றிவளைப்புக்களை மேற்கொண்ட போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நான்கு சந்தேகநபர்களில் பெண் ஒருவரும் உள்ளடங்குவதுடன் 20 இற்கும் 36 வயதிற்கும் இடைப்பட்ட வயதை உடைய இளைஞர்களே மேற்படி ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து எம்பிலிப்பிட்டிய பகுதியை சேர்ந்த 26 வயதுடைய ஒருவரிடமிருந்து 10 கிராம் 350 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும், பனாமுர பகுதியை சேர்ந்த ஒருவரிடமிருந்து 20 கிராம் ஹெரோயின் போதைப்பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மேலும் 23 வயதுடைய இரத்தினபுரி பகுதியை சேர்ந்த பெண்ணிடம் இருந்து 20 கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் , வடறெக பகுதியைச்சேர்ந்த 36 வயதுடைய ஒருவரிடமிருந்து 75 கிராம்ஹெரோயின் போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை எம்பிலிப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)


ஸ்ரீராம ஜெயம்



இணுவில் திருப்பதி
அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலய
வருடாந்த பிரமோற்சவ தினம்- 2018
13.09.2018 முதல் 22.09.2018 வரை

15.09.2018 இன்று சனிக்கிழமை
மூன்றாம் நாள் மோகினி அவதாரம்
இசை அர்ப்பணம்:
பாட்டு- திருமதி தமிழினி மயூரன்
வயலின்- திரு. அ.ஜெயராமன்
மிருதங்கம்- திரு.கு.ரவிசங்கர்
முகர்சிங்- திரு.சி.செந்தூரன்
கெஞ்சிரா- திரு.பா.ஞானவேல்.

021 224 2300
ஆலய தர்மகர்த்தா
ச.கணேசலிங்கம்



கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா:18 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்:ICBT/வங்கியாளர்<br>தொ.இ: B/8888 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 14<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/1204 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 15<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BSc, SLAS/அரச தொழில்<br>தொ.இ: B/8889 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 33 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/1205 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 26 செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: கணக்காளர் கனடா<br>தொ.இ: B/8891 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 19<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:QS/தனியார் தொழில்<br>தொ.இ: G/1210 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA/அரச தொழில்<br>தொ.இ: B/8892 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 30 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/1224 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறும் இடத்தை கிளி. நீதிமன்ற உத்தியோகத்தர்கள் நேரில் ஆய்வு





(கண்டாவளை)

சட்டவிரோதமாக மணல் அகழ்வு மேற்கொள்ளப்படும் இடத்தை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் நேரில் பார்வையிட்டனர்.

கிளிநொச்சி வட்டக்கச்சி, பன்னங்கண்டி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டவிரோத மண்ணகழ்வு தொடர்பில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் நேரில் சென்று பார்வையிட்டது.

குறித்த பகுதியில் நேற்றைய தினம் சட்டத்திற்கு முரணாக மண் ஏற்றிய சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டது.

குறித்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டமன்று அப் பகுதியை நேரடியாக பார்வையிட்டு விசாரணை அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டது.

இதனை அடுத்து குறித்த பகுதிக்கு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற பதிவாளர் சிவபாளினி சண்முகராஜ் மற்றும் கிளிநொச்சி பொலிஸ் குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன் போது அப் பகுதியில் வெவ்வேறு இடங்களில் சட்டவிரோதமாக அகழப்பட்டு குவிக்கப்பட்டிருந்த மண் ஏற்றும் பகுதிகள் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றினால் அடையாளமிடப்பட்டது.

அத்துடன் ஆங்காங்கே பெருந்தொகை மணல் திட்டுக்கள் உருவாக்கப்பட்டமை தொடர்பில் பார்வையிட்ட குறித்த குழுவினர் சம்பவம் தொடர்பிலான விசாரணை அறிக்கையை தயாரித்துள்ளமை குறிப்பிடதக்கது.

அண்மைக்காலமாக கிளிநொச்சியில் சட்டவிரோத மண்ணகழ்வு அதிகரித்துள்ளமை தொடர்பில் செய்தி வந்ததுடன், கடந்த 11 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட விவசாய அபிவிருத்தி குழ் கூட்டத்தில் பொலிஸாரின் பாதுகாப்புடன் மண்ணகழ்வு இடம்பெறுகின்றமை தொடர்பில் விவசாயிகளினால் முறைப்பாடு ஒன்று முன்வைக்கப்பட்டது. குறித்த விடயம் தொடர்பில் கிளி நொச்சி, முல்லைத்தீவு மாவ ட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மகேந்திர குணரட்ண குறித்த விடயம் தொடர்பில் விசேட பொலிஸ் குழு நடவடிக் கையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத் சிவிக் சென்ரர் வட்டக்கச்சி பகுதியில் சட்ட விரோத மணல் அகழ்வு செய்யும் இடம் ஒன்று நேற்று முன்தினம் இரவு மாவட்ட விசேட பிரிவு பொறுப்பதிகாரி சத்துரங்க தலைமையிலான குழுவினர் சுற்றிவளைத்த போது சட்டவிரோதமாக மண் ஏற்றிக்கொண்டிருந்த டிப்பர் வாகனம் ஒன்றும் உழவு இயந்திரம் ஒன்றும் பிடிக்கப்பட்டுள்ளது.

சுமார் நானூறு கீப் மணல் ஆற்றில் இருந்து ஏற்றப்பட்டு குறித்த உரிமையாளர்கள் இல்லாத காணிப் பகுதியில் சட்டவிரோத யாட் அமைத்து வெளிமாவட்டங்களுக்கு விற்பனை செய்து வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசேட பிரிவு பொறுப்பதிகாரி சத்துராங்க கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தமைக்கு அமைவாக குறித்த பகுதிக்கு விஜயம் செய்த கிளிநொச்சி நீதவான் நீதிமன்றின் பதிவாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் நிலைமைகளை நேரில் பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315-312)

# மின்னொழுக்கு ஏற்பட்டு வீடு தீப்பற்றி எரிந்துநாசம்



(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்டத்தில் நொச்சிமோட்டைப் பகுதியில் அமைந்துள்ள தற்காலிக வீடொன்று நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் தீப்பற்றியெரிந்து நாசமாகியுள்ளது.

வீட்டில் யாரும் இல்லாத சமயத்தில் குடிசை வீட்டில் திடீரென மின்னொழுக்கு ஏற்பட்டு தீப்பற்றியெரிந்துள்ளது. உடனடியாக விரைந்த அயலவர்கள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் ஓமந்தை பொலிஸாருக்கும் தகவல் வழங்கியுள்ளனர். சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

தீ விபத்து காரண மாக இவர்களின் உடைகள், உடைமைகள், பாடசாலை உபகரணங்கள் என்பன முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

தமிழ் விருட்சம் அமைப்பினரால் அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய பொதியும் சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பினர், ஸ்ரீ அம்பாள் மோட்டர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளரினால் பாடசாலை சப்பாத்து, பாடசாலை உபகரணங்கள், பாடசாலை சீருடை, புத்தகப்பை, பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கான உடைகள், அத்தியாவசிய பொருட்கள் எனப் பல பொருட்கள் வழங்கி வைத்தனர்.

வவுனியா மாவட்ட செயலகத்தினால் தறப்பாள், துவாய், நுளம்பு வலை, சாறி போன்றவை வழங்கி வைக்கப்பட்டன. (2-281)

# மனித எச்சங்களை புளோரிடா பல்கலைக்கு அனுப்பி ஆய்வு செய்யும் தீர்மானம் பிற்போடல்

(மன்னார்)

மன்னார் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்களை அமெரிக்காவின் புளோரிடா பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி ஆய்வு செய்வது தொடர்பான இறுதித் தீர்மானம் மேற்கொள்வது பிற்போடப்பட்டுள்ளது.

மனித புதைகுழி தொடர்பில் நடத்தப்பட்ட விசேட கூட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம், இது குறித்த தீர்மானம் அடுத்த கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மனித புதைகுழி தொடர்பான விசேட கூட்டம் மன்னார் மாவட்ட நீதிமன்ற புதிய நீதிபதி ரி.சரவணராஜா தலைமையில் நேற்றுமுன்தினம்நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அப்புறப்படுத்தப்பட்ட மனித எச்சங்கள், எந்தக்காலத்திற்குரியவை என்பதை உறுதிப்படுத்துவதற்காக அவற்றை புளோரிடா பல்கலைக்கழகத்திற்கு அனுப்புவது தொடர்பில் சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷவால் முன்மொழிவு வொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

எனினும் இது குறித்து மேலதிக கலந்துரையாடலை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் குறித்த தீர்மானத்தை அடுத்த கூட்டத்திற்கு பிற்போடுமாறு காணாமலாக்கப்பட்ட உறவினர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணிகள் கோரிக்கை முன்வைத்தனர்.

இதனடிப்படையில் இது தொடர்பான இறுதித் தீர்மானம் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கொள்ளப்படவில்லை. அகழ்வு செய்யப்படும் மாதிரிகள் எவ்வாறு பேணப்படுகின்றன மற்றும் அதன் நம்பகத்தன்மை தொடர்பிலும் காணாமலாக்கப்பட்ட உறவினர்களின் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணிகள் கேள்விகளை எழுப்பியிருந்தனர்.

அந்தப் பொருட்களை சட்ட வைத்திய அதிகாரி, சோக்கோ பொலிஸாரின் கையொப்பத்துடன், முத்திரை குத்தப்பட்டு நீதிமன்றப் பதிவாளிடம் கையளிக்கப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த அகழ்வுப் பணிகள் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில், வாராந்தம் புதன்கிழமை அகழ்வுப் பணிகளின் முன்னேற்றங்கள் மற்றும் பொருட்கள் தொடர்பில் சட்டவைத்திய அதிகாரி ஊடகங்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் எனவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஏற்கனவே அகழப்பட்ட மண்ணை, மற்றுமொரு இடத்திற்கு மாற்றுவதற்கு நீதிமன்ற பதிவாளர் மூலம் நீதிமன்றத்திற்கு சொந்தமான இடத்தில் நகர சபை வாகனங்கள் மூலம் மன்னார் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் கடந்த மூன்றரை மாதங்களாக முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், நேற்று முன்தினம் 70 ஆவது வேலை நாளாக இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதுவரை நடைபெற்ற அகழ்வுப் பணிகள் தொடர்பான சிறுகுறிப்பை சட்ட வைத்திய அதிகாரி நீதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்ததுடன், இந்த நடவடிக்கைகளுக்கான இணைப்பாளர்களாக பொலிஸ் சிரேஷ்ட அதிகாரிகள் இருவர் பெயரிடப்பட்டுள்ளனர்.

அகழ்வு செய்யப்பட்டு. துப்புரவு செய்யப்பட்ட இடங்களையாவது கட்டட நிர்மாணத்திற்காக பெற்றுத் தர முடியுமா என சதொச நிறுவன அதிகாரி வினவியிருந்தார்.

எனினும் சட்டவைத்திய அதிகாரியுடன் கலந்துரையாடிய நீதிபதி, இந்த அகழ்வுப் பணிகள் நிறைவுபெறும் காலப் பகுதியை உறுதியாக கூற முடியாது என்பதால், மாற்று இடத்தை தெரிவுசெய்யுமாறு சதொச கட்டட நிறுவன அதிகாரிக்கு நீதிபதி ஆலோசனை வழங்கினார்.

மன்னார் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மன்னார் சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ, களனி பல்கலைகழக தொல்பொருள் துறை பேராசிரியர் உள்ளிட்ட குழுவினர், காணாமல் போனோர் தொடர்பான நிரந்தர அலுவலகத்தின் தலைவர் சட்டத்தரணி சாலிய பிரீஸ், ஆணையாளர் கணபதிப்பிள்ளை வேந்தன், மன்னார் மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், காணி அலுவலர், சதொச நிறுவன பொறுப்பதிகாரி, கட்டட ஒப்பந்தகாரர், சட்டத்தரணிகள், பொலிஸார், நீதிமன்றப் பதிவாளர் மற்றும் அழைக்கப்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிளிநொச்சியில் நட்டஈடு வழங்கல்

(பரந்தன்)

நாட்டில் நடைபெற்று முடிந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களிற்கான நட்டஈடுகள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சியில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் கிளிநாச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம் பெற்றது.



நாட்டில் நிலவிய யுத்தத்தினால் சேதமாக்கப்பட்ட ஆலயங்கள் மற்றும் உறவுகளை இழந்தோர். வலுவிழந்தோர் மற்றும் சொத்துக்களை இழந்தோருக்கான நட்டஈடு காசோலைகள் ஒரு தொகுதியினருக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் காதர் மஸ்தான், புனர்வாழ்வு அதிகார சபை தலைவர் அன்னலிங்கம், அமைச்சின் செயலாளர், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 252 பேருக்கு 2146 5990 ரூபா மொத்தமாக பகிர்ந்தளிக்கப்பட்டது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களிற்கு இவ்வாறாக மொத்தமாக 47209083 ரூபா நிதி 647 பேருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. மீள்குடியேற்ற அமைச்சினால் குறித்த நிதி பகிர்ந்தளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-312)



ஒதியமலை விநாயகர் கோவிலில் ஆவணிச் சதுர்த்தி பூசை நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்ற போது...

# மன்னார் மனித புதைகுழி அகழ்வில்
# கைகள், கால்கள் ஒன்றுக்கொன்று நெருக்கமாக
# பிணைக்கப்பட்ட மனித எலும்புக்கூடு மீட்பு

(மன்னார்)

**மன்னார் சதொச வளாக மனித எச்சங்களின் அகழ்வுப்பணியின் போது நேற்று முன்தினம் கைகள், கால்கள் கட்டப்பட்ட நிலையில் மனித எலும்புக்கூடு ஒன்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.**



மன்னார் சதொச வளாகத்தில் தொடர்ச்சியாக பல்வேறு கேள்விகள், சந்தேகங்கள் ஏற்படுத்தக் கூடிய வகையில் தொடர்ச்சியாக மனித எச்சங்கள் மீட்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மனித எச்சங்களின் அகழ்வுப்பணியின் போது கைகள், கால்கள் கட்டப்பட்ட நிலையில் புதைக்கப்பட்டிருக்கலாமென சந்தேகத்தை ஏற்படுத்தக் கூடிய மனித எச்சம் ஒன்று அடையாளப்படுத்தப்பட்டிருந்தது.

கைகள் இரண்டும் நெருக்கமாக பிணைக்கப்பட்ட நிலையிலும் கால்கள் இரண்டும் ஒன்றுக்கொன்று குறுக்காகப் பிணைக்கப்பட்ட விதத்திலும் மிகவும் நெருக்கத்துக்குள் புதைக்கப்பட்ட விதமாகக் காணப்பட்டது.

குறித்த மனித எச்சம் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் புதைக்கப்படதா, அல்லது மதச் சடங்குகளின் அடிப்படையில் புதைக்கப்பட்டதா? என்பது தொடர்பாக எந்தவித ஊகிப்புக்களும் தற்போது மேற்கொள்ள முடியவில்லை என்றாலும் இதுவரை மீட்கப்பட்ட மனித எச்சங்கள் மற்றும் அவை புதைக்கப்பட்ட நிலை மூலமாக குறித்த மனித உடல்கள் சாதாரண நிலையில் புதைக்கப்பட்டவை என நிச்சயம் ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகக் காணப்பட்டாலும் இறுதிக்கட்டப் பரிசோதனையின் பின்னரே உண்மை தெரியவரும். அதுவரை மன்னார் புதைகுழி புதைக்கப்பட்ட தேடலாகவே தொடரும்.

மன்னார் மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா மேற்பார்வையில் சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஸ மற்றும் களனி பல்கலைக்கழக பேராசிரியர் தலைமையில் மன்னார் சதொச வளாகத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள மற்றும் புதிதாக அடையாளப்படுத்தப்படும் மனித எச்சங்களை அப்புறப்படுத்தும் மற்றும் ஆய்வு செய்யும் பணி இடம்பெற்று வருகின்றது. குறித்த அகழ்வுப் பணி நேற்றையதினம் 71 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது. (2)




# வரட்சிக்கால குடிநீர் விநியோக வேலைத் திட்டங்கள் விஸ்தரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையினுடைய ஏற்பாட்டில் கரைச்சிப் பிரதேச சபை ஆளுகைக்குட்பட்ட வரட்சிக்கால குடிநீர் விநியோக வேலைத் திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

கடுமையான வரட்சி நிலை ஏற்பட்டிருப்பதனால் கிளிநொச்சி நகரில் உள்ள பல மத்திய நிலையங்களில் குடிநீர் தட்டுப்பாட்டு நிலைமை உருவாகியுள்ளது. குறிப்பாக கிளிநொச்சி மாவட்ட செயலகம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், அரச பேருந்து திணைக்களம் மற்றும் பிரதேச சபையை சூழ்ந்திருக்கும் பல திணைக்களங்களில் குடிநீருக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் திணைக்களங்கள் மிகப்பெரும் சவால்களை சந்தித்து வருகின்றன.

அது தவிர கரைச்சி,கண்டாவளை ஆகிய பிரதேச செயலகங்களில் மிகப் பாரிய அளவிலான குடிநீர்ப்பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கிற காரணத்தால் இதனை மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம்அருமைநாயகம்தலைமையில் அதற்கான ஒழுங்கமைப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. கரைச்சி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருக்கின்ற தட்டுவன்கொட்டி, ஆனையிறவு, உமையாள்புரம், கிளிநொச்சி நகரம், ஜெயந்திநகர், புதுமுறிப்பு, ஸ்கந்தபுரம், ஆனைவிழுந்தான், வன்னேரி, மாயவனூர், மாவடியம்மன், இராமநாதபுரம் போன்ற பிரதேசங்களுக்கு குடிநீர் விநியோகத்தை மேற்கொண்டு வருகிறது.

தினம்தோறும் 70 ஆயிரம் லீற்றர் வரையிலான குடிநீர் விநியோகம் நடைபெறுகிறது. 03 லொறி பவுசர்கள், 02 டக்டர் பவுசர்கள், 40 இற்கும் மேற்பட்ட நீர்த்தாங்கிகள் மக்கள் வாழ்கின்ற முக்கிய பிரதேசங்களில் வைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. இருப்பினும் தினந்தோறும் காலை, மாலை என்றும் குடிநீருக்கான கோரிக்கைகள் அதிகரித்து வந்து கொண்டிருக்கிறது. கால்நடைகள் குடிநீரின்றி அலைகின்ற ஒரு நிலைமை காணப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து தற்பொழுது நீர்ப்பாசன திணைக்களம் கிளிநொச்சி இரணைமடுக்குளத்தில் எஞ்சியிருந்த நீரையும் கால்நடைகளின் உயிர் வாழ்வு கருதி திறந்து விடப்பட்டிருக்கிறது. மிகப்பெரும் செலவிலே வரட்சிக்கால குடிநீர் விநியோகத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். (2-315)

# இரண்டு வைத்தியர்களுடன் இயங்கும் முருங்கன் ஆதார வைத்தியசாலை
## சிகிச்சைக்கு நாள் முழுவதும் காத்திருப்பு



(மன்னார்)

முருங்கன் ஆதார வைத்தியசாலையில் தற்போது இரண்டு வைத்தியர்கள் மட்டுமே கடமையாற்றி வருகின்ற நிலையில் குறித்த வைத்தியசாலைக்கு நோயாளர்கள் வருகை அதிகமாகக் காணப்படுகின்ற நிலையில் குறித்த வைத்தியர்கள் விடுமுறைகளில் சென்றால் அனைவரும் திரும்பிப் போகும் நிலை ஏற்பட்டுள்ளதாக முருங்கன் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலனின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

முருங்கன் ஆதார வைத்தியசாலைக்கு அமைச்சர் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் சென்றிருந்தார்.

இதன்போது முருங்கன் ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திக்குழு உறுப்பினர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் மேலும் தெரிவிக்கையில்,

சாதாரணமான நோய்களுக்கும் நாள் முழுவதும் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலை மாற்றம் பெற மேலதிகமாக நான்கு வைத்தியர்களாவது இன்னும் தேவை. அத்துடன் தாதியர்கள் பற்றாக்குறை உட்பட அனைத்து வசதிகளையும் எமது வைத்தியாலைக்கு செய்து தாருங்கள்.

நாம் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபடுவதை தவிர வேறு வழியில்லை என அவர்கள் தெரிவித்தனர். இதன் போது கருத்துத் தெரிவித்த சுகாதார அமைச்சர்,

அடுத்த மாதமளவில் 250 வைத்தியர்களின் விண்ணப்பத்தில் நாற்பது வைத்தியர்கள் வடக்கு மாகாணத்திற்கும் ஆறு அல்லது ஏழு பேர் மன்னார் மாவட்டத்திற்கும் தரப்படும். அதில் முருங்கனுக்கு என இரண்டு வைத்தியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

வைத்தியர்கள் கிடைக்காத பட்சத்தில் மக்களுடன் நானும் இணைந்து போராடுவேன் என்று அமைச்சர் ஜி.குணசீலன் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பைத் தொடர்ந்து வைத்தியசாலையின் நிலைமைகளை நேரடியாக பார்வையிட்டதோடு, அங்கு காணப்பட்ட பல்வேறு குறைபாடுகள் மற்றும் வைத்தியசாலை தரப்பினரின் கவனயீனத்தினால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்தும் முருங்கன் வைத்தியசாலை தரப்பினரின் கவனத்திற்கு அமைச்சர் கொண்டு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# இராணுவத்தின் வசம் காணிகள்; நகர அபிவிருத்திக்கு பெரும் தடை
## சிறிதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கிளிநொச்சி மாவட்டத் தில் சுமார் 38 வீதமான நிலப்பரப்பு தொடர்ந்தும் இராணுவத்தினர் வசமுள் ளதால் இது நகர அபிவிருத்திக்கு பெரும் தடையாகவுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் மத்தியில் நகரத்திலும் பெருமளவான காணிகள் இன்று வரை இராணுவத்தின் பயன்பாட்டில் இருந்து வருகின்றது. இது நகர அபிவிருத்திக்கும் மக்களின் இயல்பு வாழ்வுக்கும் தடையாகவேயுள்ளது.

இவ்வாறுள்ள இராணுவத்தினர் வெளியேற வேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம் என்று குறிப்பிட்ட அவர், கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னமும் 38 வீத மான நிரப்பரப்பு நகரப்ப குதியில் உள்ள நிரப்பரப்பு இராணுவத்தினர் வசமுள்ளது. இதனால் கிளிநொச்சி நகரத்தை ஒரு நகர வடிவமைப்புக்குள் கொண்டுவர முடியா துள்ளது.

காரணம் கிளிநொச்சி நூலகம் இருந்த பிரதேசம் பட்டின சபை இருந்த இடம் ஒரு பெரிய இராணுவ முகாமாகவுள்ளது.

சுமார் 2 ஆயிரத்து 600 மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையின் காணி இன்னமும் விடுவிக்கப்படவில்லை. கடந்த ஜனாதிபதியின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இதனை வலியுறுத்தியுள்ளோம். உருத்திரபுரம்கூழாவடிப்பகுதியில் மக்கள் போக்குவரத்துக்கு இடையூறாக வீதியில் இராணுவம் காவலரண் உள்ளது.

குடிமனைகளோடு எங்கும் பரவிய வகையில் இராணுவம் உள்ளது. கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் பின் பகுதியில் தனியார் காணியில் சிறிய கொட்டகை அமைத்து உள்ள இராணுவம் அதனை விட்டு வெளியேறுவதற்கு ஒன்பது இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்கணக்கு காட்டுகின்றனர்.

அந்தக் காணியின் பெறுமதியைவிட, இவர்கள் கேட்கும் தொகை அதிகமாகும். இராணுவம் பொதுமக்களின் காணிகளை அபகரித்து அதிலிருந்து வெளியேறுவதற்கு நிதியைக் கேட்கின்றது.

எனவே யாழ்ப்பாணத்துக்கு ஒரு நகரம் உள்ளது. முல்லைத்தீவுக்கு நகரம் இருக்கின்றது. வவுனியாவிற்கு நகரம் உள்ளது. அதே போன்று கிளிநொச்சிக்கு ஒரு நகரம் அமைய வேண்டும் என்பது. நீண்டநாளாக எமது மக்கள் மத்தியில் இருந்து வருகின்ற ஒரு கனவு. எனவே இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகளை விட்டு வெளியேற வேணடும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# கைத்தொலைபேசி திருத்தும் பயிற்சி நெறிக்கு திகதி மாற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் ஏற்பாட்டில் மாற்றுத் திறனாளிகளுக்கான கைத் தொலைபேசி திருத்தும் பயிற்சிநெறி எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப் பயிற்சிநெறி முன்னர் மாவட்ட கூட்டுறவு மண்டப ஒழுங்கையிலுள்ள மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் மண்டபத்தில் இன்று சனிக்கிழமை ஆரம்பிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இப் பயிற்சிநெறிக்கு கிளிநொச்சி மாவட்டத்தை வதிவிடமாகக் கொண்ட10 பேர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சனி, ஞாயிறு ஆகிய தினங்களைக் கொண்டதாக 5 முழு நாட்கள் இப் பயிற்சிநெறி நடைபெறவுள்ளது.

மேலதிக விபரம் தேவைப்படுவோர் பிரதேச செயலகங்களில் கடமை புரியும் சமூக சேவைகள் அலுவலர் அல்லது இலக்கம் 31, கூட்டுறவு மண்டப ஒழுங்கையிலுள்ள மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் தொலைபேசி இல. 021228 3363 உடன் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# மோட்டார் சைக்கிள் - ஆட்டோ விபத்து; இளைஞர்கள் படுகாயம்

(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்டத்தின் தவசிகுளம் பகுதியில் மோட்டார் சைக்கிள்-ஆட்டோ நேருக்குநேர் மோதியதில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் வவுனியா நகருக்கு மதகுவைத்தகுளம் பகுதியிலிருந்து பயணித்த ஆட்டோவும் வவுனியாவிலிருந்து பயணித்த மோட்டார் சைக்கிளும் தவசிகுளம் பகுதியில் நேருக்கு நேர் மோதியுள்ளது. இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த 21, 22 வயதுடைய மதகுவைத்தகுளம் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிள்-ஆட்டோ என்பன சேதமடைந்துள்ளன. இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

## “பார்த்தீபன் இன்னும் பசியுடன் தான் இருக்கிறான்”

# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஆரம்பம்

அஹிம்சை என்பது என்ன என்பதை உலகத்திற்கு எடுத்துரைத்தவர் தியாகி திலீபன். இந்தியாவிற்கு அஹிம்சைப் போராட்டத்தின் வழியாக விடுதலையைப் பெற்றுக் கொடுத்தார் என்று மகாத்மா காந்தியை அழைப்பதுடன் காந்தி தேசம் என இந்தியாவை அழைக்கிறார்கள்.

அதே இந்தியாவிடம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து திலீபன் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்.

ஈழத்தின் யாழ்ப்பாணம் ஊரெழுவைச் சேர்ந்த திலீபன் நவம்பர் 27, 1963 அன்று பிறந்தார். பார்த்தீபன் என்ற இயற்பெயரை உடைய திலீபன் புலிகளின் ஆரம்பகால முக்கிய உறுப்பினராவார். 1987 செப்டெம்பர் 15ஆம் திகதி தனது உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

12 நாட்கள் உண்ணா நோன்பிருந்து 1987 செப்டெம்பர் 26 அன்று காலை 10.48 மணிக்கு மரணத்தை தழுவினார். யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த திலீபனுக்கு மரணத்தின் பின்னர், புலிகள் லெப்டினன் கேணல் திலீபன் எனும் நிலையை வழங்கியிருந்தனர்.

### திலீபனின் ஐந்து அம்சக் கோரிக்கைகள்

1. மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

2. சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

3. அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும்.

4. ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.

5. பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என்பனவாகும்.

அஹிம்சைப் போராட்டத்தின் மூலம் சுதந்திரத்தைப் பெற்றதாக கருதப்படும் இந்திய தேசம் திலீபனின் அஹிம்சைப் போராட்டத்தை மதிக்கவில்லை. பன்னிரெண்டு நாட்கள் ஒரு துளி நீர்கூட அருந்தாமல் உண்ணவிரதம் இருந்தார் திலீபன். அஹிம்சை என்பது மற்றவர்களுக்கு தீங்கு ஏற்படாமல் அல்லது மற்றவர்களை தண்டிக்காமல் தம்மை வருத்தி முன்னெடுக்கும் ஒரு போராட்டம். காந்தி இந்த அறவழிப் போராட்டத்தையே இந்தியா சுதந்திர விடுதலையை வென்றெடுக்கப் பயன்படுத்தினார்.



திலீபனின் உண்ணா விரத அறப் போராட்டத்திலும் இந்தியா திலீபனுக்கு மாத்திரமின்றி ஒட்டுமொத்த ஈழத் தமிழர்களுக்கும் இம்சையையே பரிசளித்தது. உலகத்தில் நடந்த அஹிம்சைப் போராட்டங்களில் திலீபனின் போராட்டம் ஒரு உன்னதப் போராட்டமாக கருதப்படுகிறது.

இந்த உலகத்தில் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை எண்ணிவிட முடியாது. பல்வேறு தேவைகளுக்காக பலரும் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அலுவலகத்தில் சம்பள உயர்வு, கட்சியில் பதவி கோரி, அடிப்படைத் தேவைகளை கேட்டு என்று பல்வேறு காரணங்களுக்காக பலரும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அரசியலில் உண்ணாவிரதம் என்பது ஒரு தந்திரம். நான் உங்களுக்காக உண்ணாவிரதம் இருந்தேன் என்று சொல்லிக் கொண்டு பலரும் வாக்குகளை கேட்க வருவதைப் பார்த்திருக்கிறோம். பெரும்பாலான அரசியல்வாதிகளின் பின்னால் உண்ணா விரதத்தின் வரலாறு இருக்கும்.

திலீபன் அப்படி ஒரு முடிவை எடுத்தார் என்றால் அதற்கு அடிப்படையானது ஈழ மண்ணின் வரலாறும் நிலவரமும்தான். தனது தேசம் தொடர்பிலும் மக்களின் விடுதலை தொடர்பிலும் திலீபன் என்ற போராளியிடம் காலம் உருவாக்கிய மனோதிடம்தான் அவரை அத்தகையதொரு மரணப் போராட்டத்தை செய்யத் தூண்டியது.

உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பிலும் இந்திய அரசின் நிலைப்பாடு தொடர்பிலும் முழுமையான புரிதலுடன்தான் திலீபன் போராட்டத்தில் இறங்கினார்.

ஒரு காலத்தில் திலீபனின் நினைவுநாட்களை பெருமெடுப்பில் நினைவுகூர்ந்த ஈழ மண் இன்று மௌனித்துக் கிடக்கிறது. திலீபனுக்காக தமிழர் தேசத்தில் எழுப்பப்பட்டிருந்த நினைவுத்தூபிகள் எதையும் சிங்கள இராணுவத்தினர் விட்டு வைத்திருக்கவில்லை. ஏனெனில் திலீபன் என்ற குறியீடு வலிமை மிகுந்தது.

அவரது போராட்ட வடிவம் இந்த உலகத்தை என்றும் கேள்விக்கு உள்ளாக்கியபடியிருக்கும். திலீபனின் சிலைகளுக்கும் படங்களுக்கும் தூபிகளுக்கும் அஞ்சிய இராணுவத்தினர் அவற்றை மெல்ல மெல்ல அழிக்கத் தலைப்பட்டனர்.

திலீபனின் மனோ திடத்திலிருந்து வெளிப்பட்டவைதான் “மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்” போன்ற கருத்துக்கள். நினைவுகளில் எழுப்பப்பட்ட திலீபனின் சிலைகளை படங்களை, சித்திரத்தை யாராலும் அழிக்க முடியாது. திலீபன் தமிழ் மக்களிடத்தில் என்றும் மறக்க முடியாத ஒரு அற்புதப் போராளி.

திலீபன் ஈழத் தமிழர்களின் ஒரு குறியீடு. திலீபனின் பசி என்பது மக்களின் பசி. திலீபனை இன்றும் நாம் நினைவு கூர வேண்டியிருப்பதற்கு நிறையக் காரணங்கள் உள்ளன. திலீபன் அன்று முன்வைத்த கோரிக்கைகள் இன்றும் இந்திய அரசை நோக்கி மாத்திரமன்றி இலங்கை அரசை நோக்கியும் எழுகின்றன.

31 வருடங்கள் கடந்துவிட்டன. அன்று தொடங்கி இன்னமும் ஈழத் தமிழ்களுக்கு ஒரு தீர்வில்லை.

இன்னமும் ஈழத் தமிழர்களின் நிலங்களில் சிங்களவர்கள் திட்டமிட்டுக் குடியேற்றப்படுகின்றனர். பலர் இன்னமும் சிறைகளில் தவிக்கின்றனர். அன்று ஊர்காவல்படைகள் இன்று இராணுவப்படைகளே தமிழர் தாயகத்தில் நிறைந்துவிட்டன.


பொலிஸ் நிலையங்களும் பெருகிவிட்டன. அன்று திலீபன் முன்வைத்த பிரச்சினைகள் இன்று உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டன.

31 வருடங்கள் கடந்த பின்னரும் அஹிம்சைக்கு தன்னை பலியிட்ட ஒரு ஈழப் போராளி திலீபனின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. பார்த்தீபன் இன்னும் பசியுடன் தான் இருக்கிறான்.

---

# 20 வது திருத்தச்சட்டத்திற்கு எதிராக வாக்களிப்பவர்களுக்கு மலர்மாலை

## வேந்தர் அபய திஸ்ஸ தேரர்



(கொழும்பு)

பாராளுமன்றத்தில்கொண்டுவரப்பட்டுள்ள 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக வாக்களிக்குமாறு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸதேரர்வேண்டுகோள் விடுத்துள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டத்தினால் வழங்க முடியாமல் போன பிரிவினைவாதிகளின் தேவையை ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதன் மூலம் வழங்குவதற்கே 20 இன் மூலம் முயற்சி செய்வதாகவும் அரசு மீது தேரர் குற்றம்சாட்டியுள்ளார்.

இந்த திருத்தச் சட்ட மூலத்துக்கு எதிராக பகிரங்கமாக வாக்களிப்பவர்களை மலர் மாலை சூடி வரவேற்கத் தயாராகவிருப்பதாகவும் தேரர் நேற்று முன்தினம் தேசிய வாசிகசாலை மண்டபத்தில் நடைபெற்ற தேசிய பிக்கு புத்திஜீவிகள் அமைப்பின் அமர்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-7)

---

# மீன் ஏற்றுமதியின் மூலம் வெளிநாட்டு வருமானத்தை அதிகரிப்பதே நோக்கம்-திலிப்

(கொழும்பு)

மீன் ஏற்றுமதியின் மூலம் இலங்கைக்கு கிடைக்கும் வெளிநாட்டு வருமானத்தை 150 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பதே நோக்கமாகும் என்று, கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் திலிப் வெதஆராச்சி தெரிவித்துள்ளார்.

இந்த இலக்கை அடைவதற்காக மீன் ஏற்றுமதி நடவடிக்கைகள் வலுப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இதில் நிலவும் பிரச்சினைகளுக்கு குறுகிய காலத்தில் தீர்வு பெற்றுக் கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மீன் ஏற்றுமதியாளர் சங்க பிரதிநிதிகளுடன் நேற்று இடம் பெற்ற பேச்சுவார்த்தையின் போது அமைச்சர் இந்த விடயங்களை தெரிவித்தார். (இ-7)

---

# பொதுப்போக்குவரத்துச் சேவையை மக்கள் பாராட்டைப்பெறும் சேவையாக மாற்ற வேண்டும்-ஜனாதிபதி விருப்பம்

(கொழும்பு)

நாட்டின் பொதுப்போக்குவரத்து சேவையை பயணிகளின் பாராட்டைப் பெறும் சேவையாக மாற்றுவது அவசியம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொதுப்போக்குவரத்து சேவையின் தரத்தை மேம்படுத்தி முறையான போக்குவரத்து சேவையாக அதனை பேணுவது தொடர்பாக நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலொன்றின்போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

தரமான பொதுப்போக்குவரத்து சேவையை நாட்டுக்கு அறிமுகப்படுத்துவதற்காக 2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட “சஹசர” திட்டத்தின் முன்னேற்றம் பற்றியும் தரமான போக்குவரத்து சேவையை நாடளாவிய ரீதியில் முன்னெடுப்பது பற்றியும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் பொதுப்போக்குவரத்து சேவையை பலப்படுத்தி மாற்றுப் போக்குவரத்து முறைகளுக்கு திரும்பியுள்ள பயணிகளை மீண்டும் பொதுப்போக்குவரத்து சேவையின்பால் ஈர்த்தல், அதன் மூலம் நாட்டின் வீதிப் போக்குவரத்து நெரிசல்களை குறைத்தல், பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் உள்ளிட்ட பொதுப்போக்குவரத்தை மக்கள் நேயப் பொறிமுறையாக மாற்றும் விரிவான வேலைத்திட்டம் தொடர்பாக இதன்போது ஜனாதிபதி அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்தார். (இ-7)

# இனிமேல் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழரசுக் கட்சியுள்ள கூட்டமைப்பு சார்ந்து அரசியல் நடவடிக்கையில் ஈடுபடவேண்டாம்

## முதல்வர் விக்னேஸ்வரனிடம் த.வி.கூ.செயலாளர் ஆனந்தசங்கரி வேண்டுகோள்


(யாழ்ப்பாணம்)


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள ஒரு சிலரின் நடவடிக்கைகளால் எதுவுமே செய்ய முடியாத ஒரு இக்கட்டான நிலைமைக்குத் தாங்கள் தள்ளப்பட்டு விட்டீர்கள் என்பதை நான் நன்கு அறிவேன்.

எனவே அவ்வாறான ஒரு சூழ்நிலை தங்களுக்கு மீண்டும் வந்துவிடக் கூடாது என்பதற்காகவே நான் இதனைப் பகிரங்கமான ஒரு அறிக்கையாக விடுக்கின்றேன். இனிமேல் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தமிழரசுக் கட்சியை உள்ளடக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்ந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என அன்புடன் வேண்டுகோள் விடுக்கின்றேன் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மாகாண சபையின் இறுதி அமர்வு தங்களின் பிறந்த நாளில் வருவதாக செய்திகள் கூறுகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்ட நீங்கள் உட்கட்சி விவகாரத்தால் தாங்கள் சுயமாக சிந்தித்து செயற்பட முடியாமலேயே காலங்கள் ஓடிவிட்டன. குறிப்பாக தமழரசுக் கட்சியினர் தங்களுடன் மோதிக் கொண்டு அரசியல் நாகரிகம் கூட தெரியாமல் சிலர் தங்களை வசைபடியது மட்டுமல்லாமல் முதலமைச்சர் பதவியில் இருந்து தங்களை அகற்ற அவர்கள் நடந்து கொண்ட முறைமையை எந்தஒரு தமிழனாலும் ஏற்றுக் கொள்ளமுடியாத ஒன்று. தமிழர்கள் கையில் அதிகாரம் போனால் இப்படித்தான் செயற்படுவார்கள் என்று, எமது பண்பாடு,கலாசாரம் எல்லாம் வெறும் பேச்சளவில் மட்டும்தான் என எம்மைப் பார்த்து உலகமே நகைத்தது. இருந்தும் தாங்கள் பொறுமையை கடைப்பிடித்து மாகாண சபையின் காலம் முடியும் வரை தாக்குப் பிடித்து சமாளித்து விட்டீர்கள். உட்கட்சி உரசலால் நீங்கள் மனதில் நினைத்திருந்த பல நல்ல திட்டங்களை செயற்படுத்த முடியாமல் போய் விட்டது. அந்த இடைப்பட்ட காலத்தில் தங்களின் மனநிலை எவ்வாறு இருந்திருக்கும் என்பதை நான் நன்கு அறிவேன். ஏனெனில் என்னையும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பொறுப்பில் இருந்து அகற்ற அவர்கள் எடுத்த நடவடிக்கை தோல்வியில் முடிய, என்னை கொலை செய்வதற்குக் கூட பல முயற்சிகளையும் மேற்கொண்டனர் என்பது யாவரும் அறிந்ததே.





தங்களின் பதவிக் காலத்தில் பல நல்ல திட்டங்களை நிறைவேற்றியிருக்கலாம். முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்திற்கான நிரந்தர திட்டங்களை தீட்டியிருக்கலாம். வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கான தீர்வுகளை நோக்கி நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கலாம். அரசியல் கைதிகளுக்கான விடுதலை விடயத்தில் தீர்வைக் கண்டிருக்கலாம். இவை எல்லாவற்றையும் செய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள ஒருசிலரின் நடவடிக்கைகளால் எதுவுமே செய்யமுடியாத ஒரு இக்கட்டான நிலைமைக்கு தாங்கள் தள்ளப்பட்டு விட்டீர்கள் என்பதை நான் நன்கு அறிவேன்.

எனவே அவ்வாறான ஒரு சூழ்நிலை தங்களுக்கு மீண்டும் வந்துவிடக்கூடாது என்பதற்காகவே நான் இதனைப் பகிரங்கமான ஒரு அறிக்கையாக விடுக்கின்றேன். இனிமேல் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தமிழரக் கட்சியை உள்ளடக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்ந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என, அன்புடன் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

இழக்கக்கூடாதவற்றை எல்லாம் இழந்து விட்டு ஏங்கித் தவிக்கும் தமிழ் மக்களுக்கு நல்வழிகாட்ட வேண்டிய பொறுப்பை தாங்கள் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொண்டு விட்டீர்கள். அதில் இருந்து நழுவ மாட்டீர்கள் என நான் எண்ணுகின்றேன். தமிழரசுக் கட்சியினருடன் கடந்த காலத்தில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்களை தாங்கள் மறந்திருக்கமாட்டீர்கள். அவ்வாறான ஒரு அனுபவம் மீண்டும் வருவதை தாங்கள் விரும்பமாட்டீர்களென நான் நினைக்கின்றேன். அவர்களுடன் இணைந்து தாங்கள் மீண்டும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதென்பது, தமிழ் மக்களுக்கு நீங்கள் செய்யும் ஒரு மாபெரும் வரலாற்றுத் துரோகமாகும்.

எனவே தமிழரசுக் கட்சி சார்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தாங்கள் வெளியில் வந்து, அரசியல் பணியை மேற்கொண்டு, தங்கள் மனதில் ஏற்கனவே எண்ணியிருந்த, மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய பல நல்ல திட்டங்களை உருவாக்கவேண்டும். இதுவே தமிழ் மக்களின் விருப்பமுமாகும்.

நீங்கள் நீதியரசராக இருந்த போது,அரசியல் சாசன பேரவைக்கு நீங்களும், கலாநிதி நீலன் திருச்செல்வம் மற்றும் பேராசிரியர் ஜெயதேவா உயாங்கொட ஆகியோர் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்ட வேளை, ஒரு ஊடகம் நீங்கள் 22 ஆண்டுகளுக்கு முன்பு முதன் முதலாக நீதிபதியாக நியமிக்கப்பட்டபோது ஆற்றிய உரையை குறிப்பிட்டு, நீங்கள் மூவரும் நாட்டின் இறைமைக்கு முரண்பட்டவர்களென விமர்சனம் செய்ததை கண்டித்து, நான் 23.03.2009 ஆம் திகதி குறிப்பிட்ட ஊடகத்தின் ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தின் ஒருபகுதியை இங்கே தங்களுக்கு அறியத் தருகின்றேன்.

"கௌரவ நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் பெரிதும் மதிக்கப்பட்டு வந்த ஓர் நீதிபதியாவார். அவர் 1987 ஆம் ஆண்டு நீதிபதியாக நியமனம் பெற்றபோது ஆற்றிய உரை சிலரின் விரோதமான விமர்சனத்திற்குள்ளாகி இருப்பதனால் மட்டுமே, அவர் ஓர் நேர்மையான எதற்கும் அஞ்சாதவர் எனப் பெயர் பெற வைத்தது. அவரின் உரை நாட்டின் இறைமைக்கு முரணானதாக இருந்தால், அதற்கு 1987 ஆம் ஆண்டே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டுமேயன்றி, 22 ஆண்டுகளுக்குப் பிறகு,அவர் சிறப்பான நீதிபதி என்ற பெயரை சம்பாதித்த பின் அல்ல. நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் நாட்டிலுள்ள பல இன,மத மக்களால் மதிக்கப்படுபவர். அவரை புலி என முத்திரை குத்த முடியாது. ஒருநீதிபதிக்கே உரித்தான அடக்கத்துடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் மௌனம் சாதித்தே வந்துள்ளார்."

தங்களின் இத்தகைய குணாதிசயங்களால் தான் தங்களை நான் பெரிதும் மதிக்கின்றேன். எங்களுக்கிடையில் எதுவித முரண்பாடும் வந்துவிடக்கூடாது என்பதாலேயே நான் இதுவரை தங்களுடன் அரசியல் பேசவில்லை. தங்களால் காலத்திற்கு காலம் பிரஸ்தாபிக்கப்படும் பிரச்சினைகளில் நிறைய உண்மைஉண்டு.

சில இலக்குகளை அடைய வேண்டுமானால், நாங்கள் இராஜதந்திர ரீதியாகவும், பகைமைக்கு இடம் கொடாமலும், நிதானமாகவும் செயற்பட வேண்டும். எனவே தாங்கள் இந்தச் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன் படுத்தி, எமது மக்களின் நன்மை கருதி தங்களின் கடும் போக்கை சற்று தளர்த்தி, எமது மக்களின் எதிர்காலத்தை சுபீட்சமாக்குவீர்களென எதிர்பார்க்கின்றேன் என ஆனந்தசங்கரி அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ-7)



யாழ். பண்ணாகம் வடக்கு அ.மி.த.க.பாடசாலையில் மாணவ முதல்வர்கள், வகுப்பு முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அதிபர் ஸ்ரீபன்றெக்ஸ் தலைமையில் இடம்பெற்றது.

# காணாமலாக்கப்பட்டோர் அனைவரும் புலிகளுடன் தொடர்புடையவர்களாம்

## அதற்காக பாதுகாப்பு பிரதானியை தண்டிக்க முடியாது





(கொழும்பு)

பாதுகாப்பு படைகளின் பிரதானி மீதான குற்றச் சாட்டில், காணாமல் ஆக்கப்பட்டோர் அனைவருமே விடுதலைப்புலிகளுடன் தொடர்புபட்டவர்கள், ஆயுத மோதலின் போதே பல புலிகள் காணாமல் போனார்கள். இவர்கள் குறித்து பாதுகாப்பு படைகளின் பிரதானியை தண்டிக்க நினைப்பது கண்டிக்கத்தக்கது என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சுயாதீன அணி தெரிவித்துள்ளது.

கடத்தப்பட்டவர்கள் மாணவர்களா, அல்லது வேறு யாருமா எனத் தெரியாது. ஆனால் இந்த காலத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு, கடத்தல், கொலை, கைதுகள் என அனைத்துமே விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்டவை எனவும் அவ்வணி தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சுயாதீன அணியினர் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே பாராளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா, எஸ்.பி.திஸாநாயக்க ஆகியோர் மேற்கண்டவாறு தெரிவித்தனர். (இ-7)


# பாரதம்

## 7 தமிழர்கள் விடுதலை விவகாரம்

# தமிழக ஆளுநர் பன்வாரிலால் உள்துறை அமைச்சருக்கு அறிக்கை

(சென்னை)

பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்ய தமிழக அமைச்சரவை பரிந்துரை செய்துள்ள நிலையில், இது தொடர்பாக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் உள்துறை அமைச்சகத்துக்கு அறிக்கை அளித்துள்ளார்.



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு 25 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருக்கும் பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்ய தமிழக அமைச்சரவை ஆளுநருக்கு பரிந்துரை செய்தது. இது தொடர்பாக முடிவெடுக்க ஆளுநர் சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்தி வருகின்றார்.

இந்நிலையில். இந்த விவகாரம் தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு பன்வாரிலால் புரோகித் அறிக்கை அனுப்பியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (7)

## புழல் சிறையில் சொகுசு வாழ்க்கை

# அனுமதியின்றி வைக்கப்பட்டிருந்த தொலைக்காட்சி , வானொலிகள் பறிமுதல்




(சென்னை)

சென்னை புழல் சிறைச்சாலையில் அனுமதியின்றி வைக்கப்பட்டிருந்த தொலைக்காட்சிப் பெட்டிகள். வானொலிகளை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

தமிழக சிறைச்சாலைகளில் தொலைபேசி பாவனை தாராளமாக இருப்பதாகவும், கஞ்சா உள்ளிட்ட தடை செய்யப்பட்ட பொருட்களை கைதிகள் பயன்படுத்தி வருவதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அதிகாரிகள்-இலஞ்சம் பெற்றுக்கொண்டு இந்த வசதிகளை செய்துகொடுப்பதாகவும் புகார் எழுந்துள்ளது.

இதுபற்றி விசாரிக்க மனித உரிமை ஆணையம் உத்தரவிட்டது. அதன்படி சிறைச்சாலைகளில் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. புழல் சிறைச்சாலையில் கைதிகளுக்கு சொகுசு வசதிகள் செய்யப்பட்டிருக்கும் புகைப்படக் காட்சிகளும் வெளியாகி உள்ளன.

இந்நிலையில், புழல் சிறையில் சிறைத்துறை டிஐஜி முருகேசன் தலைமையில் பொலிஸார் நேற்று சோதனையில் ஈடுபட்டனர்.

சிறை வளாகத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் சோதனையிட்டனர்.

அப்போது, தண்டனைப் பிரிவில் அனுமதியின்றி தொலைக்காட்சி மற்றும் வானொலிகள் இருந்தது தெரியவந்தது.

இதையடுத்து, 18 தொலைக்காட்சிகள், 2 வானொலிகள் பறிமுதல் செய்யப்பட்டன. (7)

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகளின் விடுதலையை ஏற்றுக்கொள்கிறேன்

## புதுச்சேரி முதல்வர் நாராயணசாமி உடன்பாடு

(சென்னை)

ராஜீவ் கொலை குற்றவாளிகளை விடுவிப்பதில் தனக்கு தனிப்பட்ட ரீதியில் மாற்றுக் கருத்துக்கள் இருந்தாலும், காங்கிரஸ் கட்சிக்காகத்தான் அவர்களின் விடுதலையை ஏற்றுக்கொள்வதாக புதுச்சேரி முதல்வர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் கடந்த புதன்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேற்படி தெரிவித்தார்.

காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி மற்றும் அவரது சகோதரி பிரியங்கா காந்தி ஆகியோர் குற்றவாளிகளை மன்னித்து விடுவிக்க கூறியுள்ளதால். தாமும் அதற்கு உடன்படுவதாக கூறினார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கடந்த 28 வருடங்களுக்கு மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளன், நளினி, முருகன், சாந்தன் உள்ளிட்ட ஏழுபேரை விடுவிப்பது தொடர்பான வழக்கில், அதிகாரத்தை மாநில அரசிடம் ஒப்படைத்துள்ளது உச்ச நீதிமன்றம்.

இந்நிலையில், மாநில அரசு குற்றவாளிகளை விடுவிப்பது தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றிவிட்டு ஆளுநரின் அனுமதிக்காக காத்திருக்கும் நிலையில் அவர்களை விடுவிப்பது தொடர்பில் பல்வேறு தரப்பினரும் தமது அபிப்பிராயங்களை கூறிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# ஹபீஸ் சயீத்தின் இயக்கம் தன் பணிகளை மேற்கொள்ளலாம்

## பாக்.உச்சநீதிமன்றம் அனுமதி

(இஸ்லாமாபாத்)

ஹபீஸ் சயீத்தின் ஜே.யூ.டி இயக்கம் நடத்தி வரும் தொண்டு நிறுவனம் தனது செயற்பாடுகளை மேற்கொள்ள பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

மும்பை 26/11 பயங்கரவாதத் தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டதாகக் கருதப்படும் ஜமாத் உத்தவா தலைவர் ஹபீஸ் சயீத், ஜே.யூ.டி. என்ற அமைப்பையும் அந்த அமைப்பு மூலமாக தொண்டு நிறுவனம் என்ற பெயரில் பலாஹி இன்சனியாத் என்ற அமைப்பையும் நடத்திவந்தார்.

ஐக்கிய நாடுகள் அவையின் தடைப்பட்டியலிலும் உள்ள ஹபீஸ் சயீத்தின் இயக்கங்களுக்கு பாகிஸ்தான் அரசு அண்மையில் தடை விதித்தது.

தனிநபர்கள், நிறுவனம் என யாரும் அந்த நிறுவனத்துக்கு நிதி உதவி செய்யவும் பாகிஸ்தான் அரசு தடை விதித்து உத்தரவிட்டது.

பாகிஸ்தான் அரசின் தடையை எதிர்த்து, லாகூர் உயர் நீதிமன்றத்தில், ஹபீஸ் சயீத் தரப்பு முறையிட்டது. இந்த முறையீட்டை விசாரித்த லாகூர் உயர் நீதிமன்றம், ஹபீஸ் சயீத்தின் அமைப்புகள் சமூகப் பணிகளை மேற்கொள்ள இடைக்கால அனுமதியளித்து உத்தரவிட்டது.

லாகூர் உயர் நீதிமன்ற உத்தரவு பாகிஸ்தான் அரசின் முடிவுக்கு எதிராக இருந்ததையடுத்து, உச்ச நீதிமன்றத்தில் பாகிஸ்தான் அரசு மேன்முறையீடு செய்தது.

இந்த மனுவை விசாரித்த பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம், பாகிஸ்தான் அரசின் கோரிக்கையை நிராகரித்ததோடு, ஹபீஸ் சயீத்தின் இயக்கம் சமூகப் பணிகளை மேற்கொள்ள அனுமதி அளித்துள்ளது. (7)

## ராஜீவ் கொ

# என்னைப் பரா

# எனக்கு வழங்கு

## சாந்தனின் தாய் த

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றச்சாட்டு சிறைத் தண்டனை அனுபவித்து வரும் சாந்தனின் தாயார், முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிக்கு கடிதம் எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்தில் இருந்து



சாந்தன்



# பஸ் கவிழ்ந்து விப



# அமெரிக்காவுக்கு எ

## அல் கொய்தா

(வோஷிங்டன்)

அமெரிக்காவுக்கு எதிராக மேலும் தீவிரவாத தாக்குதல்களை நடத்துவதற்கு அல் கொய்தா தீவிரவாத குழுவின் தலைவர் அயமான் அல் ஸவாஹ்ரி அந்தத் தீவிரவாத குழுவின் ஆதரவாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அமெரிக்க இரட்டைக் கோபுரங்கள் மீதான 9/11 தாக்குதல் ஞாபகார்த்த தினத்தையொட்டி வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே



# கொலை வழக்கு
# மரிக்க என் மகனை
# குமாறு கோருகிறேன்
## தமிழக முதல்வருக்கு கடிதம்




சாந்தனின் தாயார் மகேஸ்வரி தமிழக முதல்வருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில் மகனின் விடுதலைக்கு பரிந்துரைத்த உங்களுக்கு என் குடும்பம் நன்றிக் கடன்பட்டுள்ளது. வெகுவிரைவில் என் மகன் என்னிடம்கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

இறுதிக்காலத்தில்என்னை பராமரிக்க எனது மகனை எனக்கு வழங்குமாறு கோருகிறேன் என உருக்கமாக கோரிக்கை விடுத்து குறித்த கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார். (7)

# சிரியா இரத்தக்களரியாக மாற ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது
## ஐ.நா. பொதுச்செயலாளர் கோரிக்கை

(டமாஸ்கஸ்)

சிரியாவின் இட்லிப் மாகாணம் இரத்தக்களரியாக மாற அனுமதிக்கக் கூடாது என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

சிரியாவில் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான போர் தீவிரமடைந்து வருகிறது. கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள இட்லிப் மாகாணத்தில் சிரிய அரசும், ரஷ்யாவும் கடும் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில் குறித்த பகுதியில் சிக்கியுள்ள மக்களின் தற்போதைய நிலை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே ஐ.நா. பொதுச் செயலாளர் அன்ரனியோ குற்றேரஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

சிரியாவில் கிளர்ச்சியாளர்களின் இட்லிப் மாகாணத்தில் கடும் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

ஏராளமான பொதுமக்கள் கிளர்ச்சியாளர்கள் பகுதியில் சிக்கிக் கொண்டுள்ளனர். சிக்கிக் கொண்டுள்ள மக்களை அப்பகுதியிலிருந்து மீட்க வேண்டும். இட்லிப்மாகாணம் இரத்தக்களரியாக மாற அனுமதிக்கக் கூடாது.

கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான தாக்குதலில் பொதுமக்கள் உயிர் விலையாக்கப்படாமல் ரஷ்யாவும், ஈரானும் வழி தேட வேண்டும் என மேலும் தெரிவித்தார். (7)

# பத்து; 13 பேர் உயிரிழப்பு



(காஷ்மீர்)

இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் பயணிகளுடன் வந்த பஸ் ஒன்று பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக் குள்ளானதில் 13 பேர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில்பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் கிஷ்ட்வார் மாவட்டத்தில் நேற்றுக் காலை பயணிகளை ஏற்றிச்சென்ற சிறிய ரக பஸ் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து 300 அடி பள்ளத்தாக்கில் கவிழ்ந்தது. இந்த விபத்து குறித்து பொலிஸாருக்கு உடனடியாக தகவல் வழங்கப்பட்டு மீட்புப் பணிகள் தொடங்கப்பட்டன.

இந்த கோர விபத்தில் 13 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பஸ்ஸில் சுமார் 30 பேர் வரை பயணம் செய்திருக்கலாம் என கூறப்படும் நிலையில், பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# கடும் சீற்றத்துடன் அமெரிக்காவை தாக்கியது புளோரன்ஸ் புயல்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கடலோரப் பகுதிகளை நேற்று புளோரன்ஸ் புயல் தாக்கியதையடுத்து. பலத்த காற்று வீசுவதால் பல்வேறு பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் 1.5 இலட்சம் மக்கள் இருளில் தவிக்கின்றனர்.

அமெரிக்காவில் மழைக் காலம் தொடங்கி உள்ள நிலையில், அட்லாண்டிக் கடல் பகுதியில் உருவான புளோரன்ஸ் புயல் அமெரிக்காவின் கிழக்கு பகுதியை நோக்கி வந்தது. இந்த புயல் அடுத்த 48 மணி நேரத்தில் அமெரிக்காவை தாக்கும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதையடுத்து புயல் தாக்கும் என கணிக்கப்பட்ட வடக்கு கரோலினா, தெற்கு கரோலினா, விர்ஜினியா ஆகிய மாநிலங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 30 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்த புயல் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அதிகாரிகள் எச்சரித்ததையடுத்து, 3 மாகாணத்திலும் கடலோர பகுதி மக்கள் மற்றும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

கடற்கரை பகுதிகளில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. 1500க்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்து செய்யப்பட்டன.

இந்த பதற்றமான சூழ்நிலையில், வடக்கு கரோலினாவின் கடலோர பகுதிகளை புளோரன்ஸ் புயல் தாக்கத் தொடங்கியது. கடலோர பகுதிகளில் 100 கிமீ வேகத்தில் கடுமையான காற்று வீசுகிறது. ஆக்ரோஷமாக எழுந்த கடல் அலைகள், கரையோர பகுதிகளை தாக்கியது. இதன் காரணமாக தாழ்வான பகுதிகளில் கடல் நீர் புகுந்தது.

புயல் காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். காற்றின் வேகம் மற்றும் அலைகளின் தாக்கத்தினால் படகு குழாம்கள் சேதமடைந்துள்ளன.

இந்த புயல் தற்போது வலுவிழந்து முதலாம் வகை புயலாக மாறியிருப்பதாக கணிக்கப்பட்டிருந்தாலும், பொதுமக்கள் மிகுந்த பாதுகாப்புடன் இருக்கும்படி மாநில ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த ஆண்டு ஹூஸ்டனில் ஹார்வே புயல் ஏற்படுத்திய தாக்கத்தைப் போன்று இந்த புயலும் பெரிய அளவில் சேதத்தை ஏற்படுத்தும் என அஞ்சப்படுகிறது. (7)

# எதிராக கிளர்ந்தெழுங்கள்
## தா தலைவர் அழைப்பு



அவர் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

இஸ்ரேலிய தூதரகத்தை டெல் அவிவ் நகரிலிருந்து ஜெருசலேம் நகருக்கு இடமாற்றுவதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எடுத்துள்ள தீர்மானம் அமெரிக்கா மீது மேலும் தாக்குதல்களை நடத்துவதை நியாயஸ்தம் செய்வதாகவுள்ளதாக ஸவாஹ்ரி கூறினார்.

அல் கொய்தா தீவிரவாத குழுவின் தலைவர் ஒஸாமா பின்லேடன் 2011 ஆம் ஆண்டு அமெரிக்க விசேட படையினரால் கொல்லப்பட்டதையடுத்து அந்தக் குழுவின் தலைமைப் பொறுப்பை அல் ஸவாஹ்ரி ஏற்றார்.

முஸ்லிம்களின் முதலாவது எதிரியாக அமெ ரிக்கா உள்ளது என வலி யுறுத்தியுள்ளார். (7)

# சர்வதேச நாடுகளின் பாதுகாப்பு உத்தரவாதம் வடகொரியாவிற்கு அவசியம்
## ரஷ்ய ஜனாதிபதி வலியுறுத்து

(பியாங்யாங்)

வடகொரியா அணு ஆயுத சோதனைகளை கைவிட்டுள்ள நிலையில் அதற்கு பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

விளடிவோஸ்டோக்கில் சீனாவின் ஜனாதிபதி மற்றும் ஜப்பான் பிரதமரை சந்தித்த பின்னர், குறித்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த போதே அவர் மேற கண்டவாறு கூறினார்.

மேலும் வட கொரியா விடம் ஆணு ஆயுத சோதனைகளை கைவிட வலியுறுத்தியிருந்த நிலையில் அந்நாட்டுக்கு மாற்றீடாக எவற்றையும் வழங்க முன்வரவில்லை. குறிப்பாக வடகொரியாவுக்கு அமெரிக்கா வழங்குவதாக கூறப்படும் சலுகைகளுடன் சர்வதேச நாடுகளின் பாதுகாப்பு தொடர்பான உத்தர வாதமும் அவசியம் எனத் தெரிவித்தார். மேலும் 1950 களின் முற்பகுதியில் கொரிய யுத்தத்தின் போது ரஷ்யாவும் சீனாவும் வட கொரியாவுடன் நில தொடர்புகளை பேணி வந்தது.

இதன் பின்னர் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உடன் இணைந்து ரஷ்யா வடகொரியாவில் அணுவாயுத பாவனையை இல்லாது ஒழிக்க ஆதரவு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# நினைவேந்தல் நிகழ்வுகளை அரசியல் தேவைகளுக்காக யாரும் பயன்படுத்தாதீர்கள்

## முன்னாள் போராளிகள் கோரிக்கை

(ஏறாவூர்)

நினைவேந்தல் நிகழ்வுகளை அரசியல் தேவைகளுக்கு பயன்படுத்தாது நிகழ்வின் புனிதத்துவத்தை மதித்து அதன்படி நடக்குமாறு முன்னாள் போராளிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முன்னாள் மூத்த போராளிகளான பாலிப்போடி சின்னத்துரை, முத்துக்குமார் மனோகர் (பசீர்காக்கா), ஆத்மலிங்கம் ரவீந்திரா உட்பட முன்னாள் போராளிகள் இணைந்து கடந்த 12 ஆம் திகதி மட்டக்களப்பில் கலந்துரையாடல் மேற்கொண்டனர். இதன் பின்னர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள மாவீரர் நாள் தொடர்பான செய்திக்குறிப்பில்,

கடந்த ஆண்டு நிகழ்ந்த மாவீரர் நாள் நினைவேந்தல்களில் சுய கட்டுப்பாட்டுடன் உணர்வுபூர்வமாகப் பங்குபற்றிய அனைவருக்கும் எமது நன்றிகள். அதேபோல் இந்த ஆண்டு நிகழ்வுகளும் தடம் புரளாமல் நடைபெற வேண்டுமென நாம் விரும்புகிறோம். எனினும் நினைவேந்தல் நிகழ்வுகளைப் பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்த முனைவதை நாம் உணர்கிறோம். அதனைத் தவிர்த்து இந் நிகழ்வுகளின் புனிதத்தைப் பேணும் வகையில் சிலவிடயங்களைக் கவனத்திற்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

அரசியலில் ஈடுபடுவது ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட உரிமை. எனினும் தம்மைப் பிரபல்யப்படுத்துவதற்காக நினைவு தினங்களை வேறு விதங்களில் அனுஷ்டித்து இவ்வாறான மலினப்படுத்தும் முயற்சிகளைக் கைவிடுமாறு வேண்டுகிறோம். கட்சிகளுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுவது விரும்பத்தக்கதல்ல.

கடந்த ஆண்டு போலவே மாவீரரின் பெற்றோரோ திருமணமாகிய மாவீரராகின் மனைவியோ, கணவனோ, பிள்ளைகளோ, முதன்மைச் சுடரை ஏற்றட்டும். இவ்விடயத்தில் மாவீரரின் பதவி நிலைகளைக் கவனத்திலெடுக்கத் தேவையில்லை. பிரிகேடியர் முதல் போருதவிப் படைவீரர் வரை அனைவரும் சமமாகவே அருகருகே விதைக்கப்பட்டுள்ளனர். எல்லோரையும் ஏற்றுக்கொண்டது எமது மண். துயிலுமில்லப் பகுதிகளில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், பொது அமைப்புக்கள், மாவீரர் குடும்பத்தினர் அடங்கிய ஒரு குழுவினை உருவாக்கிக்கொள்ளுங்கள். இந்த நாளின் நோக்கம் முழுமையாக நிறைவேற வேண்டுமென்பதற்காக தலைமை எந்தக் கட்சியினதும் சார்பாக அமைந்துவிடக்கூடாது எனக்கருதுகிறோம். அரசியல்வாதிகளும் எமது மக்கள் மத்தியில் இருந்து உருவானவர்களே. நெருக்கடியான நேரங்களில் அவர்கள் செய்த பங்களிப்பை நாம் நிராகரிக்கவில்லை. எனினும் இந்த நாளின் நோக்கம் திசை திரும்பக் கூடாது என்ற எமது கரிசனையை அவர்கள் புரிந்து கொள்வார்கள் என நம்புகிறோம். அவர்களின் பங்களிப்பு எனும் போது அதனை மீளளிக்குமாறு கோரும் எவரதும் தொடர்பும் வேண்டாம். இதனைக் கூறச் சற்றும் தயங்கத் தேவையில்லை.

வருடா வருடம் மாணவர் நிர்வாகம் மாறிக் கொண்டே போகுமென்பதால் அடுத்த தலைமுறை மாணவர்கள் கடந்த வருடத்தைவிட இன்னும் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்பதில் ஆர்வமாக இருப்பார்கள்.

யுத்த காலத்தில் வெவ்வேறு மாவட்டங்களில் உள்ள துயிலுமில்லங்களில் மாவீரர் விதைக்கப்பட்டனர். தற்போது பெற்றோர் தமது சொந்த மாவட்டங்களில் வசிக்கின்றனர். இவர்களுக்கான போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதிகள் குறித்துக் கவனமெடுக்க வேண்டும்.

மாவீரர் கௌரவிப்பு நிகழ்வுகளில் உரையாற்றுவோர் எந்தவொரு அரசியல் கட்சியினையும் சாடக் கிடைத்த சந்தர்ப்பமாக இதனைக் கருத வேண்டாம். கடந்த ஆண்டு ஓரிரு நிகழ்வுகளில் நடைபெற்ற விடயங்களைக் கருத்திற் கொண்டே இந்த வேண்டுகோளை விடுக்கின்றோம்.

சுடரேற்றிவிட்டு திரும்பும் போது முன்னர் எந்த மன நிலையில் பெற்றோர், உறவினர் இருந்தனரோ அவ்வாறே கருமங்கள் நடைபெறட்டும்.

மேலதிகமாக எந்த நிகழ்வுகளும் தேவையில்லை என்பது எமது அபிப்பிராயம். வலிந்து எந்தத் தரப்பினரோடாவது முரண்பாடுகளை ஏற்படுத்த முனையும் சக்திகளை இனங்கண்டு சாதுரியமாகவும் நினைவு நாளின் மாண்பு குறையாமலும் நடந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-9)

## மைத்திரியின் உயிருக்கு ஆபத்து

# அலரிமாளிகையில் நடக்கும் நிகழ்வுகளுக்கு வீட்டிலிருந்து உணவைக்கொண்டு செல்லவும்

## ஜனாதிபதிக்கு டிலான் அறிவுரை



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அலரிமாளிகையில் நடைபெறும் நிகழ்வுகளுக்குச் செல்லும் போது வீட்டிலிருந்து உணவுகளை எடுத்துச் செல்லுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா அறிவுரை கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பாதுகாப்பு அமைச்சராக இருக்கிறார். இந்த நிலையில் பாதுகாப்பு அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இது விசம் கொடுக்கும் செயற்பாட்டிற்கு ஒப்பானதாகும். இதனாலேயே ஜனாதிபதியான பாதுகாப்பு அமைச்சரும் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அலரிமாளிகையில் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளில் பங்கேற்பதாக இருப்பின் வீட்டிலிருந்து உணவுகளை எடுத்துச் செல்ல வேண்டும் எனத் தெரிவித்தார்.

அத்துடன், ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்படும் போது மக்களுக்கு விசம் கொடுத்து ஆபத்து விளைவித்தது கிடையாது எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

# ஜோன்ஸ்டனுக்கு மீண்டும் விளக்கமறியல்



(கொழும்பு)

முன்னாள் அமைசர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவரை நாளை மறுதினம் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குருநாகல் மேல் நீதிமன்ற நீதவான் மேனகா முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப் பட்டபோதே மூவரையும் நீதவான் நாளை மறுதினம் 17 ஆம் திகதி வரை மீண் டும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

சதொச நிறுவனத்துக்குச் சொந்தமான ஐந்து மில்லியன் ரூபாவுக்கும் அதிக மான பணத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### அந்தக்கணம் என்ன செய்துகொண்டிருந்தீர்கள்?

இந்த உலகம் சரியான ஏமாளி – கோமாளி உலகம். ஒருவன் பார்க்கிற கணத்தில் மற்றவன் என்ன செய்து கொண்டிருக்கிறானோ அதைத்தான் அவன் அதிகம் அல்லது உண்மையாகச் செய்கிறான் என்று நம்புகிறது.

ஒரு காவலாளி சில கணங்கள் அசந்தால் கூட இரவு முழுக்க அவன் தூங்கிக் கொண்டிருந்தான் என்று நம்பு வதும் திடீர் சோதனையின் போது அவன் தற்செயலாக விழித்துக் கொண்டிருந்தால் அடடா! இவனைப் போன்ற உண்மையான காவலாளி வேறு எவனுமே இல்லை என்ற முடிவுக்கு வருவதும் எவ்வளவு பேதமை! ஆனால் இந்தத் தவறுகள் மிகவும் விபரம் தெரிந்தவர்கள் மத்தியில் கூட நடக்கின்றன. உதாரணமாக மேலதிகாரி அலுவலகத்தில் நுழைகிற அந்தக் கணத்தில் கிளார்க் டைப் பிஸ்டுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்தால் மேலதிகாரி இந்த ஆள் வேலையே செய்வதில்லை என்றுதான் முடிவுக்கு வருவார்.

கணவன் வீடு திரும்பும் போது மனைவி தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தால் எப்ப் பார்! எவ்வளவு ஓட்டடை! வீட்டில் என்னதான் பண்ணுகிறாய் நீ? என்று எரிந்து விழுவான். அவள் பூஜையில் இருந்தாலோ சமையல் அறையில் இருந்தாலோ மகனுக்கு பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தாலோ அவனுக்கு மிக நல்ல கருத்து உருவாகும்.

ஒருவர் ஒரு பொறுப்பை நம்மிடம் விட்டுவிட்டுச் சென்று திரும்பும்போது நாம் அந்தப் பொறுப்பை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோமா என்பது மிக முக்கியம். வெகுநேரம் அந்தப் பொறு ப்பைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு ஒரு கணம் நாம் ஒரு பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தோமானால் அல்லது தேநீர் அருந்த நகர்ந்து விட்டால் நம்முடைய உண்மை உணர்வு இங்கே சந்தேகிக்கப்படுகிறது என்று பொருள்.

இந்தப் பெட்டியைப் பார்த்துக் கொள்ளுகிறீர்களா? என்று சொல்லுகிற சக ரயில் பயணி தான் திரும்ப வந்து பார்க்கிறபோது நாம் பக்கத்தில் உள்ளவர்களிடம் திரும்பி உட்கார்ந்து கொண்டு பேசிக் கொண்டிருந்தால் நாம் அவருடைய பெட்டியைப் பற்றி கொஞ்சமும் கவலைப்படவில்லை என்றே நம்புகிறார். ஆனால் நாம் அப்படிப் பேசிக்கொண்டிருந்தால் கூட நம் நினைவெல்லாம் பெட்டியின் மீது தான். அப்பெட்டியின் மீது நம்முடைய ஒரு கை இருந்திருக்க வேண்டும்.

ஆக, எதையும் கண்கூடாக நிரூபிக்க வேண்டிய கட்டாயம் நமக்கு இருக்கிறது என்பதை உணர்ந்தால் பிரச்சினைகள் வராது.!

**லேனா தமிழ்வாணன்**

# மஹோற்சவப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

எழுதுமட்டுவாழ் மிருதங்குளம் அருள்வளர் ஸ்ரீமஹா கணபதிப் பெருமான் திருக்கோயில் திவ்விய மஹோற்சவப் பெருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாட்களுக்கு உற்சவம் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-7)

# மனவளக்கலைப் பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மனவளக்கலை அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இந்த வாரத்திற்கான மனவளக் கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகும்.


தினமும் மாலை 5 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காய கல்பப் பயிற்சிகள் வழங்கப்படும். மேலதிக தகவல்களுக்கு 021222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (இ

# உரிமைகோரவும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் உரிமைகோரப்படாது காணப்படும் மூன்று மின்சார தண்ணீர்ப்பம்பிகளை அதற்குரிய உரிமையாளர் யாராவது இருப்பின் உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு பெற்றுக் கொள்ளுமாறும் தவறின் 2 மாதங்களுக்குப்பின் அரசுடமை ஆக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன் என பதிவாளர் அறிவித்துள்ளார். (இ

# கிராம அபிவிருத்திச்சங்கத்துக்கு பிளாஸ்ரிக் கதிரைகள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை உறுப்பினர் ப.தர்சானந்தின் வேண்டுகோளின் பேரில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபனின் 2018 ஆம் ஆண்டுக்கான மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் கல்வியங்காடு ஜே/113 கிராம அபிவிருத்திச்சங்கத்துக்கான பிளாஸ்ரிக் கதிரைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை கிராம அபிவிருத்தித் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டு மேற்படி தளபாடங்களை சனசமூக நிலைய நிர்வாகிகளிடம் வழங்கினார்.

இதில் யாழ்.மாநகரசபை உறுப்பினர் ப.தர்சானந், கல்வியங்காடு ஜே/113 கிராம அபிவிருத்திச்சங்கத்தின் செயலாளர் ம.கிருஷ்ணா, கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (இ-89)

# நிதி சேகரிக்க அனுமதி வழங்கவில்லை பொலிஸில் முறைப்பாடு செய்யலாம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சில கிராமங்களில் சில தனிநபர்கள் தாம் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இருந்து வருகிறோம் எனத் தெரிவித்து நிதி சேகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக எமக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது.

பிரதேச செயலகம் சார்பாக எந்தவொரு நிதி சேகரிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதற்கு எந்தவொரு நபர்களுக்கோ, அமைப்புக்களுக்கோ, சங்கங்களுக்கோ மற்றும் உத்தியோகத்தர்களுக்கோ பிரதேச செயலகத்தால் அனுமதி வழங்கப்படவில்லை என் பதனை பொது மக்கள் சகலருக்கும் அறியத் தருகிறேன்.

இவ்வாறான நிதி சேகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்கள் அல்லது அமைப்புக்கள் பற்றிய விபரங்களை உடனடியாக தங்கள் கிராம உத்தியோகத்தர்களிடம் அறியத்தருமாறு கேட்டுக்கொள்கிறேன் அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுங்கள் என பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ

# "சிந்தனை செய் மனமே" சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

கதிர் தொலைக்காட்சியின் ஏற்பாட்டில் வல்லிபுர ஆழ்வார் கோவில் வடக்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள கலையரங்கில் இடம்பெற்று வரும் ஆன்மீக நிகழ்வில் இன்று இரவு 8 மணியளவில் கதிர் தொலைக்காட்சியின் காப்பாளரும் ஓய்வு நிலைய அரசாங்க அதிபருமான வே.விஸ்வலிங்கம் தலைமையில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் வேல்.நந்தகுமார் "சிந்தனை செய் மனமே" என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (இ

# "சிவநெறிச் சான்றோன்" விருது வழங்கி கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

உலக சைவத் திருச்சபையால் சைவத்தமிழ் பண்பாட்டு சமூக சேவையாளர் கௌரவிப்பு நிகழ்வு கடந்த 11 ஆம் திகதி மாலை நல்லூர் மனோண்மணி அம்மன் ஆலயத்தில் இடம் பெற்றது.

இதில் இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர்சபை ஆணையாளர் வை. மோகனதாஸின் சமூக, ஆன்மீக சேவையை பாராட்டி "சிவ நெறிச் சான்றோன்" எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (இ-9)

# சி.வை.தாமோதரம்பிள்ளையின் ஜனனதினமும் நினைவுப் பேருரையும்

(யாழ்ப்பாணம்)

சிறுபிட்டிதமிழறிஞர் இராவ்பகதுர் சி.வை.தாமோதரம் பிள்ளையின் 187 ஆவது ஜனன தின விழாவும் நினைவுப் பேருரையும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் வீரசிங்கம்மண்டபத்தில்சி.வை.தா. ஞாபகார்த்த நற்பணி மன்றத் தலைவர் செ.தவநாயகம் தலைமையில் நடைபெறும்.

இதில் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் நினைவுரையையும் "இன்றைய சமஷ்டியின் விஸ்தீரணம்" எனும் தலைப்பில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எ.சுமந்திரன் நினைவுப் பேருரையினையும் வழங்குவர். (இ

# பிணைமுறி மோசடி சம்பவம் ரவிக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)



முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பிணைமுறி மோசடி சம்பந்தமாக விசாரிப்பதற்கான ஆணைக்குழுவில் பொய்ச்சாட்சியம் வழங்கியதற்கு எதிராகவே அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆணைக்குழு முன்னிலையில் பொய்ச்சாட்சியம் வழங்கிய காரணத்தால் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று ஆணைக்குழுவின் அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# காட்டு யானைகளால் வருடாந்தம் எண்பது விவசாயிகள் உயிரிழப்பு

(கொழும்பு)



காட்டு யானைகளின் தாக்குதலுக்கு இலக்காகி, வருடாந்தம் 80இற்கும் அதிகமான விவசாயிகள் உயிரிழப்பதாக, விவசாயத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இரவு நேரங்களில் விலங்குகளிடமிருந்து தமது பயிர்ச் செய்கைகளை பாதுகாக்கச் செல்லும் போதும் அதிகாலையில் வீடுகளுக்குத் திரும்பும் போதும், இவ்வாறு யானைத் தாக்குதலுக்கு இலக்காவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எனவே காட்டு யானைகளால் ஏற்படும் பாதிப்பு மற்றும் உயிராபத்துக்களைத் குறைப்பது தொடர்பில், வன ஜீவராசிகள் அமைச்சர் மற்றும் மேலும் பல நிறுவனங்களுடன் கலந்துரையாடலை முன்னெடுத்து, தற்காலிக தீர்வல்லாமல் நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்ள முடிவு செய்துள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இந்தியாவுடனான உறவை பலப்படுத்த விரும்புகிறோம்

## நாமல் எம்.பி.தெரிவிப்பு



(டில்லி)

வடக்கும் தெற்கும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு ஜனாதிபதி வேட்பாளரையே நாங்கள் எதிர்வரும் தேர்தலில் களமிறக்குவோமென இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினரும்மகிந்த ராஜபக்ஷவின் மகனுமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எமது கட்சி பல கட்சிகளை உள்ளடக்கியுள்ளது. எனவே அனைவரும் ஒன்றிணைந்து ஏற்றுக்கொள்ளக் கூடிய வேட்பாளரைத் தெரிவு செய்வோம்.

இந்தியாவுடன் எமது உறவுகளைப் பலப்படுத்தவே நாங்கள் விரும்புகின்றோம். மத்தள விமான நிலையம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் என்பவற்றை நாங்கள் இந்தியாவின் உதவியுடனேயே நிர்மாணிக்க திட்டமிட்டோம்.

ஆனால் அப்போது இந்தியா முன்வராததால் சீனாவுடன் இணைந்து அவற்றை நிர்மாணித்தோம் என்றும் அவர் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவுடன் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நாமல் ராஜபக்ஷ எம்.பி. அங்கு இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இதனைத் தெரிவித்தார். (இ-7)

# பொதுமக்களைக் கண்டே டளஸுக்கு வயிற்றோட்டம்

## முஜிபுர் சீண்டல்

(கொழும்பு)



கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெருமவுக்கு பால் அருந்தியதால் வயிற்றோட்டம் ஏற்பட்டவில்லை என ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

மாறாக மக்கள் சக்தி ஆர்ப்பாட்டத்திற்கு வந்திருந்த பொது மக்களை கண்டே அவருக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நட்சத்திர ஹோட்டல்களில் சாப்பிடும் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும, வீதியில் இறங்கி பால் பக்கெற்றை அருந்துவார் என நினைக்கவில்லை.

கூட்டு எதிர்க்கட்சியின் ஆர்ப்பாட்ட பேரணியின் போது வழங்கப்பட்ட பால் பக்கெற் தொடர்பில் நாட்டில் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளதால், இது குறித்து விவாதம் ஒன்றுக்கு வருமாறு கூட்டு எதிர்க்கட்சியினருக்கு அழைப்பு விடுப்பதாகவும் இந்த விவாதம் நாடாளுமன்றத்தில் நடத்தப்படுவது முக்கியமா னது எனவும் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சியினர் நடத்திய மக்கள் சக்தி ஆர்ப்பாட்ட பேரணியின் போது சிலர் வழங்கிய பால் பக்கெற்றை பருகியதன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும, மூன்று நாட்கள் சுகவீனமுற்றிருந்தாக கூறியிருந்தமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே முஜிபுர் ரஹ்மான் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பொறுப்பு 'ஆசியானுக்கு' உண்டு

## பிரதமர் ரணில் வலியுறுத்து

(ஹனோய்)

ஆசியாவை கேந்திரமாகக்கொண்டு அடுத்து வரும் சில தசாப்தங்களுக்குள் புதிய உலகப் பொருளாதாரக் கட்டமைப்பைக் கட்டியெழுப்பும் பொறுப்பு ஆசியான் அமைப்புக்கும் ஆசிய பொருளாதார வல்லுநர்களுக்கும் உள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். வியட்நாம் ஹனோய் நகரில் நடைபெற்று வரும் ஆசியான் உலக வர்த்தக மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வில் உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.



"ஆசிய புவிசார் அரசியல் வடிவம்" எனும் கருப்பொருளில் இடம்பெற்ற இம்மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் ஆசியப் பிராந்திய நாடுகளின் அரசியல் போக்குகள் குறித்து கவனம் செலுத்துவது பற்றியும் சுட்டிக்காட்டினார்.

ஆசியப் பொருளாதாரத்தின் எதிர்காலம் இந்து சமுத் திரத்தின் சுதந்திரமான கப்பல் போக்குவரத்திலே தங்கியுள்ளது. பிராந்திய அரசுகளும் இந்து சமுத்திர கடல் வலயத்தைப் பயன்படுத்துவோரும் ஒன்றுபட்டு இணக்கப்பாட்டுடன் சுயாதீனமான கடல்கொள்கையைப் பின்பற்ற வேண்டும்.

புதிய பொருளாதார கோட்பாடுகளுக்கு மத்தியில் ஆசிய பிராந்தியம் எதிர்நோக்கும் சவால்கள், அச்சுறுத்தல்களை வெற்றிகொள்வதற்கான கூட்டுச் செயற்பாடுகள் குறித்தும் இவ்வமர்வில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இக்கலந்துரையாடலை சிங்கப்பூர் 'செனல் நியூஸ் ஆசியா" நிறுவனத்தின் சார்பில் ஜூலி யோ (Julie Yoo) தொகுத்தளித்தார்.

வியட்நாம் பிரதிப் பிரதமரும் வெளிவிவகார அமைச்சருமான பாம் பின் மின், தென் கொரிய வெளிவிவகார அமைச்சர் காங் கியுங் வா, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் தாரா சோனோ மற்றும் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகம் ஆசிய ஆய்வுக் கல்வி குறித்த சர்வதேச நிறுவனத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் கலாநிதி லின் குக் ஆகியோரும் இந்தக்கலந்துரையாடலில் பங்கேற்றனர். (இ-7)

# மகனைத் தூக்கிலிடுங்கள் பிக்குனியாக மாறிய தாய்

## குருநாகலில் சம்பவம்

(குருநாகல்)

தனது மகனைத் தூக்கிலிடுவதை தான் எதிர்க்கப் போவதில்லை என நீதிமன்றுக்கு கடிதம் ஒன்றை எழுத்தி வைத்துவிட்டு, தாய் ஒருவர் பிக்குனியாக துறவறம் பூண்ட சம்பவம் குருநாகல் கிரிபாவ பகுதியில் இடம்பெற்றுள்ளது.





இந்தப் பெண் கிரியால, பளுகொல்ல குண்டகல பிக்குகள் ஆராண்யத்தில் ராஜாங்கனயே தம்மதின்னா என்ற பெயரில் துறவறம்பூண்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிரிபாவ பொலிஸ் பிரிவின் சாலிய அசோகபுல யாய 2 என்ற பகுதியில் வசித்து வந்த 17 வயதான மதுஷானி என்ற மாணவியைக் கொலை செய்த குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் குறித்த பெண்ணின் மகன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் மகனின் செயலைக் கண்டு மனமுடைந்த தாய் நீதிமன்றுக்குக் கடிதம் ஒன்றை எழுதி வைத்துவிட்டு துறவறம்பூண்டுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது,

மதுஷானியின் துயரமான மரணமே தன்னை சாதாரண வாழ்க்கையை கைவிட்டு துறவறம்பூண காரணமாக அமைந்தது.

இந்த மரணம் தனக்கு வாழ்க்கை தொடர்பில் பெரிய வெறுப்பை ஏற்படுத்தியது.

துன்ப துயரங்கள் நிறைந்த இந்த வாழ்வில் இருந்து விடுபடும் திடசங்கற்பத்துடன் மீதமுள்ள காலத்தை தியானத்தில் கழிக்க உள்ளேன்.

மாணவியை கொலைசெய்த எனது மகனைத் தூக்கிலிடுவதை நான் எதிர்க்கவில்லை.

துறவறம் பூண தனக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்த மதுஷானியின் வீட்டுக்குச் சென்று, அந்த மகளுக்காக பிரார்த்தனை செய்து, தர்ம உபதேசம் செய்வதே தனது பெரிய எதிர்பார்ப்பாகும் என் அக் கடிதத்தில் தெரிவித்துள்ளார். (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## எண் 6 (சுக்கிரன்)

## (சுகபோகவான்கள்)

**சுக்கிர ஆதிக்கத்தினரின் உடல் தோற்றம், உணவு, நோய் மற்றும் மருத்துவ முறைகள்**

ஆண்களும் பெண்களைப் போலவே கவர்ச்சியாகக் காட்சியளிப்பார்கள். அழகுக்கு இவர்கள்தான் ஆதாரம். நீண்ட கண்கள் காந்த சக்தி மிக்க பார்வை. முடி அழகாக சுருண்டிருக்கும். வளைவில்லாத நேரான மூக்கு இருக்கும். பற்கள் உறுதியாக பிரகாசமானதாக இருக்கும். கன்னம் சதைப் பற்றுடன் இருக்கும். உடலமைப்பு செதுக்கிய சிற்பம் போல இருக்கும். பார்க்க ரம்மியமாகக் காட்சியளிப்பார்கள். குளிர்ந்த பார்வையும், நடுத்தரமான உயரமும் உடையவர்கள். உடல் மென்மையாக இருக்கும். மேல்வாய் சதைப்பற்றுடன் இருக்கும். கழுத்து மிக வலுவாக சதைப்பற்றுடன் இருக்கும். வாயைத்திறந்தலே சிரிப்பது போல இருக்கும். அங்கத்தை அளவெடுத்துச் செய்தது போல கனகச்சிதமாக இருப்பார்கள். வேலை செய்யாத சோம்பேறிகளுக்கு சதைப் பற்று அதிகமாக இருக்கும். வயதானபோதும் அழகு குறையமாட்டார்கள். காதலுக்கு ஏற்ற மனதைப் போலவே உடலையும் உடையவர்கள். நடை, உடை, பாவனைகளில் பெண் தன்மை கலந்து காணப்படும். இதய பலவீனம், இதய சம்பந்தப்பட்ட நோய்கள், இரத்த ஓட்டம் சம்பந்தமான நோய்கள், உடல் பலவீனம், ஜீவசக்தி அதிகம் விரையம் செய்தால் வரும் பலவீனம், மேக நோய்கள், மலச்சிக்கல் போன்றவை வரும். இவ்வெண்ணில் பிறந்த பெண்கள் செதுக்கி வைத்த சிலைபோல இருப்பார்கள். கவர்ச்சியான முக அங்க அமைப்புடையவர்கள். ஸ்பரிசத்திற்கு ஏற்ற மிக மென்மையான உடலைப் பெற்றவர்கள். உடலில் சதைப்பற்று அளவுடன் கனகச்சிதமாக இருக்கும். கண்கள் காந்தப் பார்வையுடையன. இவர்கள் காற்றோட்டமான வீட்டு அமைப்பு உள்ள இடங்களில் வசிப்பது நல்லது. பழங்களில் முலாம் பழம், மாதுளை, அப்பிள், அத்தி, ரோஜா இதழ்களைப் புசிக்கலாம்.

**சுக்கிர ஆதிக்கத்தினரின் தொழில்கள்**

கலைத்தொழில்கள், உத்தியோகத்தில் அதிகாரமிக்க பதவிகள், விலை உயர்ந்த நவரத்தின வியாபாரம், வெள்ளி, ஜவுளி வியாபாரம், நவநாகரிக விலை உயர்ந்த பொருட்கள் விற்றல், பெண்களுக்குத் தேவையான அழகுசாதனப் பொருட்கள் விற்றல், அழகு நிலையம் நடத்துதல், ஆடம்பரப் பொருட்கள், ஸ்ரேஷனறி, மளிகை, வாசனைத் திரவியங்கள், நவீன பஞ்சு மெத்தை, தலையணை வியாபாரம், கட்டுமானப் பொருட்கள் விற்பனை, கண்ணாடி, மருந்து, கலைநயமிக்க பொருட்கள் தயாரிப்பு, விற்றல், ஓவியம் வரைதல், சினிமாப்படம் தயாரிப்பு, நடித்தல், புரோகிதம், பைனான்ஸ் கம்பனி நடத்துதல், திருமணத்தரகர்கள் போன்ற தொழில்கள் வெற்றியைத் தரும். உல்லாசம் சம்பந்தப்பட்ட-சுற்றுலா சம்பந்தப்பட்ட தொழில்கள், விடுதி, மாளிகை கட்டுதல், பாலியல் மருத்துவம் போன்ற தொழில்கள் மூலம் பெரும் பணம் சம்பாதிப்பார்கள்.

**சுக்கிரன் ஆதிக்கத்தினரின் அதிர்ஷ்ட நாட்கள்**

6,15,24,9,18,27 ஆகிய திகதிகள் அதிர்ஷ்ட நாட்கள் ஆகும். திகதி, மாதம்,




வருடம் மூன்றையும் கூட்டி வரும் கூட்டு எண் 6,9 வரும் நாட்களும் அதிர்ஷ்ட தினங்கள் ஆகும். மேற்கண்ட நாட்களில் ஈடுபடும் காரியங்கள் முழு வெற்றியைத் தரும். நீடித்து நிலைக்கக் கூடிய காரியங்களை கூட்டு எண் 6 வரும் நாட்களில் செய்து வர வேண்டும். அதேநேரத்தில் திகதி எண்ணும் சாதகமாக அமைய வேண்டும்.

**துரதிர்ஷ்ட நாட்கள்**

தாங்கள் மேற்கொள்ளும் எந்தவொரு புது முயற்சியையும் 3, 12, 21, 30 இந்த நாட்களில் செய்தால் மிகப் பெரிய தோல்விகள் கிடைக்கும். திகதி மற்றும் கூட்டு எண் 3 வரும் நாட்களில் எந்தவொரு புது முயற்சியிலும் ஈடுபடக்கூடாது. பெரும் நட்டம் ஏற்படும். தவறான நாளில் பெற்ற வெற்றிகள் நிலைக்காது உடனே பறி போய்விடும். ஆகாத நாட்களில் முக்கியமான காரியங்களில் ஈடுபடாமல் அமைதியாக இருந்தாலே போதும். அதிர்ஷ்டமடைய துரதிர்ஷ்ட நாட்களை விலக்கி அதிர்ஷ்ட நாட்களில் முக்கியமான காரியங்களை மேற்கொண்டாலே போதும். பன்மடங்கு அதிர்ஷ்டம் விருத்தியாகும்.

**அதிர்ஷ்டமான நிறங்கள்**

பச்சை, வெளிர்நீலம், வெளிர் பச்சை போன்ற வர்ணங்கள் சூரிய ஆதிக்கத்தினரின் அதிர்ஷ்ட நிறங்களாகும். அணியும் ஆடைகள், வசிக்கும் இடங்கள், பேனா, பென்சில், விசிட்டிங் காட்டுகள், வண்டி, வாகனம் போன்ற அனைத்துவிதமான உபயோகப் பொருட்களையும் அதிர்ஷ்ட நிறங்களில் உபயோகித்து வந்தால் அதிர்ஷ்டம் விருத்தியாகும், அதிர்ஷ்ட நிற பேனாவால், அதிர்ஷ்ட நிற மையால் கையெழுத்திட்டு வரவேண்டும். விரைவான அதிர்ஷ்டம் கிடைக்கும்.

**துரதிர்ஷ்டமான நிறங்கள்**

கறுப்பு, கோப்பி கலர், இருண்ட நிறங்கள், சிவப்பு, ரோஸ், ஒரேஞ் நிறங்கள் இவர்களுக்கு வீண் அலைச்சலையும் மனக் குழப்பத்தையும் ஏற்படுத்தும். பல நிறங்கள் கலந்த இருண்ட நிறங்கள் இவர்களுக்கு காரியத் தடைகளையும் காரியத் தோல்வியையும் ஏற்படுத்தும்.

**அதிர்ஷ்ட இரத்தினங்கள்**

மரகதம், ஜேட், டர்க்குவாஸ், பெரில், அக்கோமரின், டெரிடாட், மர்குயூஸ் போன்றவை அதிர்ஷ்ட இரத்தினங்களாகும். வலது கை மோதிர விரலில், தோலில் உரசும்படி அணிந்து கொண்டால் நல்ல அதிர்ஷ்டம் விருத்தியாகும். அதிர்ஷ்ட இரத்தினங்களை தோஷமில்லாததாகப் பார்த்து அவரவர் அதிர்ஷ்ட நாளன்று வாங்கி அதிர்ஷ்ட நாளில் அணிந்து கொள்ள வேண்டும்.

**அதிர்ஷ்ட உலோகம்**

வெள்ளி இவர்களின் அதிர்ஷ்ட உலோகமாகும். காப்பு, அட்சரங்கள் போன்றவற்றை அதிர்ஷ்ட உலோகங்களில் பதித்து வணங்கி வரலாம். அதிர்ஷ்ட இரத்தினங்களை வெள்ளி மோதிரத்தில் பதித்து அணிந்து கொள்ளலாம். அதிர்ஷ்டம் பன்மடங்கு விருத்தியாகும்.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

மேலும் நடனம், இசை, நாடகம் ஆகிய கலைகளும் இக் கோவில்களை மையமாகக் கொண்டு வளர்க்கப்பட்டன. இக் கோவில்களில் பல்வேறுபட்ட இசைக் கலைஞர்கள் விழாக் காலங்களிலும் ஏனைய சிறப்பான நாட்களிலும் இசை விருந்துகளை வழங்கியிருந்தனர். தென்னிந்திய நாகரிகத்தின் முக்கிய கலைகளான பரதநாட்டியம், கர்நாடக இசை ஆகியவற்றின் வளர்ச்சிக்கு இக் கோவில்கள் பெரும் பங்களிப்புச் செய்திருக்கின்றன என்பதனையும் அறியமுடிகிறது.

இலங்கையில் சோழர் காலத்தில் கட்டப்பட்ட சைவ, வைணவ, பௌத்த கோவில்கள் என்பன சோழர் கால கட்டடப் பாணியிலேயே அமைந்துள்ளன. பொலநறுவையிலும் பதவியாவிலும் உள்ள சோழர் காலச் சைவக்கோவில்கள், திருகோணமலையில் பெரியகுளம் என்னுமிடத்தில் உள்ள பௌத்த பள்ளியாகிய ராஜராஜப் பெரும் பள்ளி என்பன சோழர்காலக் கட்டடப் பாணியில் அமைந்துள்ளன.

இவ்வாறே பிற இடங்களிலும் கட்டப்பட்ட சைவ, வைணவ, பௌத்த கோவில்களும் சோழர் கட்டடப் பாணியைப் பின்பற்றியதாகவே இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும், சிற்பக்கலை, குறிப்பாக உலோகச் சிற்பக்கலை சோழர்கால கலை வளர்ச்சியின் உச்சக் கட்டத்தை அடைந்திருக்கின்றது.உதாரணமாக, சோழர் கால உலோகச் சிற்பங்களுள் உன்னத இடத்தைப் பெறும் நடராஜர் சிலை இதற்கான நல்லதொரு எடுத்துக் காட்டாகும்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து பொலநறுவை, அநுராதபுரம் போன்ற இடங்களில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகள் மூலம் சோழர் ஆட்சிக் காலத்துக்குரிய வெண்கலச் சிற்பங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

நடராஜர் சிலைகளோடு சோமஸ்கந்தமூர்த்தி, பார்வதி, சிவகாமி சுந்தரி, பிள்ளையார், சண்டிகேசுவரர், சுந்தரமூர்த்தி நாயனார், காரைக்கால அம்மையார் போன்றோரின் சிலைகளும் காணப்பட்டன. இலங்கையில் சோழர் காலக் கட்டடக் கலையில் திராவிடக் கட்டடப் பாணி காணப்பட்டதுபோல், சிற்பங்களிலும் அவ்வாறான கலை அம்சங்கள் காணப்படுவதை ஆனந்த குமாரசாமி போன்ற கலை விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

உதாரணமாக, கி.பி பதினொராம், பன்னிரெண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வெண்கலப் புத்தர் சிலைகள் கிழக்கு இலங்கையில் திருக்கோயில் என்னும் இடத்தில் கிடைத்துள்ளன. இப் புத்தர் சிலைகள் தென்னிந்தியாவில் நாகபட்டினத்தில் கிடைக்கப் பெற்ற சோழர் பாணியில் அமைந்த வெண்கலப் புத்தர் சிலையை ஒத்ததாகக் காணப்படுகின்றன.

இதேபோன்று பொலநறுவை ஆட்சிக்காலப் பகுதிக்குரிய பௌத்த மதம் சார்ந்த கட்டடம், சிற்பக் கலைகளின் கலை வடிவங்களும் வடக்கு, வடமேற்குப் பிரதேசங்களிலும் காணப்படுகின்றன.


44

வானவன்மாதேவி ஈச்சரம்

“சோழராட்சிக் காலத்தில் கந்தளாயிலும் ஈஸ்வரன் கோவில்கள் இருந்திருக்கின்றன. இக் கோவில்களுள் ராஜராஜேஸ்வரம் என்னும் கோயிலும் இருந்திருக்கலாம் எனக்கொள்ள இடமுண்டு. பதவியாவில் ரவிகுல மாணிக்க ஈஸ்வரம், மதிரி கிரியாவில் பண்டித சோழ ஈஸ்வரம் போன்ற கோவில்களும் இருந்திருக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக பொலநறுவை சோழரின் ஆதிக்க மையமாக இருந்ததன் விளைவாக அங்கு பல சிவன்கோவில்கள் இருந்திருக்கின்றன. இவற்றுள் மிகமுக்கியமானது ராஜேந்திர சோழனின் தாயார் பெயரில் கட்டப்பட்ட வானவன் மாதேவி ஈஸ்வரம் என்னும் சிவன் கோவிலாகும்”

## சோழர் ஆக்கிரமிப்பும் அதன் விளைவுகளும் (கி.பி. 900-கி.பி. 1200)

சோழராட்சிக் காலத்தில் கந்தளாயிலும் ஈஸ்வரன் கோவில்கள் இருந்திருக்கின்றன. இக் கோவில்களுள் ராஜராஜேஸ்வரம் என்னும் கோயிலும் இருந்திருக்கலாம் எனக் கொள்ள இடமுண்டு. பதவியாவில் ரவிகுல மாணிக்கஈஸ்வரம், மதிரி கிரியாவில் பண்டித சோழ ஈஸ்வரம் போன்ற கோவில்களும் இருந்திருக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக பொலநறுவை சோழரின் ஆதிக்க மையமாக இருந்ததன் விளைவாக அங்கு பல சிவன்கோவில்கள் இருந்திருக்கின்றன.

இவற்றுள் மிகமுக்கியமானது ராஜேந்திர சோழனின் தாயார் பெயரில் கட்டப்பட்ட வானவன் மாதேவி ஈஸ்வரம் என்னும் சிவன் கோவிலாகும். இலங்கையில் உள்ள சோழர் பாணியில் கட்டப்பட்ட கட்டடங்களுள் மிகச் சிறந்தது வானவன்மாதேவி ஈஸ்வரம் கோவிலாகும்.

இதன் சிறப்பு அக்கோவில் முழுமையாகக் கருங்கல்லாலும் சுண்ணாம்புக் கல்லினாலும் கட்டப்பட்டமையாகும். மேலும் இன்று வரை அழியாது எஞ்சியுள்ள சோழர் காலக் கோவிலாக இது விளங்குகிறது.

இவைகளைத் தவிர வேறும் பல கோவில்களின் அழிபாடுகள் பொலநறுவைப் பிரதேசங்களில் காணப்படுகின்றன. இவைகளுள் முக்கியமானது ஐந்தாவது ஈஸ்வர ஆலயம் எனப் பெயர்பெறும் சிவன் கோவிலாகும். இதன் உண்மையான பெயரை அறிந்து கொள்ளச் சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை.

இவ்வாறு தென்மேற்குப் பிரதேசங்களிலும் சிவன் கோவில்கள் சோழராட்சியின்போது கட்டப்பட்டுள்ளன. குருநாகல் மாவட்டத்திலுள்ள மாகல்ல என்னும் இடத்தில் விக்கிரமசலாக மேக ஈஸ்வரம் என்னும் கோவிலைப் பற்றிக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

பிற்காலத்தில் இக் கோவில் இருந்த இடத்தில் ஒரு பௌத்த நிறுவனம் கட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சோழராட்சி இலங்கையில் நடைபெற்ற வேளையில் சைவசமயம் மிகவும் உன்னத நிலையில் இருந்திருக்கின்றது என்பதனை மேற்கூறப்பட்ட பல்வேறு கோவில்களின் தோற்றத்தைக் கொண்டும் அழிபாடுகளைக் கொண்டும் கூறக்கூடியதாக உள்ளது.

சோழராட்சி நீங்கி, மீண்டும் விஜயபாகு சிங்கள வம்ச ஆட்சியை நிலைநாட்டிய வேளையிலும் சைவசமயம் தொடர்ந்தும் பேணப்பட்டு வந்திருக்கின்றது என்பது வரலாற்று உண்மையாகும்.

விஜயபாகு பௌத்தமதத்தைக் கூடுதலாக ஆதரித்தபோதும், அவன் சைவத்திற்கு எதிரானவனாகச் செயற்பட்டதாக வரலாறுகள் இல்லை. விஜயபாகு பொலநறுவைப் பிரதேசத்திலிருந்த சைவக் கோயில்களைத் திருத்தியமைத்ததோடு சைவக்கோயில்களில் இருந்த பிராமணர்களையும் ஏனையோரையும் ஆதரித்துள்ளான் என்பதனையும் கோவில்களிலும் அரச மாளிகைகளிலும் பிராமணர்களினால் சைவக்கிரியைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதனையும் வரலாறு கூறுகின்றது.

உதாரணமாக, விஜயபாகுவின் இரு மனைவிமார் இந்தியாவில் இருந்து வந்தவர்கள். அவர்களில் ஒருவர் அயோத்தியிலிருந்து வந்த இளவரசி லீலாவதி, மற்றவர் கலிங்கத்திலிருந்து வந்த இளவரசி திரிலோகசுந்தரி. இவர்கள் இருவருமே பௌத்தமதம் சாராதவர்கள். இவர்கள் இந்துமதத்தைச் சார்ந்தவர்கள்.

எனவே இவர்கள் நிச்சயம் தமது சமயக் கிரியைகளைத் தமது மதம் சார்ந்துதான் செய்திருப்பார்கள். அத்தோடு திரிலோ்கசுந்தரி பௌத்த மதத்தை எதிர்த்தாக பாளி வரலாறு கூறுகின்றது. இவளுடைய மகன் விக்கிரமபாகு மணம் செய்த இளவரசியும் பௌத்தமதம் சாராதவள்.

விஜயபாகுவின் ஒரேயோரு மகனாக திரிலோக சுந்தரிக்குப் பிறந்த இவன் ஒரு சிவபக்தன் என்று வரலாற்றாசிரியர் ஏற்றுக் கொள்கிறார்கள். இவன் தன்னை -பார்வதிபதி தத்தாஸீர் மகாவிருஷ- (பார்வதியின் கணவனாகிய சிவனின் அருளைப் பெற்ற பேர் இடபம்) என்ற விருதைத் தாங்கி, தன்னை ஒரு சிவபக்தனாக உலகுக்குக் காட்டியவன்.

மேலும், விக்கிரமபாகுவின் மகன் கஜபாகு, ஒரு சைவ சமயத்தவனாக ஆட்சி நடத்தியிருக்கின்றான். திருகோணமலைக் கோணேஸ்வரத் திலும், கந்தளாயில் இருந்த சதுர்வேதி மங்கலத்திலும் சைவக் கிரியைகள் நடத்தியிருக்கின்றான். தனது இறுதிக் காலத்தில் பொலநறுவையை விட்டு நீங்கி, கந்தளாயில் சைவனாக வாழ்ந்திருக்கின்றான்.

பொலநறுவைக்கால இலங்கை மன்னர்கள் வரிசையில் அடுத்து வருகின்ற பராக்கிரமபாகு, நிஸ்ஸங்கமல்லன் போன்றவர்கள் பௌத்த மதத்தவர்களாக இருந்தபோதிலும் சைவத்தையும் ஆதரித்துள்ளார்கள்.

இவைதவிர, பொலநறுவையில் கடைசியாக ஆண்ட கலிங்கமாகன் சைவத்தை மட்டும் ஆதரித்த ஒரு மன்னனாகவும் பௌத்த மதத்திற்கு எதிராகச் செயற்பட்டவனாகவும் பாளி மற்றும் சிங்கள ஏடுகளிலிருந்து அறியமுடிகிறது.

எனவே, பொலநறுவைக் கால சிங்கள வம்ச ஆட்சியின் போது, பௌத்தமதத்தைச் சார்ந்த மன்னர்களும் ஏனையவர்களும் சைவசமயத்தை ஆதரித்தது மட்டுமல்லாமல் பிராமணியக் கிரியைகளிலும் ஈடுபட்டுள்ளனர். அரச சபையில் நடைபெற்ற பிராமணியச் சடங்குகள் பற்றிய விபரங்களை பாளி வரலாற்று ஏடுகளிலும் காணமுடிகிறது.

(தொடரும்)

# முப்படை பிரதானி குறித்த விசாரணையில் ஜனாதிபதி மைத்திரி தேவையற்ற தலையீடு

## சுமந்திரன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையின் முப்படைகளின் பிரதானி விவகாரத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலையிடுகின்றார் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சி.ஐ.டியினரின் விசாரணைகளில் நேரடியாக தலையிடுவதன் காரணமாக வேறு வழியில்லாமல் இந்த விவகாரம் குறித்து சர்வதேச விசாரணையை கோரவேண்டியுள்ளது என சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஜனாதிபதியொருவரே இந்த விவகாரத்தில் தலையிடுவதன் காரணமாக உள்ளூர் நீதிப் பொறிமுறை மூலம் பாதிக்கப்பட்டவர்கள் நீதியை எதிர்பார்க்க முடியாத நிலை காணப்படுவதாகவும் சுமந்திரன் தெரிவித்தார்.

ரவிராஜ் கொலை மற்றும் கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டமை போன்ற சம்பவங்களுடன் தொடர்புடையசந்தனபிரசாத் தலை மறைவாகயிருப்பதற்கு உதவினார் என முப்படைகளின் பிரதானி ரவீந்திர விஜய குணவர்த்தன மீது சி.ஐ.டியினர் குற்றம்சாட்டியுள்ள நிலையிலேயே ஜனாதிபதி



இந்த விடயத்தில் தலையிடுகின்றார் என சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ரவிராஜ் படுகொலை தொடர்பில் பல வழக்குகள் இன்னமும் நீதிமன்றின் முன்னால் உள்ளன,

இந்நிலையிலேயே ஹெட்டியாராச்சி தலைமறைவானார் எனவும் சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தவிர 11 தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பிலும் அவர் மீது குற்றச்சாட்டுகள் உள்ளன.

முப்படைகளின் பிரதானியொருவர் ஜனாதிபதிக்கு தெரிவிக்காமல் மெக்சிக்கோ சென்றிருக்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ள சுமந்திரன் முப்படைகளின் பிரதானி தொடர்பில் தற்போது எழுந்துள்ள குழப்பநிலைக்கு மைத்திரி பொறுப்பேற்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி படையினர் விவகாரங்களில் தலையிட்டுள்ளமை பொறுப்புக்கூறலில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு நீதிசெயற்பாடுகளில் ஜனாதிபதியொருவர் தலையிடுவது குறித்து தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆழ்ந்த கவலையடைந்துள்ளது எனவும் தெரிவித்துள்ள சுமந்திரன் முப்படைகளின் பிரதானி விவகாரம் உயர்மட்டத்தில் காணப்படும் அரசியல் தலையீடுகளை புலப்படுத்தியுள்ளது.

இலங்கை படையினரால் பாதிக்கப்பட்டவர்கள் எந்த அடிப்படையிலும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து நீதியை எதிர்பார்க்க முடியாது.

ஜனாதிபதியே விசாரணைகளில் தலையிடுவதால் உரிய நீதி கிடைப்பதை உறுதி செய்வதற்காக ஐ.நா. தலையிடவேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது எனவும் சுமந்திரன் தெரிவித்துள்ளார். (இ-7)

## சாவகச்சேரி நகரசபையில் நலன்புரி அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையில் பல்வேறு தேவைகளின் நிமித்தம் நலன்புரி அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் யோ. ஜெயக்குமார் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நலன்புரி அமைப்பில் நகரசபை உத்தியோகத்தர்களையும் இணைத்துக் கொண்டால் சிறப்பாக இருக்கும். நகர அபிவிருத்தி தொடர்பாக புலம்பெயர் அமைப்புகளுடன் கலந்துரையாடி உதவிகளைப் பெற்றுக் கொள்ள நலன்புரி அமைப்பொன்று தேவை.

இந்த நலன்புரி அமைப்பில் நகரசபையின் செயலாளர், கணக்காளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோரும் இணைக்கப்பட வேண்டும்.

நலன்புரி அமைப்பின் ஊடாக சிற்றுண்டிச்சாலை மற்றும் துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உள்ளிட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்எனவும்அவர்மேலும் தெரிவித்தார். (இ-30)

## முழுமையான பரிசோதனைகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தற்போது முழுமையான கொலஸ்ரோல் பரிசோதனைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

இதுவரைகாலமும்கொலஸ்ரோல் பரிசோதனை செய்வதற்கான இயந்திரம் வைத்தியசாலையில் இருந்த போதிலும் அதற்கான மாத்திரைகளை பெற்றுக் கொள்வதில் சிரமம் நிலவியதால் பரிசோதனைகள் இடம்பெறாமல் இருந்ததாகத் தெரிவித்துள்ளனர்.

தற்போது வெளிநோயாளர் பிரிவிற்கு வருவோர் மற்றும் விடுதிகளில் தங்கி இருந்து சிகிச்சை பெறுவோர் கொலஸ்ரோல் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-30)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1506

### கயல்விழி

அப்பெல்லாம் Exam Hall ல நமக்கே Answer தெரியாம முழிச்சிக்கிட்டு இருப்போம்



அப்ப பார்த்து நம்ம நண்பன் இதுக்க என்னடா Answer னு கேட்பான் பாருங்க... அப்படியே நம்ம கண்ணில தண்ணி வந்திடும்

### கந்தன்


கால்நடைக்கு லோன் தருவீங்களாமே... ஆமாம் அதுக்கென்ன?



நான் பழனிக்கு கால்நடையா போகலாம்னு இருக்கேன்... எனக்கு லோன் தருவீங்களா?

### கஸ்தூரி

மிஸ்டு கோல் குடுத்தா திரும்ப போன் பண்றவன் மனுசன்



மிஸ்டுகோல் குடுத்தவனுக்கே மிஸ்டுகோல் குடுக்கிறவன் ரொம்ப பெரிய மனுசன்

### சியாமளா


வாழ்க்கை ஒரு பைக் மாதிரி... பஞ்சர் ஆயிருச்சேன்னு பாதியில விட்டுட்டும் வர முடியாது



ஈசியா பைக்க தள்ளிகிட்டும் போகமுடியாது

### சித்ரா

ஜலதோஷம் வந்தா நம்மகூட ஒருவாரம் தங்குது!



இந்த சந்தோசம் மட்டும் வந்தா உடனே போயிடுது

### சியானா

ஹோட்டல்ல சாப்பிட்டு முடிச்சதும் சர்வர் டிப்ஸ் கேட்டாரு




வெந்தயம் போட்டால் இட்லி மிருதுவாக இருக்கும்னு டிப்ஸ் கொடுத்தேன்... பயபுள்ள முறைக்குது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இந்திய-இலங்கை பொலிஸார் கூட்டுப் பயிற்சி





(டில்லி)

இந்தியாவின், பரிதாபாத்தில் இலங்கை மற்றும் இந்திய பொலிஸார் இணைந்து போக்குவரத்து முகாமைத்துவ கூட்டுப் பயற்சியில் ஈடுபட்டனர்.

இந்திய நிதியுதவியுடன் கடந்த 3 ஆம் திகதி ஆரம்பமான இந்தப் பயிற்சி நேற்று 14 ஆம் திகதி நிறைவடைந்தது.

இந்த பயிற்சி நெறியில் பிரதான பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் பரிசோதகர், உதவிப் பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஆகிய தரங்களிலிருந்து 15 பொலிஸ் அதிகாரிகள் பங்கு பற்றினர். (இ-7)

# ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம்

# மகிந்தவின் அறிவிப்பை கண்டிக்கிறேன்

## குமார் வெல்கம

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ராஜபக்ஷ குடும்பத்துக்கு மாத்திரம் சொந்தமாக்கிக் கொள்ள இடமளிக்க முடியாது.

ஜனாதிபதி வேட்பாளருக்கு கட்சியில் சிரேஷ்ட உறுப்பினர்கள் இருக்கின்றனர். அதைவிடுத்து தனது சகோதரர் வேட்பாளராகலாம் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றேன் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி வேட்பாளராக தனது சகோதரர் ஒருவர் நியமிக்கப்படலாம் என அந்நாட்டு ஊடகமொன்றுக்கு தெரிவித்திருப்பது குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கட்சியில் ஆரம்பம் முதல் வேறுகட்சி உறுப்பினர்கள் இணைந்து செயற்படுகின்றனர். அவர்களில் நீண்டகால அரசியல் அனுபவம் உள்ளவர்கள் இருக்கின்றனர்.

ஆனால் தற்போது தெரிவிக்கப்படுபவருக்கு எந்த அரசியல் அனுபவமும் இல்லை. அவர் குறைந்த பட்சம் பிரதேசசபையில் கூட இருந்ததில்லை.

அதனால் குடும்ப ஆட்சிக்கு வழியமைப்பதானது எதிர்காலத்தில் மீண்டுமொரு சிறிசேனவை உருவாக்குவதற்கு தயாராகும் நிலையாகும். அதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால் பெற்றோர்கள் மேன்முறையீடு செய்யலாம்

## கல்வியமைச்சர் காரியவசம் தெரிவிப்பு



(கொழும்பு)

முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிப்பதில் ஏதேனும் முறைகேடுகள் ஏற்படுமாயின் அதனைப்பற்றி அறிந்து கொள்வதற்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்துமாறு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இவ் விடயத்தில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என சந்தேகிக்கும் பட்சத்தில் உரிய தரப்பினர் தம்மிடம் கோரப்படும் தகவல்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் முறையாக பெற்றுக் கொள்ளுமாறும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

தரம் ஒன்றிற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விபரங்கள் காட்சிப் படுத்தப்படும். அவ் விபரங்கள் காட்சிப்படுத்தப்பட்டதன் பின்னர் தெரிவு செய்யப்படாத மாணவர்களின் பெற்றோர் மேன்முறையீடு செய்யலாம்.

போலியான ஆவணங்களை சமர்ப்பித்து மாணவனொருவன் ஏதேனுமொரு பாடசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இது உறுதிசெய்யப்படுமாக இருந்தால், கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த மாணவனை பாடசாலையிலிருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள முடியும். இது தொடர்பில் உரிய அதிகாரிகள் மற்றும் அதிபர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளதென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மீண்டும் குடும்ப ஆட்சியை நிலைநாட்டுவதே மகிந்தவின் இந்திய விஜயத்தின் நோக்கம்

## ஐ.தே.க.எம்.பி.ராஜகருணா கடும் விசனம்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு சென்று இரட்டை வேடமிட்டு நாடகமாடுகின்றார். இலங்கையில் குடும்ப ஆட்சியை நிலைநாட்டுவதே அவரது விஜயத்தின் நோக்கமாக உள்ளதென பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வந்தபோது அன்றைய தினத்தை கறுப்புதினமாக அறிவிக்க வேண்டும்என கோஷம் எழுப்பினர்.

ஆனால் இப்போது நரேந்திர மோடியை சந்தித்து இலங்கை அரசியல் விடயங்கள் மற்றும் எதிர்கால ஜனாதிபதி தேர்தல் விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

நாமல் ராஜபக்ஷ அல்லது அவரது சகோதரர்களில் ஒருவர் வேட்பாளராக இறக்க வேண்டும் என்பதே அவரின் பிரதான நோக்கமாக அமைந்துள்ளது என்பது தெளிவாக வெளிப்பட்டுள்ளது.

தனது மகன் ஒரு கட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளராக வர வேண்டும் என்பதில் அவர் உறுதியாகவுள்ளார்.

எதிர்த்தரப்பின் சார்பில் தினேஷ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார போன்றவர்களை நிறுத்துவதை மறுத்து குடும்ப ஆட்சியை நிலைநாட்ட மகிந்த ராஜபக்ஷ செயற்பட்டு வருகின்றார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## துப்பாக்கிச் சூட்டில் குடும்பஸ்தர் மரணம்

### இறக்குவானையில் சம்பவம்

(கொழும்பு)

இறக்குவாணை வடக்கு பனாபிட்டிய பிரதேசத்தில் இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்டுள்ள துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவர் பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை இரவு 8 மணிமுதல் 8.30 மணிக்கிடைப்பட்ட வேளையிலேயே குறித்த நபர் தனது வீட்டிற்கருகில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இறக்குவாணை வடக்கு பனாபிட்டிய பொல்வத்த பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஹெட்டிகந்தலாகே விஜேரத்ன என்பவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். (இ-7)

## பல்கலைக்கழகத்தில் வெடிப்புச் சம்பவம்

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் ஆய்வுகூடத்தில் நேற்று வெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த வெடிப்பு இடம்பெற்ற சமயத்தில் மாணவர்கள் ஆய்வுகூடத்தில் இருந்துள்ளனர். எனினும் மாணவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த வெடிப்பு இடம்பெற்றமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. பலாங்கொட பொலிஸார் இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-7)

## 'சூழலைப் பாதுகாப்போம்'

(சாவகச்சேரி)

"பொலித்தீனை அகற்றி சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்" என்ற விசேட செயற்றிட்டத்தின் கீழ் ஐக்கிய நாடுகள் நட்புறவு அமையத்தின் தென்மராட்சி அணியினரால் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை அகற்றும் செயற்பாடு நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும்.

சாவகச்சேரி கடற்கரை வீதியில் உதயசூரியன், மகிழங்கேணி,தம்புதோட்டம் ஆகிய பகுதிகளில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் கழிவகற்றல் இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு இடம் பெறவுள்ள பிளாஸ்டிக் கழிவகற்றல் நடவடிக்கைகளில் பிரதேச மக்களையும் இணைந்து கொள்ளுமாறு அந்த அமையத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-30)

## இரத்ததான நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 12.30 மணிவரை யாழ். திருநெல்வேலி சேர்.பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் இடம் பெறும். (இ-7)

## சமாதான நீதவான்களுக்கு நாளை கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சமாதான நீதவான்களுக்கான முக்கியமான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மாவட்ட சர்வோதய காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.(இ-7)

## தொழிற்சாலையில் நச்சுவாயு கசிவு

### 5 பேர் வைத்தியசாலையில்


(ஹொரணை)

ஹொரணை - வஹவத்த பிரதேசத்திலுள்ள இறப்பர் தொழிற்சாலையில் அமோனியா நச்சுவாயு கசிந்ததில் 5 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றுள்ளதுடன், பாதிக்கப்பட்ட 5 பேரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இருவரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (இ-7)




# எதிரியைத் தூரத்தில் வை!



ஆலமரத்துக்கு அடியில் ஒரு காகம் அழுதுகொண்டிருந்தது. புதரிலிருந்து வெளியே வந்த முயல் காகத்தைச் சற்றுநேரம் கவனித்தது.

பிறகு அருகில் வந்து, "காகமே, ஏன் இப்படி மரத்தைக் கொத்திக் கொண்டு அழுகிறாய்? அலகு உடைந்து விடப் போகிறது" என்றது.

"மரத்தின் மீது கூடு கட்டி முட்டைகளை இட்டிருந்தேன். அனைத்தையும் ஒரு பாம்பு விழுங்கி விட்டுச் சென்றுவிட்டது.

இந்த ஆலமரம் என் குழந்தைகளைக் காக்கும் என்ற நம்பிக்கையில்தானே கூடு கட்டினேன்.

ஆனால் பாம்பு மேலே வரும் போது இந்த மரம் தடுத்து நிறுத்தவில்லை. அதனால்தான் மரத்தை அழிக்கும் முடிவில் இறங்கிவிட்டேன்" என்றது காகம்.

"உன்னால் இந்த ஆலமரத்தை அழிக்க முடியுமா? ஏன் இந்த வேண்டாத வேலை? தெற்குத் திசையில் ஒரு முனிவர் தவம் செய்கிறார்.

அவர் மரத்துக்குச் சாபம் கொடுத்தால், அழிந்துவிடும். வருகிறாயா?" என்று கேட்டது முயல்.

காகம் மகிழ்ந்தது. முயலுடன் கிளம்பியது. முனிவரிடம் முறையிட்டது.

"நீ கூடு கட்டிய ஆலமரத்தில் ஒரு புறாவும் கூடு கட்ட வந்தது. அதைக் கூடு கட்ட விடாமல் தடுத்தாய். அதையும் மீறி புறா கூடு கட்டி முட்டைகளை இட்டது.

கோபத்தில் அந்த முட்டைகளைக் கீழே தள்ளிவிட்டாய். முட்டை வாசனைக்குப் பழக்கப்பட்ட பாம்பு இந்த மரத்தில் ஏராளமான பறவைகள் முட்டைகளை இட்டிருப்பதை அறிந்து கொண்டது.

அதனால் அருகில் இருந்த புற்றில் குடியேறிவிட்டது. வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் முட்டைகளைச் சாப்பிட ஆரம்பித்து விட்டது.

எதிரியை அருகில் வர விடாமல் தடுப்பதே சிறந்த செயல். உன்னுடைய தீய எண்ணம் இப்போது உனக்கே ஆபத்தாக முடிந்து விட்டது" என்றார் முனிவர்.

"தவறு செய்துவிட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள். அந்தப் பொல்லாத பாம்பை அழிப்பதற்கு யோசனை கூறுங்கள்" என்றது காகம்.

"எதையும் அழிக்க நினைக்காதே. ஒவ்வொரு உயிரும் இன்னோர் உயிரைச் சார்ந்துதான் வாழ்கிறது.

பாம்பு, தான் உயிர் வாழ்வதற்கு உணவு தேடுகிறது. எதிரியை அழிப்பதற்குப் பதிலாக, அதை வரவிடாமல் இருப்பதற்கு என்ன செய்ய முடியுமோ அதைச் செய்" "நான் என்ன செய்ய வேண்டும்?"

"எல்லாப் பறவைகளுடனும் நட்பு வைத்துக்கொள். எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து பாம்பை எச்சரியுங்கள். பலன் கிடைக்கும்" என்ற முனிவர், மீண்டும் தியானத்தில் ஆழ்ந்தார்.

ஆலமரத்தில் கூடு கட்டியிருந்த அனைத்துப் பறவைகளையும் அழைத்தது காகம்.

பாம்பின் செயலுக்கு முடிவு கட்ட ஆலோசனை கேட்டது. பிறகு பாம்பை அழைத்தது.

"இதுவரை நீ கொடுத்த தொல்லைகளை மன்னித்து விடுகிறோம். இந்த இடத்தை விட்டுச் சென்றுவிட வேண்டும்" என்று பாம்பை எச்சரித்தது காகம்.

"எவ்வளவு அலைந்தாலும் என்னால் இத்தனை முட்டைகளைச் சாப்பிட முடியாது. இங்கிருந்து போக மாட்டேன்" என்றது பாம்பு.

காகத்துக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. முயலிடம் யோசனை கேட்டது.

"கீரி நண்பனை அழைத்து வருகிறேன். எதிரிக்கு எதிரியை வைத்தே பாடம் கற்பிப்போம்" என்று கிளம்பியது முயல்.

"இறுதியாக எச்சரிக்கிறேன், இங்கிருந்து சென்றுவிடு" என்று கத்தியது காகம்.

"நீ வேண்டுமானால் வேறு இடத்துக்குச் சென்றுவிடு. என்னால் முடியாது" என்றது பாம்பு.

"சரி, நாங்கள் அனைவரும் வேறு இடத்துக்குச் சென்றுவிடுகிறோம். கீரியை அழைத்து வரப் போகின்றது முயல். கீரியுடன் சண்டையிட்டுக்கொள்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பியது காகம்.

"என்னது, கீரியா? என் எதிரியை அழைத்து வருகிறீர்களா? என் உயிருக்கு உத்தரவாதம் இருக்காதே! இந்த இடத்தை விட்டு உடனே கிளம்புகிறேன்" என்று சொல்லி விட்டு ஓடி விட்டது பாம்பு.

பறவைகள் மகிழ்ச்சியில் கத்தின. அப்போது முயலும் கீரியும் வந்தன.

"என்ன, என் எதிரி ஓடிவிட்டானா? சண்டை போடுவதற்கு ஆவலோடு வந்தேன். புற்றையாவது இடிக்கிறேன்" என்று ஏமாற்றத்துடன் கூறியது கீரி.

"அது கறையான் புற்று. அதை விட்டுவிடு. உன் உதவிக்கு நன்றி" என்ற காகம் நிம்மதியாகக் கூட்டுக்குப் பறந்து சென்றது.

## பழமொழியும் விளக்கமும்

✦ பசி வந்தால் பத்தும் பறந்து போகும்

அறிவுடைமை, இன்சொல், ஈகை, தவம், காதல், தானம், தொழில், கல்வி, குலப்பெருமை, மானம் ஆகிய பத்து குணங்களும் பசி என்று வந்து விட்டால் பறந்து போகும் என்பது உண்மை.

இந்தப் பத்தும் இளகியிருந்தால் பகைவன் வீட்டிலும் சாப்பிடலாம் என்பது மற்றொரு பழமொழி. அதை சித்த வைத்தியர்கள் பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும் சாப்பிடலாம் என மிளகின் பெருமைகளை விளக்கும் சொல்லாக மாற்றிவிட்டனர்.

✦ சோழியன் குடுமி சும்மா ஆடாது

சோழியர்களின் குடுமி தலையின் முன்பக்கத்திலேயே அடர்த்தியாக முடியப்பட்டாலும் அது சும்மாட்டுக்கு இணையாக ஆக முடியாது. அதாவது சும்மாடு என்பது சுமை தூக்குபவர்கள் தலையில் துணியைச் சுருட்டி வசதிக்காக வைத்துக் கொள்வது. முன் குடுமி எவ்வளவு கட்டையாக இருந்தாலும் சும்மாடாகாது. அவர்களும் சுமை தூக்கும் போது சும்மாடு வைக்கத்தான் வேண்டும். சோழியன் குடுமி சும்மாடு ஆகாது என்பது தான் உண்மையான பழமொழி. இதுவே தற்போது சோழியன் குடுமி சும்மா ஆடாது என உச்சரிக்கப்படுகிறது.

✦ சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்

இந்தப் பழமொழியின் உண்மையான விளக்கத்தை வாரியார் குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்கள் கந்தசஷ்டியில் விரதம் இருந்தால் கருப்பையில் குழந்தை உருவாகும் என்று கூறுகிறார்.

✦ ஆறிலும் சாவு நூறிலும் சாவு

மகாபாரதத்தில் கர்ணன் ஐந்து பாண்டவர்களோடு ஆறாவதாகப் பிறந்திருந்தாலும் அவனுக்கு சாவு தான் நூறு. கௌரவர்களோடு இருந்திருந்தாலும் கர்ணனுக்கு சாவுதான். எனவே சாவு என்பது நாம் நிச்சயிக்க முடியாத ஒன்று. விதிப்படியே நடக்கும். இதைத்தான் ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்று முன்னோர்கள் கூறுகிறார்கள்.




❖ 1556-புனித ரோமப் பேரரசின் முன்னாள் பேரரசன் ஐந்தாம் சார்ல்ஸ் ஸ்பெயின் திரும்பினான்.
❖ 1935-ஜேர்மனியில் யூதர்களுக்கு குடியுரிமை சட்டபூர்வமாக மறுக்கப்பட்டது.
❖ 1952-ஐ.நாவின் ஒப்புதலுடன் எரித்திரியா எதியோப்பியாவுடன் இணைக்கப்பட்டது.
❖ 1981-தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.
❖ 1987-இந்திய அமைதிப் படைக்கெதிராக திலீபன் நீராகாரம் இன்றி உண்ணாநோன்பைத் தொடங்கினார்.

### பிறப்புகள்

❖ 1819-பிரான்சிஸ் நேப்பியர், சென்னை மாகாண ஆளுநர் (இ. 1898)
❖ 1860-மோக்சகுண்டம் விசுவேசுவரய்யா, மைசூர் திவான், பொறியியலாளர் (இ. 1962)
❖ 1876-சரத்சந்திர சட்டோபாத்யாயா, வங்காள எழுத்தாளர் (இ. 1938)
❖ 1891-செண்பகராமன் பிள்ளை, இந்திய விடுதலைப் போராட்டப் போராளி (இ. 1934)
❖ 1893-சௌந்தரபாண்டியன், இந்தியத் தொழிலதிபர், அரசியல்வாதி (இ. 1953)
❖ 1909-கா.ந.அண்ணாதுரை, தமிழ்.நாட்டின் 7 ஆவது முதலமைச்சர் (இ. 1969)
❖ 1912-ஆர்.கே.கரஞ்சியா, இந்திய எழுத்தாளர், இதழாளர் (இ. 2008)
❖ 1916-கம்பதாசன் கவிஞர், எழுத்தாளர், தமிழ் திரைப்பட பாடலாசிரியர் (இ.1973)
❖ 1918-அமுது, ஈழத்துத் தமிழறிஞர், புலவர்(இ. 2010)
❖ 1938-கொ.மா.கோதண்டம், தமிழறிஞர்
❖ 1939-சுப்பிரமணியன் சுவாமி, இந்திய அரசியல்வாதி
❖ 1941-எம்.ஜோசப் மைக்கல் பெரேரா, இலங்கை அரசியல்வாதி
❖ 1952-ரத்னஜீவன் ஹூல், இலங்கை மனித உரிமைச் செயற்பாட்டாளர், கல்வியாளர்
❖ 1967-ரம்யா கிருஷ்ணன், திரைப்பட நடிகை
❖ 1992-அதிபன் பாசுகரன், இந்திய சதுரங்க வீரர்

### இறப்புகள்

❖ 1967-புர்குல ராமகிருஷ்ண ராவ், ஐதராபாத் மாகாண முதலமைச்சர் (பி. 1899)
❖ 2005-ரா.தாமரைக்கனி, தமிழக அரசியல்வாதி (பி. 1946)

### சிறப்பு நாள்

❖ பொறியியலாளர் நாள் (இந்தியா)
❖ விடுதலை நாள், (குவாத்தமாலா, எல்சல்வடோர், ஹொண்டுராஸ், நிக்கராகுவா, கோஸ்டாரிக்கா, 1821)
❖ அனைத்துலக மக்களாட்சி நாள்




| மரக்கறி வகைகள் | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 100 | 160 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 100 | 100 | 60 |
| தக்காளி | 40 | 50 | 30 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 40 | 50 | 30 |
| கோவா | 140 | 140 | 60 | 140 | 160 |
| கரட் | 240 | 180 | 160 | 300 | 170 |
| பூசணி | 40 | 40 | 50 | 60 | 40 |
| புடோல் | 60 | 60 | 30 | 80 | 80 |
| வாழைக்காய் | 100 | 100 | 70 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 80 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 100 | 120 |
| பாகற்காய் | 140 | 110 | 100 | 140 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 40 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 60 | 100 | 100 |
| பயற்றங்காய் | 160 | 90 | 100 | 140 | 100 |
| லீக்ஸ் | 100 | 100 | 90 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 60 | 60 | 80 | 100 |
| கறிமிளகாய் | 120 | 100 | 80 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 140 | 60 | 60 | 80 | 40 |
| போஞ்சி | 160 | 140 | 100 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | — | 70 | 140 | 50 |
| கீரை–1பிடி | 25 | 30 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 | 120 | 100 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 50 | 30-50 | 50 |
| இராசவள்ளி | 140 | 140 | — | 200 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 130 | 80 | 200 | 100 |
| முள்ளங்கி | 50 | 60 | 30 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 25 | 50 | 20 | 30 | 40 |
| வல்லாரை | 50 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 70 | 40 | 120 | 80 | 30 |

பழிவாங்குதல் என்பது அற்பர்களால் உண்டாகும் அற்ப ஆனந்தம் காணும் செயலேயாகும்.

~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அன்று விட்ட தவறு அது இன்று விட்ட தவறு இது

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஈழத்தில் சைவமும் தமிழும் நிலைப்பதற்கு காரணமாக இருந்தவர்.

தமிழ் உலகில் இன்றுவரை பேசப்படுகின்ற ஆறுமுகநாவலர், வள்ளலார் எனப் போற்றப்படும் இராமலிங்க சுவாமிகளை நீதிமன்றத்தில் நிறுத்தியிருந்தார்.

இராமலிங்க சுவாமிகளின் பாடல்கள் அருட்பாடல்கள் அல்ல என்று நீதிமன்றத்தில் வாதம் புரியும் பொருட்டு சுவாமிகளை அவர் நீதிமன்றத்துக்கு அழைத்திருந்தார்.

மிகுந்த மதிப்புக்குரிய இராமலிங்க சுவாமிகளை நீதிமன்றில் நிறுத்துவதற்கு ஆறுமுக நாவலர் முற்பட்டது ஏன் என்ற கேள்வி இன்று வரை பலரது சிந்தனையையும் துளைத்து நிற்கிறது.

எதுஎவ்வாறாயினும் இராமலிங்க சுவாமிகளை நீதிமன்றுக்கு அழைத்த ஆறுமுகநாவலரின் செயல் மன்னிக்க முடியாதது என்பதில் இருவேறு கருத்திருக்க முடியாது.

இராமலிங்க சுவாமிகளின் பாடல்கள் அருட்பாடல்கள் அல்ல என்று வழக்குத் தொடுத்து வள்ளலாரை நீதிமன்றில் நிறுத்திய ஆறுமுக நாவலர், சுவாமிகள் நீதிமன்றுக்கு வருகை தந்தபோது எழுந்து நின்றார் என்ற பதிவும் உண்டு.

இவ்வாறு இராமலிங்க சுவாமிகள் நீதிமன்றுக்கு வந்தபோது ஆறுமுகநாவலர் எழுந்து நின்று அவருக்கு மதிப்புச் செலுத்திய செயல் ஆறுமுக நாவலர் மீது மிகுந்த வெறுப்பை தமிழ் மக்களிடம் ஏற்படுத்தியது என்று அன்றைய அறிஞர்கள் பலரும் கூறிக் கொண்டனர்.

மதிப்புக்குரிய ஒருவரை நீதிமன்றில் நிறுத்திவிட்டு அங்கு வைத்து மதிப்புச் செலுத்துவது என்பது மதிப்பு எனப் பொருள்படாது.

மாறாக அதுவே பாசாங்கு அல்லது நடிப்பு என்பதாகக் கருதப்படும்.

என்ன செய்வது அன்று மதிப்புக்குரிய ஒருவர் மதிப்புக்குரிய இன்னொருவரை நீதிமன்றில் நிறுத்தி தனக்கு கரிபூசிக் கொண்டதுடன் தமிழ் மக்களையும் வேதனைப்படுத்தினார்.

இந்தச் சம்பவம் அன்று நடந்தது என்றால், இன்றும் அந்தக் கர்ம வினை தொடரவே செய்கிறது.

ஆம், ஈழத்தமிழ் மக்கள் தங்கள் தலைவர் என்று போற்றுகின்ற மரியாதைக்குரிய ஒருவரை, சிலர் நீதிமன்றில் நிறுத்தியதன் மூலம் சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் முகத்தில் கரியைப் பூசிக் கொண்டதுடன் தமிழ் மக்களின் வெறுப்புக்கும் ஆளாகியுள்ளனர்.

என்ன செய்வது சின்னத்தனங்கள் தாண்டவமாடுமளவுக்கு தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை சிறியவர்களுக்கு அளிப்பதால் அவர்கள் பெரியவர்களை அகௌரவப்படுத்தி தங்கள் வக்கிரத்தை தீர்க்க நினைக்கின்றனர்.

இந்த நினைப்பின் பின்னணியில் சிலர் இருந்தாலும் அவர்கள் இன்று தங்கள் வாயால் தங்களுக்கு கேட்டை விளைவித்து வருகின்றனர் என்பதை நினைக்கும்போது,

இறைவா! இந்த மண் என்றுதான் திருந்துமோ என்ற ஏக்கம்தான் பெருமூச்சாகிக் கொள்கிறது.

# எரிபொருள் விலை சூத்திரத்தில் எனக்கு உடன்பாடு இல்லை

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

எரிபொருள் விலையைத் தீர்மானிப்பதற்கு விலைச் சூத்திரம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்ட போதிலும், அது அமுலுக்கு வந்த நாள் முதலே எரிபொருள் விலை அதிகரித்துச் செல்வதே இடம்பெற்று வருவதாகவும் விலைக் குறைவை ஏற்படுத்தவில்லையெனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விலைச் சூத்திரத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதா? இல்லையா? என்பது தொடர்பில் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்துடன் தீர்மானம் எடுக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

உலக சந்தையில் இடம்பெறும் விலை மாற்றங்களுக்கு ஏற்ப உள்ளூர் சந்தையிலும் மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதற்காகவே விலைச் சூத்திரம் அறிமுகம் செய்யப்பட்டது.

இருப்பினும், விலை அதிகரிப்பு மாத்திரமே அதனூடாக இடம்பெற்று வருவதாகவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

தனக்கு அது தொடர்பில் உடன்பாடு இல்லாதுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் கூறியுள்ளார். (ம)

# வவுனியாவில் மோட்டார் குண்டு ஒன்று மீட்பு

(வவுனியா)

வவுனியா, காத்தார் சின்னகுளம் பகுதியில் நிலத்தில் புதையுண்டு கிடந்த மோட்டார் குண்டு ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் நீர் வடிகாலமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த ஊழியர்கள் மண் அள்ளும் இயந்திரத்தின் மூலம் நிலத்தை தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டபோது அதிலிருந்து சிறியரக மோட்டார்குண்டு ஒன்றை மீட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதை தொடர்ந்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார், குண்டை பரிசோதித்ததுடன் விசேட அதிரடிப் படையினருக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.

இந்நிலையில் இன்றைய தினம் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் குண்டு செயலிழக்க செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# சொகுசு வாகனத்தை நிராகரித்த தென் மாகாண ஆளுநர்

(கொழும்பு)

தென் மாகாண ஆளுநருக்கு, 430 இலட்சம் ரூபாய செலவில் வாகனமொன்றை கொள்வனவு செய்வதற்காக, மாகாண சபையில் ஒதுக்கப்பட்ட நிதியை அவர் நிராகரித்துள்ளார்.

அத்துடன் குறித்த நிதியை அபிவிருத்தி பணிகளுக்காக பயன்படுத்தவுள்ளதாக, ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

தென் மாகாண செயலாளருக்கு கடிதம் மூலம் இந்த அறிவிப்பை அவர் விடுத்துள்ளார்.

வாகனக் கொள்வனவுக்காக ஒதுக்கப்பட்ட குறித்த நிதியை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எண்ணக்கருவுக்கமைய முன்னெடுக்கப்பட்டுவரும், விசேட வேலைத் திட்டங்களுக்காக பயன்படுத்தி மக்களுக்கு சேவையாற்ற எண்ணியுள்ளதாக ஆளுநர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.(இ-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருநது மாலை 6 மணி வரை யாழ்.பிரதேசத்தில உரும்பிராய் ஒரு பகுதி, கொல்லங்கலட்டி, மாவை கலட்டி, கீரிமலை, பத்தானை, சுதுமலை, மாப்பியன், சட்டநாதர் வீதி, பருத்தித்துறை வீதியில் கல்வியங்காட்டு சந்தையிலிருந்து நல்லூர் கோவில் வரை, நல்லூர் குறுக்கு வீதி, செம்மணி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, கனகரட்ணம் வீதி, திருமகள் வீதி, மலர்மகள் வீதி, கலைமகள் வீதி, பூமகள் வீதி,சாஸ்திரியார் வீதி, நடுத்தெருலேன், நாவலர் வீதி, நொத்தாரிஸ் லேன், வேலப்பர் வீதி, புவனேஸ்வரி அம்மாள் வீதி, புறூடி லேன், ஸ்ரான்லி கல்லூரி வீதி, சுப்பிரமணியம் வீதி, முதலியார் வீதி, பாரதி லேன், புங்கன்குளம் வீதி புகையிரத கடவை வரை, நாயன்மார் வீதி, குகன் வீதி, பொன்னம்பலம் வீதி, நாவலர் வீதியில் மாம்பழம் சந்தியிலிருந்து நல்லூர் குறுக்கு வீதி வரை, ஏ-9 வீதியில் பாரதி வீதியிலிருந்து செம்மணி வளைவு வரை, நெடுங்குளம் வீதி புகையிரதக் கடவை வரை, முள்ளி, நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, நாகர்கோவில், குடாரப்பு, மாமுனை, செம்பியன் பற்று, நெல்லியான் இராணுவ முகாம், மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, கொடுக்குழாய், ஆழியவளை, வெற்றிலைக் கேணி, கட்டைக்காடு, கேவில், வெற்றிலைக்கேணி இராணுவ முகாம், கட்டைக்காடு இராணுவ முகாம், **Cey- Nor** பவுண்டேஷன் லிமிற்றெட், மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், கனகரத் தினம் மத்திய மகா வித்தியாலயம், **SOS** சிறுவர் பூங்கா, அரியாலை டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியறிங் பி.எல்.சி, நாயன்மார்கட்டு **Carlton Sports Network (CSN)** ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் பனிக்கன்குளம், **CATIC** பனிக்கன்குளம், மாங்குளம் கொலனி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# ‘ஏறுபடி’ நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சைவப்புரவலர், சமூக ஜோதி நடராசா சிவசுப்பிரமணியம் எழுதிய "ஏறுபடி" நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் நீர்வேலி ஸ்ரீஅரசகேசரிப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் அரசகேசரிப்பிள்ளையார் கோயில் தலைவர் க.கிருபாகரன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகன் கலந்து கொள்வார். (இ)

## துணிந்து செய்யும்...

- வாழ்க்கையில் எதையுமே ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு எதிர்த்து நின்றுவெல்ல வேண்டுமே தவிர, கோழையாய் இருந்து விடக்கூடாது. நம் கடமையை நாமே செய்து முடித்துவிட்டால் எதற்கும் அஞ்சத் தேவையில்லை.
- துணிந்து செய்யும் எந்தக் காரியமும் வெற்றியையே பரிசளிக்கும். அதையும் மீறி தோல்வியடைந்தால் அனுபவமாகக் கருத வேண்டும். முயற்சியோடு தொடங்கும் செயல்கள் யாவும் முன்னேற்றப் பாதையிலேயே வழி நடத்திச் செல்ல வேண்டும்.
- தேவையற்ற கவலையும் பயமும்தான் தோல்வியைத் தழுவச் செய்யும். ஆக்கமும் ஊக்கமும் தான் வெற்றியைத் தொடரச் செய்யும். எனவே துணிந்து செய்து திறமையைக் காட்டுங்கள்.
- பதற்றத்தைத் தவிர்த்தால் பக்குவம் கிடைக்கும. பக்குவத்தைத் தக்க வைத்துக்கொண்டால் தெளிவு கிடைக்கும். தெளிவுடன் செய்யும் செயல்கள் யாவும் துணிவைத் தரும். துணிவுடன் செய்யும் எந்தக் காரியமும் வெற்றியையே தரும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- சூழ்நிலைக்குத் தக்கபடி வாழ்வை அனுசரித்து அமைத்துக் கொள்வது தான் வெற்றிக்கான ரகசியம்.
- ஒரு செயலின் பயனில் கருத்துச் செலுத்தும் அதே அளவிற்கு அதைச் செய்யும் முறையிலும் கவனம் செலுத்துவது அவசியம்.
- தோல்வியைத் தழுவி உயிர் வாழ்வதை விட போராடி மாள்வதே மேலானது. நீ ஒருபோதும் அழக்கூடாது.
- ஒரு லட்சியத்தை எடுத்துக் கொண்டு அதற்காக உன்னை அர்ப்பணித்துக் கொள். பொறுமையுடன் விடாமுயற்சி செய்தால் உனக்கு ஆதரவான நல்ல காலம் நிச்சயம் வரும்.
- சுயநலத்துடன் வாழாமல், "நான் அல்லேன் நீயே" என்னும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள். எல்லா நன்மைகளுக்கும், ஒழுக்கங்களுக்கும் இதுவே அடிப்படை பண்பு.
- உன்னால் எல்லாருக்கும் சேவை செய்ய முடியும். அதுவும் கடவுளின் குழந்தைகளுக்குத் தொண்டு செய்யும் பாக்கியம் உனக்கு கிடைத்திருக்கிறது.

# இந்த வெற்றி இன்னும் தொடர வேண்டும் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன்



பாடசாலை மாணவர்களுக்கிடையிலான தேசிய மட்ட துடுப்பாட்டப் போட்டியில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கத்தை வென்றெடுத்துள்ள கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் வீரர்கள் தமது பாடசாலைக்கு மட்டுமன்றி கிளிநொச்சி மாவட்டத்திற்கும் வடக்கு மாகாணத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிகையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் வரலாற்றில் இன்றளவும் இல்லாத பெரும் சாதனைத் தடம் இது.

துடுப்பாட்டம் என்பது தென்னிலங்கையர்களுக்கே உரித்தான விளையாட்டு என்னும் மனோபாவத்தை உடைத்தெறிந்து கிளிநொச்சி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பாடசாலை தென்னிலங்கையின் தேசியப் பாடசாலைகளை வீழ்த்தி தேசிய மட்டத்தில் வெற்றிவாகை சூடியிருப்பதை ஒரு வரலாற்றுப் பதிவாகவே என்னால் பார்க்க முடிகின்றது.

இந்த மண்ணுக்கும் மாவட்டத்திற்கும் வரலாற்றுச்சாதனை ஒன்றின் மூலம் பெருமை தேடித்தந்துள்ள கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் வீரர்களுக்கும், பயிற்றுவிப்பாளர்களுக்கும், பாடசாலைச் சமூகத்திற்கும் பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவிப்பதோடு, தொடர்ந்தும் பல வெற்றிகளைப் பெற்று இந்த மண்ணிற்கும், எமது மாவட்டத்திற்கும் கௌரவத்தைத் தேடித்தர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (க)

# வரலாற்றுச் சாதனை படைத்தது சிவநகர் அரசினர் த.க.பாடசாலை





கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு தேசிய ரீதியில் தங்கம் மற்றும் வெண்கல பதக்கங்கள் கிடைத்தன.

குறித்த விளையாட்டில் பங்குபற்றி வெற்றியீட்டிய பாடசாலை அணி வீரர்களை வரவேற்கும் நிகழ்வு கிளிநொச்சியில் இடம் பெற்றது.

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து வீரர்கள் பாடசாலைவரை அழைத்துச் செல்லப்பட்டனர்.

விளையாட்டு அமைச்சும், கல்வி அமைச்சும் இணைந்து நடத்திய தேசிய விளையாட்டுக்களில் கபடி போட்டியில் கிளிநொச்சி அரசின் தமிழ்க் கலவன் பாடசாலை பெண்கள் பிரிவில் இருவேறு வயது பிரிவுகளில் முதலாம் மற்றும் மூன்றாம் இடங்களை பெற்று தங்கம் மற்றும் வெண்கல பதக்கங்களை தம்வசப்படுத்தின.

20 வயது பிரிவில் விளையாடிய அணி வெண்கல பதக்கத்தை பெற்றது. இதேவேளை 17வயது பெண்கள் பிரிவில் போட்டியிட்ட அணியினர் முதல் இடத்தை பெற்று தேசிய ரீதியில் தங்கத்தை சுவீகரித்தது.

கடந்த 10ஆம் திகதி கண்டி தியகம பிரதேசத்தில் உள்ள மகாவலி தேசிய பாடசாலையில் குறித்த போட்டிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். (க)

## வடக்கின் கில்லாடி யார்? உதைபந்தாட்டத்தொடர்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு "வடக்கின் கில்லாடி யார்?" உதைபந்தாட்டத் தொடர் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் தலைவர் த.ஹரிஷாந் தலைமையில் நடைபெறும் இப் போட்டி ஆரம்ப நிகழ்வில் முதலாவது போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியும் குருநகர் சென்.றோக் அணியும் இரண்டாவது போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியும் வதிரி டயமன்ஸ் அணியும் மோதவுள்ளது. (க)

# யாழ்.மாவட்ட தாச்சிப் போட்டி சாந்தை விநாயகர் சம்பியன்







யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தினால் நடத்தப்படும் 22 ஆம் ஆண்டு மாவட்டம் தழுவிய தாச்சிச்சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி அண்மையில் யாழ். மாவட்ட தாச்சிச்சங்கத்தலைவர் வை.ஆனந்தஜெஸ்கரன் தலைமையில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான த.குருகுலராசா, பா.கஜதீபன் மற்றும் யூ.ஆர்பிரண்ட் அமைப்பின் தலைவர் க.செவ்வேள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இறுதிப்போட்டியில் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழகமும், சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழகமும் மோதியதில், பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று கிண்ணத்தைச்சுவீகரித்துக்கொண்டது.

ஆண், பெண் என இருபிரிவினருக்கான போட்டிகளும் தனித்தனியாக இடம்பெற்றன.

நிகழ்வின் விருந்தினர்களால் வெற்றி பெற்றோருக்கான கிண்ணங்களும், பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

விருந்தினர்கள், யாழ். மாவட்ட தாச்சிச்சங்க நிர்வாகிகள், விளையாட்டு வீரர்கள், ஆர்வலர்கள், ஊரவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட கபடிப்போட்டியில் 17வயது ஆண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணியினர் 36:28 என்ற புள்ளி அடிப்படையில் எதிர் அணியை தோற்கடித்து சம்பியன்ஸ் ஆக முடிசூடியது. தென்மராட்சி பாடசாலை வரலாற்றில் குழுநிலை விளையாட்டுப்போட்டியில் முதலாம் இடத்தை பெறுவது இதுவே முதற்தடவை. இதற்கு முதல் இதே அணி 2016 ஆம் ஆண்டு நடந்த கபடிப் போட்டியில் 3 ஆம் இடத்தைப் பெற்றமை குறிப்பிட்டத்தக்கது மற்றும் இவ் அணியின் தலைவர் செல்வன் அ.ஸ்ரெலின் ஜெனிசாந் இலங்கை தேசிய கபடி அணிக்கு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க-30)

# கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின்

## மாபெரும் தாச்சிப்போட்டி முடிவுகள்

கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையமும் விநாயகர் விளையாட்டுக்கழகமும் இணைந்து யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் தென்மராட்சி ரீதியில் நடைபெற்று வரும் மாபெரும் தாச்சிச்சுற்றுப் போட்டி தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற பதினைந்தாம் நாள் போட்டியில் கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக்கழக பெண்கள் அணியை எதிர்த்து கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழக பெண்கள் அணி மோதியது. இப்போட்டியில் கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழகம் 7:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றியீட்டி இறுதிப்போட்டிக்கு தெரிவானது. இதேவேளை கைதடி வடக்கு செவினிஸ்ரார் விளையாட்டுக்கழகத்திற்கும் கச்சாய் கலைமகள் B விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற ஆண்களுக்கிடையிலான தாச்சிப் போட்டியில் செவினிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 8:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றியீட்டி காலிறுதிக்கு தெரிவாகியது.

இன்று இரவு 8.00 மணிக்கு விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள குழு B பிரிவிற்குரிய காலிறுதிப் போட்டியில் கைதடி நவபுரம் நவசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கைதடி மத்தி வளர்மதி A விளையாட்டுக்கழகம் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## வலம்புரிக்கு எதிராக...

வலம்புரி பத்திரிகைக்கு எதிராக நேற்றும் சிறு குழுவொன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் அயூப் அஸ்மினின் தலைமையில் சுமார் 10 பேர் அடங்கிய குழு இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள பள்ளிவாசலில் நேற்றையதினம் தொழுகையை முடித்து விட்டு பிற்பகல் ஒரு மணியளவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிறு குழுவினர் வலம்புரிக்கு எதிராக கோசம் எழுப்பியதுடன் பதாகைகளையும் தாங்கி நின்றனர்.

இதேவேளை வலம்புரிக்கு எதிராக நடத்தப்பட்ட இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை தொழுகையில் ஈடுபட்ட முஸ்லிம் சகோதரர்கள் பலரும் கண்டித்ததுடன் தொழுகை முடிந்த கையோடு இவ்வாறான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் போது, ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவில்லாதவர்களையும் ஆதரவானவர்கள் போல காட்டும் முயற்சி நடப்பதாகவும் அவர்கள் குறைபட்டுக் கொண்டனர்.

இது ஒருபுறம் இருக்க, அஸ்மினின் ஆதரவாளர்கள் பன்னிருவர் கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளிவாசலுக்கு முன்பாக வலம்புரிப் பத்திரிகையை காலால் மிதித்து எரியூட்டியிருந்ததும்,

இதனைத் தொடர்ந்து கடந்த 7ஆம் திகதி யாழ்ப்பாணம் பெரியபள்ளிவாசலுக்கு முன்பாக வைத்து முஸ்லிம் மக்கள் அயூப் அஸ்மினின் கொடும்பாவியை எரித்தமையும்,

அதனைத் தொடர்ந்து நேற்றையதினம் வலம்புரிக்கு எதிராக அஸ்மினும் அவரது ஆதரவாளர்கள் ஒன்பதுபேரும் சேர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்தியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## குறுகியகால புனர்வாழ்வு...

மறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளான யாழ்ப்பாணத்தை சேர்ந்த மதியரசன் சுலக்ஷன், இராசதுரை திருவருள், சிவசுப்பிரமணியம் தில்லைராஜ், இராசாபல்லவன் தபோரூபன், இராசதுரைஜெகன், சூரியகாந்தி ஜெயச்சந்திரன், கிளிநொச்சியை சேர்ந்த சிவப்பிரகாசம் சிவசீலன், வவுனியாவை சேர்ந்த தங்கவேல் நிமலன் ஆகிய 8 கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் கடந்த 9 வருடங்களுக்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணை இன்றி திட்டமிட்ட வகையில் தமது வழக்கு நடவடிக்கைகளில் சட்டமாஅதிபர் திணைக்களம் காலம் தாழ்த்தி வருவதாக குற்றம் சாட்டியுள்ளனர்.

மேலும் தம்மால் வழங்கப்பட்டதாக தெரிவித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களம் இழுத்தடிப்பு செய்து வருகிறது. எனவே தமது விசாரணைகளை முடிவுறுத்தி விடுதலை செய்ய வேண்டும்.

அல்லது குறுகிய கால புனர்வாழ்வு அளித்து தம்மை விடுதலை செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்து இந்த உணவு தவிர்ப்பை ஆரம்பித்துள்ளனர்.

மேலும் தமது விடுதலை குறித்து போதிய அக்கறை இன்றி செயற்படும் பிரதிநிதிகள் தமது விடுதலை தொடர்பாக அரசுக்கு அழுத்தம் கொடுத்து தம்மை விடுவிக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

தமது உணவு தவிர்ப்பு போராட்டம் தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளரிடம் எழுத்துமூலம் அறிவித்துள்ளனர். (ம-9)

## மீண்டும் குடும்ப...

போர் கூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைபெறாத ஒரு விடயத்தை நினைத்து அவர் கனவு காண்கின்றார். மீண்டும் ஒரு குடும்ப ஆட்சியை உருவாக்குவதற்கு நாட்டு மக்கள் ஒரு போதும் இடமளிக்கமாட்டார்கள்.

இந்திய ஊடகங்களுக்கு அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக தனது சகோதரர்களில் ஒருவர் நியமிக்கப்படுவார் எனக் குறிப்பிட்டிருக்கின்றார்.

அவர் நாட்டில் குழப்பத்தினை ஏற்படுத்தவே இவ்வாறான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார். அவரது கனவு என்றுமே பலிக்காது என்பதுடன், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அதற்கு இடமளிக்காது என அவர் மேலும் குறிப்பிட்டார். (ம)

## முல்லைத்தீவில்...

செயற்பாடுகளை விமர்சித்தும் முல்லைத்தீவு நகரில் பரவலாக துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தமிழ் தலைவர்கள் எனப்படுவோர் ஐக்கியப்படவேண்டிய நேரம் எனும் தலைப்பில், தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டுக் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி கண்டறியும் சங்கம் எனும் அமைப்பின் பெயரை தாங்கிக் குறித்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

குறித்த சுவரொட்டியில் முதலில் நாம் ஒரு தமிழ் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும், நாம் ஒரு இணைப்பை அல்லது கூட்டணியை உருவாக்க வேண்டும். சிங்களவர்களால் ஏமாற்றப்பட்ட அரசியல்வாதிகள், தமிழர்களை ஏமாற்றும் அரசியல் வாதிகள் சிங்கள முகவர்கள் அனைவரும் ஓய்வு பெறவேண்டும்.

நமது அரசியல் தீர்வு அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா மட்டும் தான் தீர்வு காணமுடியும் என நம்பும் தமிழர்கள் மட்டும் இந்த இணைப்பில் சேரவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதோடு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனையும் கடுமையாக விமர்சித்துள்ளது.

சுமந்திரன் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடாது, த. தே. கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியையும் இராஜினாமா செய்ய வேண்டும்.

சுமந்திரன் தமிழ் மக்களுக்குச் சமஷ்டி தேவையில்லை என்று காலி நகரில் சிங்களவரிடம் கூறினார். யார் இவருக்கு இந்த உரிமையைக் கொடுத்தது. தமிழினத்தைத் தொடர்ந்தும் சிங்களவருக்கு இரையாக்கும் சுமந்திரனே தமிழ் அரசியலிருந்து வெளியேறு போன்ற கடுமையான வாசகங்கள் குறித்த சுவரொட்டியில் காணப்படுகின்றன. (ம)

## சிங்கள குடியேற்றங்கள்...

இடம்பெறவில்லை எனவும் சொன்னார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இந்த விடயம் குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் தான் நடத்திய சந்திப்பில் கருத்துரைத்த மைத்திரி முல்லைத்தீவுக்கு நேரடியாக சென்று பார்த்தபின்னர் தான் இந்த விடயத்தில் முடிவெடுப்பதாக சொன்னார்.

ஆனால் இப்போது முல்லைத்தீவுக்கு செல்லாமலேயே வடக்கில் எந்த ஒருசிங்களக்குடியேற்றமும் இடம்பெறவில்லை. அவ்வாறு கூறப்படும் குற்றச்சாட்டுகள் பொய் என கொழும்பில் குறிப்பிட்டுள்ளார். (ம)

# விளக்கமறியலில் இருப்பவர்களை குற்றவாளிகளாக்கி விடமுடியாது

### ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு, புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருப்பவர்கள் மீது, இதுவரை எந்த வித வழக்கும் தொடரப்படவில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசனம் தெரிவித்தார்.

நேற்று காலை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடனான சந்திப்பின் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீதிமன்றத்தினால் தண்டனைக்குட்படுத்திய முன்னாள் போராளிகளையும் விசாரணை நிலுவையிலுள்ள போராளிகளையும் விடுதலை செய்யுமாறு மனிதஉரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தி வருவதாகத் தெரிவித்த ஜனாதிபதி, இந்த விடயத்திலுள்ள சிக்கல்களைத் தெளிவுபடுத்தவுள்ளதாகவும் கூறினார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்துக்கு முன்னதாக பொலிஸ் மா அதிபரால் வழங்கப்பட்ட தகவலின்படி, இதுவரை காலமும் விசாரணைக்குளாகிய லசந்த கொலை, கீத்நொயர் கடத்தல் விவகாரம், 11 இளைஞர்கள் தாக்கப்பட்ட விவகாரம் போன்ற பல்வேறு விசாரணைகள் தொடர்ந்தும் விசாரணை மட்டத்திலேயே இருப்பதாகவும் இவற்றில் ஒன்றைத்தானும் வழக்குத் தாக்கல் செய்யும் நிலைக்குக் கொண்டுவரவில்லை எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டினார். குற்றப் புலனாய்வுத் துறை அறிக்கையின் பிரகாரம், முப்படைகளின் பிரதானி தொடர்பான விசாரணை, வெறும் குற்றச்சாட்டளவில் மாத்திரமே இருப்பதாகவும் அதனைப் பெரிதுபடுத்திப் பேசப் பலர் விளைந்திருப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

தன்னைப் பொறுத்தவரையில் பாரிய குற்றச் செயல்களின் ஈடுபட்டவர்கள் நிச்சயமாகத் தண்டிக்கப்பட வேண்டியவர்களே எனவும், நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதன் ஊடாக அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களே எனவும் தெரிவித்த ஜனாதிபதி, வெறும் குற்றச்சாட்டுக்குள்ளாகி விளக்கமறியலில் இருப்பவர்கள் குற்ற வாளிகளாகிவிட முடியாதவர்களே என்றும் தெரிவித்தார். (ம)

## கூட்டமைப்பினர்...

இந்த சந்திப்பில் இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் கே.துரைராஜசிங்கம், பாராளுமன்ற உறுப்பினர்களான ஜி. சிறிநேசன், சா.வியாழேந்திரன், க.கோடீஸ்வரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான பிரசன்னா, இந்திரகுமார் மற்றும் கோ.கருணாகரம் ஆகியோர் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைவரம் மற்றும் இந்திய உதவியுடனான அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்காகவே இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

மட்டக்களப்புக்கு வருகை தந்த இந்திய உயர்ஸ்தானிகர் தரன்ஜித் சிங் சந்து (Taranjit Singh Sandu) பாசிக்குடாவிலுள்ள விடுதியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அரசியல் பிரதிநிதிகளை சந்தித்து உரையாடியுள்ளார்.

இதன் போது புதிய அரசியலமைப்பானது விரைவில் அமைக்கப்பட வேண்டும். பல்லினங்கள் வாழும் நாட்டிற்குப் பொருத்தமான ஆட்சி முறைமை சமஷ்டி முறையே எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இனங்களுக்கு இடையிலான நிலைப்பாடுகள் தொடர்பிலும், மாகாண ஆட்சி முறைமையில் குறிப்பாக வடக்கு கிழக்கு என்பன இணைக்கப்பட வேண்டிய அவசியம் பற்றியும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைக் கட்டியெழுப்பும் முகமாக தொழிற்பேட்டைகள் அமைத்தல், குடிநீர் பிரச்சினைகள், கழிப்பறை வசதியற்ற குடும்பங்களுக்கான கழிவறை வசதிகள் அமைத்தல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தியாவுடனான எமது மக்களின் நெருக்கம் அதிகரித்துள்ளமையால் மட்டக்களப்பில் உயர்ஸ்தானிகர் அலுவலக கிளையொன்றினை அமைத்தல் மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் நீர்ப்பாசன செயன்முறைகளை மேம்படுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வன்முறைகளுக்கு பொலிஸாரே காரணம் -சிறீதரன் எம்.பி

(கிளிநொச்சி)

இலங்கை வரலாற்றில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைக் கலாசாரம் கட்டவிழ்த்து விடப்பட்டதன் பின்னணியில் பொலிஸாரே இருந்து வருகிறார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கனகராயன்குளத்தில் பொலிஸாரின் தாக்குதலில் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள முன்னாள் போராளி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இச்சம்பவத்தை திட்டமிட்ட செயலாகவே கருதமுடிகிறது. பொலிஸாரின் இந்த அடாவடித்தனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதோடு பாதிக்கப்பட்டவருக்கு உடனடியாக நீதி வழங்கப்பட வேண்டும்.

அதேவேளை தமிழ் பேசும் சகோதரர்கள் என்ற அடிப்படையில் தமிழர்களின் காணிகளை வியாபார நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு எடுக்கின்றார்கள்.

காயமடைந்த குடும்பஸ்தர் வைத்தியசாலையில் விலங்கிடப்பட்ட நிலையிலேயே சிகிச்சை பெற அனுமதிக்கப்பட்டிருப்பதும் சட்ட திட்டங்களுக்கும், மனிதாபிமானத்திற்கும் அப்பாற்பட்ட விடயமாகும்.

புனர்வாழ்வு பெற்ற ஒரு முன்னாள் போராளிக்கு நேர்ந்துள்ள இந்நிலைமையானது மிகுந்த மன வேதனையளிக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## அறிக்கையை...

பிரதிப் பொலிஸ் மா அதிபருமான நாலக டி சில்வா குறித்த விசாரணை அறிக்கையினைச் சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

அவர் தொடர்பாக முழுமையான அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பிக்குமாறு பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்குப் பிரதமரால் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வா மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

தன நிதானய
திகதி 2018-09-14
சீட்டிழுப்பு இலக்கம் 49
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 14 42 64 75

மஹஜன சம்பத
திகதி 2018/09/14
சீட்டிழுப்பு இலக்கம் 3746
ஆங்கில எழுத்து E
வெல்லப்பட்ட இலக்கங்கள் 1 1 2 8 8 6

கொவிசெத
திகதி 2018.09.14
சீட்டிழுப்பு இலக்கம் 1882
ஆங்கில எழுத்து D
வெல்லப்பட்ட இலக்கங்கள் 07 10 16 19

மெகா பவர்
திகதி 14/09/2018
சீட்டிழுப்பு இலக்கம் 279
F 23
வெற்றி இலக்கங்கள் 32 45 57 60

தேசிய லொத்தர் சபை

## கைக்குண்டு கண்...

யில், மதில் கட்டுவதற்காக மண்ணை நேற்று வெள்ளிக்கிழமை தோண்டியபோதே கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் உடனடியாக பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைக்குண்டை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம-9)

## எங்களுக்கு பண...

ளின் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களின் தரப்பு சார்பில் கருத்துக்களை முன்வைக்க ஜெனிவாவிற்கு செல்வதற்கு விசா மறுக்கப்பட்டமை தொடர்பிலும், இந்த செய்திகளின் பின்னராவது எமக்கு விசா வழங்குவதற்கு சம்மந்தப்பட்ட நாட்டின் தூதரகம் முன்வர வேண்டும் எனவும் இதன்போது கோரிக்கை விடுத்தனர்.

மேலும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபாய் வழங்குவது பெரியதொரு விடயமல்ல. அதனை விட எமது பிள்ளைகள் தான் பெறுமதியானவர்களென காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.(ம)

## நாட்டை பிரித்து...

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்த கேள்விக்கு பதில் அளிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பிராந்திய அபிவிருத்தி மற்றும் அதிகாரப் பகிர்வு ஆகியவற்றை வழங்கவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் அவற்றை வழங்கவேண்டும் எனினும் இலங்கை சிறிய நாடு. நாங்கள் நாட்டை பிரித்து சமஷ்டியை வழங்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். அதற்கான சாத்தியம் ஒருபோதும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

துரதிர்ஷ்டவசமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள் என்னிடம் வந்து இது குறித்து பேச தயாராக இல்லை. ரணில் அவர்களிற்கு சிறந்த தீர்வை வழங்குவார் என அவர்கள் கருதுகின்றனர் எனவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நீங்கள் தேர்தலில் போட்டியிடுவீர்களா என்ற கேள்விக்கு நான் இன்னமும் இது குறித்து தீர்மானிக்கவில்லை. நாங்கள் சிறந்த வேட்பாளர் குறித்து ஆராய்ந்து வருகின்றோம். அவ்வாறான சிறந்த வேட்பாளர் கிடைக்காவிட்டால் நானே போட்டியிட வேண்டியிருக்கும் எனவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம)

## அரசியலமைப்பை...

ஆனால் அதற்கான சாத்தியம் இல்லை. அவ்வாறு அரசியலமைப்பின் வரைபை விரைவில் சபையில் சமர்ப்பிப்பது தொடர்பில் பிரதான வழிநடத்தல் குழுவில் ஆராயப்படவில்லை என்று கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இன்று நாடு பாரிய நெருக்கடிகளை சந்தித்துள்ளது. ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைகின்றது. ஒவ்வொரு மாதமும் எரிபொருள் விலை அதிகரிக்கிறது. மக்கள் பாரிய சுமையை சுமந்து கொண்டிருக்கின்றனர் என்றும் தினேஷ் குணவர்த்தன குறிப்பிட்டார்.

வெகுவிரைவில் புதிய அரசியலமைப்பின் வரைபு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அரசாங்கத்தரப்பு தெரிவித்துள்ளமை குறித்து வினவியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (ம)

## இராணுவத்தை...

ஊடக பிரதானிகளுடன் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இறுதி யுத்தத்தின்போது போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக இராணுவம் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், அவற்றை முறையாக விசாரிக்காமல் இவ்வாறு கோரிக்கை விடுப்பதற்கு சர்வதேச சட்டத்தில் இடமுண்டா என்று ஊடகவியலாளர்களால் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

அதற்கு பதிலளித்த ஜனாதிபதி, என்னுடைய இந்த செயற்பாட்டிற்கு பலரும் எதிர்ப்பை வெளியிடக்கூடும். ஆனால், நாட்டின் நலனைக் கருத்திற் கொண்டு இந்த கோரிக்கையை முன்வைக்கவுள்ளேன்.

எதிர்வரும் 25ஆம் திகதி இந்த கோரிக்கையை வாய்மூலம் முன்வைக்கும் அதே வேளை, 2019 மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத்தில் இதனை எழுத்துமூல பிரேரணையாக முன்வைக்கவுள்ளேன் எனக் குறிப்பிட்டார். (ம)

## யாழ். நீதிமன்றத்...

நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்து பெண் பொலிஸ் உத்தியோகத்தரால் அத்துமீறி ஒளிப்படம் எடுக்கப்பட்ட விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் பிரதான நுழைவாயில் பகுதியில் நேற்று முற்பகல் 11.35 மணியளவில் இடம்பெற்றது.

பொலிஸ் உத்தியோகத்தர் தன்னை ஒளிப்படம் எடுப்பதை சடுதியாக அவதானித்த பெண் சட்டத்தரணி, அது தொடர்பில் கேள்வி எழுப்பினார்.

தான் ஒளிப்படம் எடுக்கவில்லை எனவும் கைபேசியைக் கையில் வைத்திருந்ததாகவும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் மறுப்புரைத்தார்.

எனினும் மூத்த சட்டத்தரணிகளிடம் சம்பவத்தைக் கூறிய பெண் சட்டத்தரணி, பொலிஸ் உத்தியோகத்தரிடமிருந்து கைபேசியைக் கோரினார். ஆனால் அதனை வழங்க அவர் மறுத்துவிட்டார்.

பின்னர் மூத்த சட்டத்தரணிகள் கேள்வியெழுப்ப தனது கைபேசியை பொலிஸ் உத்தியோகத்தர் வழங்கினார். அதில் பெண் சட்டத் தரணியின் ஒளிப்படங்கள் இருந்தன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் சி. சதீஸ்தரனிடம் மூத்த சட்டத்தரணிகள் எடுத்துரைத்தனர். நீதிமன்ற வளாகத்துக்குள் இந்தப் பிரச்சினை இடம்பெற்றுள்ளதால் உரிய நடவடிக்கை எடுக்குமாறு சட்டத்தரணிகளுக்கு நீதவான் ஆலோசனை வழங்கினார். சம்பவம் தொடர்பில் சட்டத்தரணிகள் கூடி ஆராய்ந்தனர்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸார் சட்டத்தரணிகளை சந்தித்துப் பேசினர். இரண்டு தரப்புமே ஒருமித்துப் பணியாற்றும் நிலையில் இந்த விவகாரத்தை இணக்கத்துடன் முடிப்போம் என பொலிஸார் கோரினர்.

அதனை ஏற்க சட்டத்தரணிகள் மறுத்துவிட்டனர். அத்துடன், உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரை வரும் திங்கட்கிழமை நேரில் சந்திப்பதாக சட்டத்தரணிகள் ஒருமித்த முடிவை எடுத்தனர்.

பெண் பொலிஸ் உத்தியோகத்தரின் கைபேசி யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற பொலிஸ் அலுவலகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.(ம-9-101)

FALC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, அரியகுளம், 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 18.09.18 செவ். 3 pm.
181, பிரதான வீதி, நெல்லியடி. 0762 669 614 ஆரம்பம் 17.09.18 மாலை 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(C-3782)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELs
●மானிப்பாய் ●யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
(5645)
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-3785)
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

சிற்றி சிக்கன் ஹோம் சப்பிளை
உங்களுக்கு கோழி இறைச்சி தேவையா? அழையுங்கள்...
உங்கள் வீடுகளுக்கே கொண்டு வந்து தருகின்றோம்.
0778380158, 0764719951,
0217223535, 0217223636
M.S.V பாம் டீலேர்ஸ்
கொக்குவில்
(5661)

தென்னிந்திய யாத்திரை
தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரி ஊடான யாத்திரை
எங்கும் இல்லாத அளவு குறைந்த கட்டணமும் அதிகூடிய சலுகைகளும் சேவைகளும்!!!
தென்னிந்திய வட இந்திய யாத்திரையில் 20 வருடத்திற்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் நடத்தப்படுகின்ற யாத்திரை.
ஆரம்பம்: 01.10.2018 நாள்கள்: 12 யாத்திரீகர்: 10
தரிசிக்குமிடங்கள்: திருச்சி உச்சிப்பிள்ளையார், சமயபுரம், ஸ்ரீரெங்கம், பஞ்ச பூதத்தலங்கள், சிதம்பரம், திருவெண்ணாமலை, காளகஸ்திரி, திருவானைகாவல், ஏகாம்பரேஸ்வரர், 9 நவக்கிரக ஆலயங்கள்: திருநள்ளாறு சனிபகவான், ராகுபகவான், கேதுபகவான், சூரியபகவான், சந்திர பகவான், புதன்பகவான், செவ்வாய்பகவான், வியாழபகவான், சுக்கிரபகவான், திருப்பதி, அலமேலு மங்கா, ஆறுபடை முருகன்: திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருப்பரம்குன்றம், திருத்தணி, பழமுதிர்சோலை, இராமேஸ்வரம், மதுரை மீனாட்சி, பஞ்சவடி ஆஞ்சநேயர், மணக்குழவிநாயகர் உட்பட 45க்கு குறையாத ஆலயங்களை தரிசிப்பதுடன் பாண்டிச்சேரி பீச், மரீனா பீச், அப்துல் கலாம் மணிமண்டபம், அண்ணா, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, கருணாநிதி ஆகியோரின் நினைவிடங்களையும் காணலாம். பெற்றுக்கொள்ளும் ரூபாயுக்கு எமது சேவைகள்: இருவழி விமான ரிக்கற், மூன்று வேளை உணவு, குடிநீர், 2பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரன்கொமட், குளியலறை இணைந்த அறைகள், யாத்திரை முழுவதும் A/C வாகன வசதி, யாழ். கொழும்பு யாழ். வாகன வசதி செய்து தரப்படும். விபரங்களை கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.
கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் / ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11
077 768 0102, 077 736 2154
E.mail: sriranganathan2601@gmail.com
sriranganathan1944@gmail.com
Facebook: sridevisriranganathanthuraiappa
(C-3848)

வடக்கின் வேலையில்லாப் பிரச்சினைக்கு வந்தது தீர்வு!
வடக்கின் 1வது & ஒரேயொரு
Emerald Isle Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
அரச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்
License No. 2268
மத்திய கிழக்கு நாடுகள், ஐரோப்பிய நாடுகள், மேற்கத்தேய நாடுகள் பலவற்றிலும்
ஹொட்டேல் | கட்டடவாக்கம் | பொறியியல் | விற்பனை
தொழில்நுட்பம் | சுகாதாரம் | மருத்துவம் | தொழிலாளர்கள்
என பலதுறைப்பட்ட வேலைவாய்ப்புக்களையும் பெற்றுத்தரும்
கொழும்பில் 5 நட்சத்திர விருது வென்ற இலங்கையின் ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம்
இப்போது யாழ்ப்பாணத்தில்...
வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்தை மட்டும் செலுத்தி, விரும்பிய நாட்டுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்லுங்கள்!
குறிப்பு: பணி ஒப்பந்தக் கடிதம் பெற்ற பின்னரே கட்டணம் அறவிடப்படும்
077 55 46 956 077 00 38 215, 0114 063 144, 021 222 00 11
இல. 221 - 1/1. மின்சார நிலைய வீதி. (2ம் ஒழுங்கை). யாழ்ப்பாணம்
(C-3833) www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.